# சிந்திப்போருக்கு சில முத்துக்கள்

## Themes for the diligent

நிக்கொலா யாக்கூப் கப்ரில்

வெளியீடு

India

# பொருளடக்கம்


முன்னுரை 5

**முதல் விரிவுரை**

முதல் பகுதி : தவ்றாத் மற்றும் இன்ஜீலின் மெய்மை 9

இரண்டாம் பகுதி : அறிவின் நிருபணம் 19

மூன்றாவது பகுதி : சரித்திரச் சான்று 25

நான்காவது பகுதி : புதைபொருள் மற்றம் தொல்பொருள் ஆராய்ச்சி தரும் சாட்சி 30

**இரண்டாவது விரிவுரை**

குர்ஆன் தவ்றாத்தையும் இன்ஜீலையும் ரத்துச் செய்து நிராகரித்துவிட்டதா? 41

**மூன்றாவது விரிவுரை**

எல்லாரும் பாவஞ்செய்துள்ளனர். தீர்க்கதரிசிகளுங் கூடத்தான்! 46

**நான்காவது விரிவுரை**

முதல் பகுதி : கிறிஸ்துவின் சிலுவையில் கடவுளின் நோக்கம் 78

இரண்டாவது : இம்மாபெரும் பரிசுத்த பணிக்கு கிறிஸ்து ஒருவரே தகுதி பெற்றிருந்தார் 85

மூன்றாவது பகுதி : கிறிஸ்துவானவர் மனரம்மியமாகச் சிலுவையை ஏற்றுக் கொண்டாரா? 87

நான்காவது பகுதி : கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது குறித்து – குர் ஆன் 100

ஐந்தாவது பகுதி : கிறிஸ்துவின் சிலுவையும் – சரித்திரமும் 111

**ஐந்தாவது விரிவுரை**

கிறிஸ்துவின் பாவமின்மையும், தெய்வீகமும், குமாரத்துவமும் 119

**ஆறாவது விரிவுரை**

குர்ஆனில் மற்றெல்லா மனிதரைவிட கிறிஸ்துவின் மேன்மையும் சிறப்பும் 129

**ஏழாவது விரிவுரை**

ஏகத்துவத்தில் திரித்துவம் அல்லது திரியேகத்துவம் 140

**எட்டாவது வரிவுரை**

பாரக்லீட்டும் முஹம்மதுவும் 155

முடிவுரை 162

## முன்னுரை :

அநேக முஸ்லீம் சகோதரர்களுடன் கலந்துரையாடுவதில் அதிக நேரத்தை பயன்படுத்தியுள்ளேன்: அவர்களில் பெரும்பாலானோரும் கற்றுத் தேர்ந்த மேதைகளும், சிந்தனையாளர்களுமே. அவர்களுடன் உண்மை உள்ளத்துடனும், யதார்த்தமாகவும், நட்பு ரீதியிலும், மார்க்க சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்ட காலங்களிலெல்லாம் ஒவ்வொரு கருத்தையும் துருவித் துருவி ஆராய்ந்து அதன் எல்லையைக் கண்டுபிடிக்க முயன்றதால், நாம் ஏன் இவற்றின் சாராம்சத்தையெல்லாம் புத்தக வடிவில் அமைக்கக் கூடாது என்ற எண்ணம் தோன்ற, அதன் முடிவே உங்கள் கரங்களில் இந்நூல். சத்தியத்தைத் தங்கள் இலக்காகவும், பாரபட்சமற்ற ஆய்வினைத் தங்கள் வழியாகவும் கொண்டிருக்கும் சான்றோருக்கெல்லாம் எனது விருப்பத்தின் முயற்சியால் விளைந்த இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். அவர்கள் இவ்வாறு சத்தியத்தைத் தெளிவாக அறியும் வேளையில், தங்களுக்குரிய வைகளையெல்லாம் விற்று அந்தப் புதையலைப் பெற்று அதனை ஆனந்த நம்பிக்கையுடன் அணைத்துக்கொள்வர். இவர்களே பேறு பெற்றவர்களும், முன்னேறுகிறவர்களுமாவர்!

திறந்த உள்ளம் கொண்ட எந்த முஸ்லீம் சகோதரரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும், எந்தப் பண்புடைய ஆராய்ச்சியாளரும் நிராகரிக்க முடியாத அணுகு முறைகளையும், ஆய்வுப் பாதைகளையும் எனது விளக்கங்களில் கடைபிடித்துள்ளேன். இயன்ற வரையில் குர் ஆனிலிருந்தும், பாரம்பரியங்களிலிருந்தும்,

சரித்திரத்திலிருந்தும் உண்மைகளை நிரூபிக்க முயன்றுள்ளேன்; ஏனெனில், இவற்றையே ஒரு முஸ்லீம் எதிர்ப்புத் தெரிவிக்காமல் வரவேற்கின்றார். "ஊக்கமான, நேர்மையான ஆராய்ச்சிகளின் மகளே சத்தியம்" என்பதாக அறிஞர்கள் இலக்கணம் தந்துள்ளனர். சத்தியத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளோர் விவாதங்களில் சுற்றித் திரிவதை வீணென்று கருதமாட்டார்கள். அங்ஙனமே சத்தியத்தை ஏற்கனவே கண்டடைந்தோரும் தர்க்கத்தை வெறுக்க மாட்டார்கள்; ஏனெனில், அது அவர்கள் கண்டறிந்த உண்மையை உறுதிப்படுத்துமே அன்றிப் பொய்யாக்கி விடாது. ஆதலால், எனது அன்புக்குரிய முஸ்லீம் சகோதரரே, தூய்மையான ஆவியுடன் நான் கொடுக்கும் இவ்வழைப்பினை ஏற்று கலந்துரையாடும் பொழுது நீங்களும் பயனடைந்து, நம்மைக் கேட்போரும் நன்மை அடைந்து, இறுதியில் நீரே இந்தச் சொற்போரில் வெற்றிவாகைச் சூடிடுவீர். குர்ஆன் மற்றும் பாரம்பரியங்களிலிருந்து நான் மேற்கோள் காட்டும்பொழுது, அவற்றையெல்லாம் முழு உண்மையாக நான் ஏற்றுக் கொண்டதாகாது; ஆனால் நீங்கள் அவற்றை முழு உண்மையெனக் கருதுவதால் உங்கள் முன்னிலையில் வைக்கிறேன். தர்க்க சாஸ்திர விதிகளும், நீதிமன்ற வழக்காடு முறைகளும் இம்முறைக்கு அனுமதியளிக்கின்றன. மேலும், எனக்கு வேறொரு வழியும் இல்லை. தவ்றாத் மற்றும் நற்செய்தி நூல்களடங்கிய என்னுடைய பரிசுத்த வேதாகம வாக்குகள் மாறிப்போனவை, தவறு, குறைவுள்ளவைகள் என்பதாக முஸ்லீம் நண்பர்கள் கருதுவதால், வேறு வழியின்றி அவர்களது வேதநூல், பாரம்பரியங்கள், சரித்திரங்களிலிருந்து நான் எடுத்துரைக்க வேண்டியதாகிறது. மற்றபடி ஒவ்வொரு ஆய்வுக்கும்

ஏராளமான பைபிள் வசனங்களை ஆதாரமாகத் தருவதின் மூலம் எல்லாச் சந்தேகத்தையும், தடுமாற்றத்தையும், அச்சத்தையும் நீக்கி உண்மையைப் பகலோன் ஒளியென உறுதிப்படுத்திடலாம்.

என் அன்புமிகு முஸ்லீம் சகோதரரே, நம்முடைய மதக் குறிக்கோள்களும், நோக்கங்களும், ஒன்றுதானே? நீங்களும் சிருஷ்டி கர்த்தாவான மெய் தெய்வத்தை உண்மையுடன் வழிபட்டு, இறுதியில் நித்திய நல்வாழ்வு பெற நாடுகின்றீர்கள்; நாங்களும் அவற்றையன்றி, வேறொன்றினையும் ஆசிக்கவில்லை. ஆனால், இந்த இலக்கையடைய நாம் மேற்கொண்டுள்ள வழிமுறைகளில் வித்தியாசம் உண்டு. அதாவது, இலக்கு ஒன்று, வழிவேறு! இவ்வாறிருக்க, இதனை நாம் பணிவுடனும், பரிசுத்தத்துடனும், விருப்பு வெறுப்பின்றி ஆராய முனைவதால் என்ன நஷ்டம் ஏற்படும்? சத்தியம் ஒன்றுதான்; அதனைப் பிரிக்க முடியாது; எனவே நாம் ஏகமனதுடன் சமாதானமாக நடந்து, நம்மைப் படைத்தோனின் பிரியத்தையும், முடிவில் பேரின்பப் பெருவாழ்வையும் பெற்றிடுவோமாக, யதார்த்தமான தூய உள்ளன்பே இந்தச் செய்தியினையும், ஏனையச் செய்திகளையும் தொகுத்து வழங்க எம்மை உந்திற்று. நீங்களும் எங்களுடன் சேர்ந்து வழிநடக்கவும். கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நாங்கள் பெற்றுள்ள இரட்சிப்பில் நீங்களும் பங்கு கொண்டு, நித்திய ஜீவனைப் பெற்றானந்திக்க வேண்டுமென விழைகிறோம். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றக் கோட்பாட்டின் அடிப்படையில் நாங்கள் பெற்றுள்ள சந்தோஷம், சமாதானம், இரட்சிப்பை எங்கள் நண்பர்களாகிய நீங்களும் பெற்றுக் கொள்வதையே விரும்புகிறோம். ஏனெனில், நாங்கள் உங்களை எந்த

விதத்திலும் பகைக்க விரும்பவில்லை. எனவே, நீவிர் எம்மீது எவ்வித ஐயப்பாடும், அச்சமும் கொள்ளற்க. இறைவன் உங்களை நேரான, சீரானப் பாதையில் நடத்துவாராக.

இவ்வித முக்கியமான ஆய்வுகளிளெல்லாம், மேற்பூச்சாக ஒப்பந்தம் செய்தல் அல்லது ஆமோதித்தல் நன்கன்று: ஆதலால், என்னுடைய சொற்கள் சிலவைக் கடினமாகத் தோன்றுமெனில், அவை நமது நண்பர்களின் நம்பிக்கைகளை எள்ளி நகையாடவோ அல்லது மனதைப் புண்படுத்துவதற்கோ அல்லாமல் சத்தியத்தைக் கண்டறியும் முயற்சியின் விளைவுதான் என்பதாக எனது முஸ்லீம் சகோதரர் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்வாராக. அடுத்தவரின், நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகச் சத்தியத்தை மறைப்பதும், மாற்றுவதும், எனது திட நம்பிக்கைகளைக் கைவிடுவதும் என்னால் இயலாது. இவ்வாறே, அவரும் நடந்து கொள்ள நான் எதிர்பார்க்கிறேன். ஆகிலும் சத்தியம் சத்தியமாக வெளிப்படவேண்டும். நாம் விவாதிப்பதற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு, எப்படியும் எனது மதிப்பிற்குரிய வாசகரை குறை சொல்லவும், குற்றஞ்சாட்டவும் ஏளனம் பண்ணவும், எள்ளி நகையாடவும் மாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன். இந்நூலின் செய்திக்கு உறுதுணையாக ஏற்கனவே உள்ள வெளியீடுகளைப் பயன்படுத்தியுள்ளேன். நன்மையும் ஒற்றுமையுமே வேண்டுமெனவும், தீமையும் பிரிவினையும் வேண்டாமெனவும் கடவுளிடம் பிரார்த்திக்கிறேன். உண்மையுடனும், உத்தம இருதயத்துடனும் ஏறெடுக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டு, அவற்றிற்கு நன்மையான பதிலளிக்கிற தேவனே எனக்குப் போதுமானவரும், சகாயஞ் செய்கிற வருமாயிருக்கிறார்..

முதல் விரிவுரை

முதல் பகுதி

# தவ்றாத் மற்றும் இன்ஜிலின் மெய்மை

பரிசுத்த வேதாகமமே (துவ்றாத், ஜபூர், இன்ஜீல்) கிறிஸ்தவத்தின் அடிக்கல்லும், மூலைக்கல்லும், தலைக்கல்லுமாக எந்தவொரு மதப்பிரச்சினைக்கும் தீர்வுகாணும் இறையமுதாக இருக்கிறதென நம்புகிறோம். திருமறையே நீதியுள்ள நியாயாதிபதியாக சத்தியத்தை வெளிப்படுத்தவும், பொய்யையும், மாய்மாலத்தையும் ஒழிக்கவும், எந்த நடுவர் மன்றத்திலும் உண்மையுள்ள சாட்சியாக விளங்குகின்றது. எனவே, என்னுடைய செய்திகளில் அதற்கு முதலிடம் அளித்து, அதன் உண்மைத் தத்துவத்தை நம்பிக்கையூட்டும் வாதத்தினாலோ அல்லது தர்க்க ரீதியாகவோ நிரூபித்து விட்டால், பின்னர் எந்தவிதக் கருத்துப் பேதமோ, வாக்குவாதமோ தோன்றுங்கால், அதனுடைய நீதியான நியாயத் தீர்ப்பிற்கும், முடிவிற்கும் ஒப்புக் கொடுத்து, அது

அளிக்கும் வெளிச்சத்திலே தைரியமாக நடக்கலாம். அது மெய்யாகவே, நம் எல்லாருடைய கால்களுக்குத் தீபமும், பாதைக்கு ஒளியுமாய் இருக்கின்றது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

குர்ஆனில் உள்ள கீழ்க்கண்டவசனம் இவ்விதமாக கூறுகிறது.

نَزَّلَ عَلَيْكَ ٱلْكِتَـٰبَ

بِٱلْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَأَنزَلَ ٱلتَّوْرَىٰةَ وَٱلْإِنجِيلَ

(நபியே! முற்றிலும்) உண்மையை கொண்டுள்ள இவ்வேதத்தை உம்மீது அவன்தான் இறக்கி வைத்தான். (இது) இதற்கு முன்னுள்ள வேதங்கள் யாவற்றையும் உறுதிப்படுத்துகின்றது. தவ்றாத்யையும், இன்ஜீலையும் அவனே அருட் செய்தான். ஸூரா (3:3)

قُلْ يَـٰٓأَهْلَ ٱلْكِتَـٰبِ لَسْتُمْ عَلَىٰ شَىْءٍ حَتَّىٰ تُقِيمُوا۟ ٱلتَّوْرَىٰةَ

وَٱلْإِنجِيلَ وَمَآ أُنزِلَ إِلَيْكُم مِّن رَّبِّكُمْ وَلَيَزِيدَنَّ

كَثِيرًا مِّنْهُم مَّآ أُنزِلَ إِلَيْكَ مِن رَّبِّكَ طُغْيَـٰنًا وَكُفْرًا

فَلَا تَأْسَ عَلَى ٱلْقَوْمِ ٱلْكَـٰفِرِينَ

வேதத்தையுடையவர்களே! நீங்கள் தவ்றாத்தையும் இன்ஜீலையும், உங்கள் இறைவனிடமிருந்து, உங்களுக்கு அருளப்பெற்ற மற்றவைகளையும் மெய்யாகவே நீங்கள் கடைபிடித்தொழுகும் வரை நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களல்லர் ஸூரா (5:68)

“எனினும் நபியே! இவர்கள் உம்மைத் தங்களுக்குத் தீர்ப்பு கூறுவோராக, எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள்? இவர்களிடத்திலோ, தவ்றாத் என்னும் வேதம் இருக்கின்றது அதனுள் அல்லாஹ்வுடைய கட்டளையும் இருக்கின்றது” ஸூரா (5:43)

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ ءَامِنُوا۟ بِٱللَّهِ وَرَسُولِهِۦ وَٱلْكِتَٰبِ
ٱلَّذِى نَزَّلَ عَلَىٰ رَسُولِهِۦ وَٱلْكِتَٰبِ ٱلَّذِىٓ أَنزَلَ
مِن قَبْلُ ۚ وَمَن يَكْفُرْ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ
وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ فَقَدْ ضَلَّ ضَلَٰلًۢا بَعِيدًا

“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவன் தன்னுடைய (இத்) தூதர் மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் விசுவாசியுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கின்றானோ அவன், நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில்தான் செல்கின்றான் ஸூரா (4:136)

தவ்றாத்தையும், இன்ஜீலையும் குர்ஆனைப் போலவே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறு ஏற்றுக்கொள்ளாத அவிசுவாசியான முஸ்லீமை இவ்வசனம் நியாயத் தீர்ப்புக்குட்படுத்துகிறது என்று முடிவு செய்கிறோம்.

“நிச்சயமாக நாங்கள் இந்த குர்ஆனையும் நம்பமாட்டோம்; இதற்கு முன்னுள்ள வேதத்தையும் நம்பமாட்டோம்” என்று இந்த நிராகரிப்போர் கூறுகின்றனர். (34:31) இதிலிருந்து மெக்காவைச் சேர்ந்த ஜனங்களும் தவ்றாத்தையும், இன்ஜீலையும் நன்றாக அறிந்திருந்தனர் என்பது புலப்படுகிறது.

நபியே! அவர்களை நோக்கி, “நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இவ்விரண்டையும் விட நேரான வழியை அறிவிக்க கூடிய மிக்க மேலானதொரு வேதத்தை அல்லாஹ்விடமிருந்து நீங்கள் கொண்டு வாருங்கள்; நானும் அதனை பின்பற்றலாம்” என்று நீர் கூறும் ஸுரா (28:49).

“ஐயமின்றி, முஹம்மது தவ்றாத், “இன்ஜீலின் மெய்மையையும், அவை குர்ஆனுக்குச் சமம் என்றும் இங்கே தெளிவாக அறிக்கை செய்கின்றார்.

وَلْيَحْكُمْ أَهْلُ الْإِنجِيلِ بِمَا أَنزَلَ اللَّهُ فِيهِ ۚ وَمَن لَّمْ يَحْكُم
بِمَا أَنزَلَ اللَّهُ فَأُولَٰئِكَ هُمُ الْفَاسِقُونَ

ஆகவே இன்ஜீலையுடையவர்கள் அதில் அல்லாஹ் அறிவித்திருக்கும் கட்டளைகளின் பிரகாரமே தீர்ப்பளிக்கவும். எவர்கள், அல்லாஹ் அருளிய கட்டளைகளின் பிரகாரம் தீர்ப்பளிக்க வில்லையோ அவர்கள் நிச்சயமாகப் பாவிகள் தாம்! ஸுரா (5:47).

இதற்குமேல் வேறென்ன வேண்டும்! இதிலிருந்தும் இதற்கடுத்த வசனத்திலிருந்தும் தவ்றாத்தும் இன்ஜீலும் தேவனுடைய தீர்மானங்களையும், தீர்ப்புகளையும் உள்ளடக்கியுள்ளன: இவற்றைப் பின்பற்றுவோருக்கு வேறொரு நடுவர் அல்லது வழிகாட்டி அவசியமில்லை என்பதும் தெளிவாகிறது.

மேற்கண்ட வாக்கியங்களெல்லாம் ஐயந்திரிபர அர்த்தத்தை வெளிப்படுத்துவதால், அவற்றிற்கு வேறொரு வியாக்கியானமும்,விளக்கமும் தேவையில்லை என்பது தெளிவாகிறது. இவ்வசனங்களின் சாராம்சமெல்லாம் அன்பும், அறிவும், ஆற்றலும், ஞானமும் நிறைந்த கடவுளால் உலகத்துக்கு ஒளியாகவும், வழியாகவும் பைபிள் அருளப்பட்டிருக்கின்றது என்பது உறுதிப்படுகின்றது. இதன் கட்டளைகள் கவனத்துடன் கைக் கொள்ளப்பட வேண்டும். எவ்விதத்திலும் மீறப்படக்கூடாது. இவற்றை ஒரு முஸ்லீம் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டு கீழ்ப்படியாவிட்டால் அவன் வழிவிலகித் தூரச் செல்கிறவனாவான்.மேலும், மெக்காவின் மக்களுக்கு குர்ஆனைப் போலவே பைபிளிலும் பரிச்சையும் இருந்தது.

எனது அன்பிற்குரிய முஸ்லீம் சகோதரரே! இவ்வளவு தெளிவான வசனங்கள் இருக்க, பைபிளை நீர் எவ்விதம் ஒதுக்கி வைத்துவிட்டு, அது தேவையில்லை என்று முடிவிற்கு வரலாம். நியாயத்தீர்ப்பின் (கியாமத்) நாளிலே, புஸ்தகங்கள் திறக்கப்பட்டு, உம்முடைய கிரியைகள்

நிறுத்தப்பார்க்கப்படும் வேளையிலே கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமற் போன இந்தக் குற்றங்களுக்கு நீர் என்ன நியாயம் கூறமுடியும்? எவ்வாறு நீர் உம்மையே மன்னித்துக் கொள்ள முடியும்? அன்று நீர் இறைவனுக்கு என்ன கணக்குக் கொடுப்பீர்? உமது சாக்குப்போக்குகளை அவர் அங்கீகரிப்பாரா? ஆகையால், நீர் மீண்டும் ஒரு முறை இந்த புஸ்தகத்தை (துவ்றாத் மற்றும் இன்ஜீலை) கவனத்துடன் படிக்கவும்,அதை விசுவாசித்து அதின் கற்பனைகளுக்கு இணங்கி நடப்பீராக என்று உமக்கு அன்புடன் ஆலோசனைக் கூறுகிறோம். இவ்வாறு செய்வதின் மூலம் தேவனின் நீதியும், இரக்கமும் எவ்வாறு பொருந்திப் போகின்றன அல்லது ஒன்றையொன்றை சந்திக்கின்றன என்கின்ற தான ஒரே மெய்வழியைக் கண்டுகொள்வீர்.

இப்பாரெங்கிலும், பரலோகம் முழுவதிலும் மிக முக்கியமான மகிமையான நபர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே என்பதைச் துலாம்பரமாக அறிந்துகொண்டு, அவர் மூலமாக அவர் அருளுகின்ற பாவமன்னிப்பையும், விடுதலையையும், சுத்திகரிப்பையும், நித்திய மகிழ்ச்சியையும் பெற்றுக் கொள்வீராக எனப் பரிந்துரைக்கிறோம்.

இதற்குப் பிரதியுத்தரமாக ஒரு முஸ்லீம் சகோதரன் பின்வரும் மறுப்பைக் கூறலாம்: “நீர் மேற்கோள் காண்பித்த குர்ஆனின் வசனங்களும், அவற்றிலிருந்து புறப்படும் உம்முடைய முடிவுகளும் மிகவும் சரிதான். நான் அவற்றை

எதிர்க்கவில்லை. ஆகிலும் நான் நம்பவேண்டும். அவற்றிற்குக் கீழ்ப்படியவேண்டும் என்று நீர் கூறுகிறதும். குர்ஆன் அங்கீகரிக்கிறதுமான தவ்றாத் மற்றும் இன்ஜீல் மாற்றப்பட்டுத் திருத்தப்பட்டுக் கெடுக்கப்பட்டுப் போயுள்ளதே! நீர் இன்று கையில் ஏந்திச் செல்லும் திருமறையானது குர்ஆன் சாட்சிப் பகர்ந்த தூய்மையான, கெடுக்கப்படாத பரிசுத்த வேதாகமம் அன்று. இக்காரணத்தை முன்னிட்டே முஸ்லீம்கள் இவற்றை வாசிப்பதைத் தவிர்த்து, அவற்றின் சட்டதிட்டங்களை நிராகரிக்கின்றனர். நிச்சயமாகவே, இதினிமித்தம் நீர் அவர்களைக் குற்றஞ்சாட்டாதிருப்பீராக! இவ்விதம் மறுப்போரையும் அவருக்கு ஆதரவு அளிப்போரையும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நான் கூறுவதைத் தயவு செய்து பொறுமையுடன் கேட்டு, நியாயமாகத் தீர்ப்பளிக்கும்படி கெஞ்சுகிறேன்.

மேற்கூறின குர்ஆனின் திருவாக்குகளிலிருந்து தவ்றாத்தும், இன்ஜீலும் முஹம்மதுவின் காலத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமான, பூரணமான நூலாக இருந்தது. என்று சொல்லுவீர். இல்லாவிடில் அவர் அதற்கு அநுகூலமாகச் சாட்சி பகர்ந்து அதன் கட்டளைகளைக் கைக்கொள்ளுமாறுப் பரிந்துரைத்திருக்க மாட்டார். அப்படியானால் அவரது நாட்களிலாவது, முந்தைய காலத்திலாவது வேதாகமம் பிழையற்றதும், புரட்டப்படாததும். சம்பூரணமும், தூய்மையுமான வேதநூலாக இருந்தது என்பதை ஒத்துக் கொள்ளுகின்றீர்.

நீவிர் அனுமானிக்கின்றபடி, அவற்றைக்

களங்கப்படுத்தவும், எந்த மனிதக் கரமும் கெடுக்கவும் முடியுமோ என்பதற்கு அநுசரணையாக மேலும் சில குர்ஆனின் வசனங்களைத் தருகிறேன் கேளும்.

நபியே! வஹி மூலம் உமக்கு அறிவிக்கப்பெற்ற உம் இறைவனின் வேதத்தை நீர் ஓதி வருவீராக! அவனுடைய கட்டளைகளை எவராலும் மாற்றிவிட முடியாது ஸூரா (18:27)

அல்லஹ்வுடைய வாக்குகளை எவராலும் மாற்ற முடியாது... ஸூரா (6:34)

அவனுடைய வாக்குகளை மாற்றுவோன் எவனுமில்லை ஸூரா (6:115).

அல்லாஹ்வுடைய வாக்குறுதிகளில் எவ்வித மாறுதலுமிருக்காது ... ஸூரா (10:64)

அல்லாஹ்வுடைய திட்டத்தில் நீர் எவ்வித மாறுதலையும் காணமாட்டீர் ... ஸூரா (48 :23).

இதற்கு முன்னும் சரி, இதற்கு பின்னும் சரி இதனை பொய் அணுக முடியாது. மிக்க புகழுக்குரியவனும் ஞானமுடையவனுமால் இது இறக்கப்பட்டது. ஸூரா (41:42).

நிச்சயமாக நாம் தாம் இவ்வேதத்தை உம்மீது இறக்கிவைத்தோம். ஆகவே அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு நிச்சயமாக நாமே அதனை இரட்சித்துக் கொள்வோம் (15:9)

இக்குறிப்புகளிலிருந்து இறைவாக்குகளை எவரும்

மாற்ற முடியாதெனவும், கடவுளே அதை அனுப்பி, மலைப்பாறை 15:9-ல்குறிப்பிடப்பட்டுள்ள ஞாபகப் புத்தகம் குர்ஆனைக் குறிப்பிடுவதாகும் என்று வாதிடுவீரானால், அது தவ்றாத்தையும் இன்ஜீலையும் குறிக்கும் என்றும் நான் அறுதியிட்டு உறுதி கூறுவேன். ஏனெனில்,

وَمَآ أَرْسَلْنَا قَبْلَكَ إِلَّا رِجَالًا نُّوحِيٓ إِلَيْهِمْ فَسْـَٔلُوٓا أَهْلَ الذِّكْرِ إِن كُنتُمْ لَا تَعْلَمُونَ

இதனை நீங்கள் அறியாவிட்டால், முன்னுள்ள வேதத்தையுடையோரையேனும் கேட்டறிந்து கொள்ளுங்கள் *ஸூரா* (21:7) இது திட்டவட்டமாகத் தவ்றாத்தையும் இன்ஜீலையுமே குறிப்பிடுகின்றது. உண்மையில் நோக்குமிடத்து இவ்வசனம் தவ்றாத்தையே "குர்ஆன்" என்று குறிப்பிடுகிறது. அதே அதிகாரத்தில் நன்மைத் தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடிய வேதத்தையே மூஸாவுக்கும், ஆரோனுக்கும் நாம் கொடுத்திருந்தோம்.அது பிரகாசமாகவும், பயபக்தியுடையோருக்கு நல்லுபதேசமாகவும் இருக்கிறது ஸூரா (21:48) மேலும் இது மிக்க பாக்கியமுடைய நல்லுபதேசமாகும். இதனை நாமே இறக்கிவைத்தோம். இதனை நீங்கள் நிராகரித்துவிட்டீர்கள் ஸூரா (21:50) எனவும் கூறுகிறது.

ஆதலால் குர்ஆனுக்குப் பொருந்தும் உண்மையெல்லாம் தவ்றாத்துக்கும், இன்ஜீலுக்கும் பொருந்தும் என அறிகிறோம். குர்ஆன் எந்த அளவிற்குக் கடவுளின் திருவாய்மொழியென்று நம்பப்படுகிறதோ, அவ்விதமாகவே தவ்றாத்தும் இன்ஜீலும் தேவன் அருளியத் திருவாக்குகள் என்று குர்ஆனே சாட்சிப் பகர்கின்றது.

குர்ஆனில் கடவுள் கூறினதைத் தவிர எவ்வித மாற்றமும், களங்கமும், கூட்டல், குறைத்தலும் இல்லையென்று நம்பும்பொழுது, தவ்றாத்திலும், இன்ஜீலிலும் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக நீவிர் அனுமானிப்பது ஏனோ? இப்படியிருக்க ஒன்று உண்மையானால் மற்றதும் உண்மைதான்: ஒன்றில் தவறு ஏற்பட்டால் மற்றதும் தவறானது என்றே பொருள்படும். தேவனுடைய வார்த்தையாகிய தவ்றாத். இன்ஜீலில் மனிதர்கள் தங்கள் கைவரிசையைக் காண்பித்துக் களங்கப்படுத்தி –யிருப்பார்களென்றால் அதேபோன்று குர்ஆனிலும் மாசு கற்பித்துவிட்டனர் என்றால் பொய்யாகாது, என்று அல்ஜலாலன் அவர்களே அறிவுறுத்துகின்றார்.

திருக்குர்ஆன் எவ்விதத்திலும் களங்கப்படுத்தப்படவில்லை என்றுநீவிர் அங்கீகரிக்கிறபடியால், பைபிளும் எவ்விதத்திலும் யாராலும் கெடுக்கப்படமுடியாது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதன் தூய்மையையும், உண்மையையும் நீவிர் எளிதில் கண்டு பிடித்து அதன் போதனைகளைக் கடைபிடித்து, அது காண்பிக்கும் மெய் ஒளி, வழி, உண்மை, வாழ்வாகிய ஆகியக் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்வீராக. மதினா ஸூரத்துகளில் சொல்லப்பட்டுள்ள சீர்கேடுகள், சில யூதர்களை குறிப்பிடுமேயல்லாமல் வேறல்ல. இன்ஜீல் இக்குற்றச்சாட்டினின்று முற்றிலும் விலகி நிற்கிறது. சில யூதர்கள் சில வாக்கியங்களை அர்த்தப்படுத்தி விளக்கிக் கூறினவைகள் முஹம்மது நபியின் விருப்பங்களுக்கு முரணாக இருந்தபடியால் அவர்கள் வேதத்தைக் கெடுத்துவிட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது அல் ராசி மற்றும் அல்பைதாவி ஆகியோரால் ‘கெடுக்கப்பட்ட பகுதிகள்’ என்ற வியாக்கியான நூலில் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றன. இல்லாவிடில் மதினா ஸூரத்துக்கள், மெக்கா ஸூரத்துக்களைப் பொய்யாக்கிவிடும்.

இரண்டாம் பகுதி

# அறிவின் நிரூபணம்

நுண்ணறிவு படைத்த எவரும் கடவுள் தம்முடைய நித்தியமான சர்வ வல்லமையின்படியே வானங்களையும், உலகங்களையும் அவைகளிலுள்ள சகல ஜீவராசிகளையும் சிருஷ்டித்தார் என்று அறிந்திருக்கிறார். மேலும் கடவுள் சர்வ ஞானமுள்ளவர் என்பதற்கு எடுத்துக்காட்டாக, அவருடைய கைவேலைகளெல்லாம் நிறைவுள்ளதாகவும், இயற்கை விதிகளெல்லாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மாறாமல் இருக்கின்றன. இங்ஙனம் கடவுள் வல்லமையும், ஞானமும் நிறைந்தவராக இருப்பதால், தாம் புத்திநுட்பத்துடன் படைத்த மனிதர்களுக்கும், தமக்கும் உள்ள உறவை நிலைப்படுத்தவும், அவர்கள் தங்களுக்குள் பரஸ்பரமாக நடந்து கொள்ள வேண்டிய வழிகளை நெறிப்படுத்தவும் ஏற்றதொரு பிரமாணத்தை அல்லது சட்டதிட்டத்தை வகுக்காமல் இருக்க முடியாது. அவற்றிற்குக் கீழ்ப்படிவதினாலும் அல்லது அவற்றை மீறுவதினாலும் ஏற்படும் பலாபலன்களை அவர்களுக்குத் தெரிவிக்கவும் வேண்டும். இல்லாவிடில் குழப்பமும் கலவரமுமே எங்கும் நிலவும் என்பது வெள்ளிடைமலை. பெரிய மீன்கள் சிறிய மீன்களை விழுங்கி விடுவதுபோல தடியெடுத்தவனெல்லாம் தண்டற்காரன் ஆகிவிடுவான். முடிவில் மனிதரெல்லாரும் கயவர்களும், கொடியவர்களுமாகி மிருகத்திலும் கேடு

கெட்டவர்களாகித் தங்கள் இனத்தையே அழித்து ஒழித்துவிடுவர். நன்மைக்கும் தீமைக்கும், நீதிக்கும் அநீதிக்கும் வேறுபாடு இருக்காது. இப்படிப்பட்ட சூழ்நிலையை எல்லா வல்லமையும், எல்லா ஞானமும் உள்ள ஒருவர் ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. இவ்வுண்மையையே தவ்றாத்தும், இன்ஜீலும் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இந்த இறை நீதியையும், தெய்வீக வழியையும் இவைப் போதிக்காவிட்டால், இவை வேறு என்னதான் செய்கின்றன? வேறு எந்தப் பழமையான (அல்லது புதுமையான) நூலாகிலும் தவ்றாத் இன்ஜீலைப் போல இந்தத் தேவையைச் சந்திக்கின்றதா? இல்லவே இல்லை!

இவ்வாறு, சர்வ சக்தியும், ஞானமுமுள்ள கடவுள் மனிதருக்கு வழிகாட்டியாக அனுப்பியுள்ள சாசன நூலை எவரும் கெடுக்காதபடி பாதுகாத்து வைக்காமல் இருக்க மாட்டாரோ! சந்தேகத்திற்கிடமின்றி எவ்விதகளங்கமும் மாசும், திசை திருப்பமும் கூட்டல் கழிவுமின்றிப் பாதுகாத்து வைத்திருக்கின்றார். அதில் சிறுதவறு நுழைவதற்கிடமிருப்பினும் அது கண்டனத்திற்குள்ளாவதுடன், சர்வ குழப்பத்தையும் ஏற்படுத்திவிடுமல்லவா? பலபோலியான தெய்வீக நூல்களும் தோன்றுவதற்கு இடமளிக்குமல்லவா! இது தெய்வத்திற்குத் தூரமாவதாக! ஏனென்றால் பல நூற்றாண்டுகளாக பைபிளைப் பரிசுத்தமாகப் பாதுகாத்து வந்திருக்கிறார் தேவன். மனிதவர்க்கத்திற்கே, கலங்கரை விளக்கமாக அன்றும் இன்றும் என்றும் செயல்பட்டு வருகிறது. திசைமாறுவோரை நேர்வழிப்படுத்துகிறது.

தவ்றாத் மற்றும் இன்ஜீலின் தூய்மையும், கட்டுக் கோப்பும் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பதற்கான பல நியாயவாதங்களை எடுத்துரைத்தோம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பரிசுத்த வேதாகமத்தைக் கெடுப்பதற்கு, மிகப்பெரியதொரு அந்தரங்கமான சதித்திட்டம் தேவைப்படும். ஆனால் அப்படிப்பட்ட சதியாலோசனையும் அதை நிறைவேற்றுவதற்காக ஒற்றுமையும், ஒருமைப்பாடும் கிடைப்பது அரிதிலும் அரிது. ஏனென்றால், முதலாவது முஹம்மதுவின் தோற்றத்திற்கு முன்பாகவே கிறிஸ்தவ மதமும், யூத மதமும் கிழக்கிலும் மேற்கிலும் ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும் பரவிவிட்டன. சீரியா, துருக்கி, எகிப்து, எத்தியோப்பியா, இந்தியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இவ்விரு சாராரும் பரம்பியிருந்தனர். பழைய புதிய ஏற்பாடுகளடங்கிய முழுபைபிளும், அதிலும் முக்கியமாக நற் செய்தி நூல்களடங்கிய இன்ஜீலும் எபிரேய மற்றும் கிரேக்க–மூல பாஷைகளிலிருந்து அரபிக்,அர்மேனியன், அம்ஹரிக் என்ற எத்தியோப்பிய மொழியிலும் கோப்டிக், இலத்தீன் மற்றும்பல மொழிகளிலும் மொழி பெயர்ப்புப் பெற்றுவிட்டன. இவற்றுள் திருத்தங்கள், மாற்றங்கள் செய்ய வேண்டுமானால் இந்தப் பல்வேறு நாட்டினர்களும், மொழியினர்களும் ஓரிடத்தில் ஒன்றுகூடி, ஒருமனதுடன் ஒத்துழைத்து இந்தச் சாத்தானின் சதிசர்ப்பனையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்! இது நடக்கக் கூடிய காரியமா? மேலும், கிறிஸ்தவத்தில் பலப்பிரிவுகள் தோன்றிவிட்டதாலும், அவர்களும் ஒவ்வொரு பிரிவினரும் தாங்களே உத்தம, வைதீக, வேதாகமக்

கிறிஸ்தவர்களென்று போட்டாபோட்டிப் போட்டுக் கொண்டிருக்கிற வேளையில் வேதாகமத்தில் திருத்தங்களையும் இடைச்சொருகல்களையும் நுழைப்பது என்ன அவ்வளவு எளிதான காரியமா? முற்றிலும் முடியாத ஒன்றல்லவா?


ஆதலால், பைபிளில் திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன, என்றக்குற்றச்சாட்டு நிச்சயமாகவே அர்த்தமற்றது. ஆதாரமற்றது! முஸ்லீம் அன்பர்களின் கூற்றை நிரூபிக்க வேண்டுமானால் எந்த வேத வாக்கியங்கள் அல்லது அத்தியாயங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும்; அவ்வாறு மாற்றப்படுவதற்கு முன்னர் அவை எவ்வாறு இருந்தன என்றும் மாற்றங்களுக்கான காரணங்களும், நோக்கங்களும் என்ன என்றும் தெளிவாகக் கூறவேண்டும். இதற்குச் சரியான பதிலளிக்க முடியாவிட்டால் இந்த வீண் புகார் புரளியும் அவதூறான ஒன்றாகுமல்லவா? எந்தவொறு நாணயமான அறிஞரும் ஆராய்ச்சியாளரும், தான் கொண்டுவரும் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் அளித்திடல் வேண்டும் என்பது தொன்று தொட்ட மரபு, இஸ்லாம் உதயமாவதற்கு முன்பே கிறிஸ்தவர்களாக்கப்பட்ட அரபு வம்சத்தினர்களைச் சேர்ந்த ஹிமியர், கெசான்ராபியா, நிஜ்ரன், ஹீரா மற்றும் பலப் பழங்குடியினர்களின் நன்மைக்காக இன்ஜீல் ஏற்கனவே அரபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இல்லாவிடில் அவர்களால் எப்படிக் கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ள முடியும்? அல்அகனி (கீதங்கள்) என்ற நூலில் இந்த

உண்மைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில், முஹமதுவின் காலத்தில் வாழ்ந்தவரும் மிகப் பிரபல அரபிக் எழுத்தாளருமாகிய வாரக்கா இபின் நவ்ஃபால் இயற்றிய அல்அகனி என்ற தம்முடைய நூலில் அரபிக் மொழியிலிருந்த இன்ஜீலிலிருந்து தமக்குப் பிரியமான பலப்பகுதிகளையும் இணைத்துள்ளார். இதற்குப் பிறகு இன்ஜீல் மாற்றப்பட்டிருக்குமானால், மாற்றம் எதுவுமில்லாத பூர்வீக இன்ஜீல் முஸ்லீம்கள் வசம் இருந்ததல்லவா? அதனைக் கொண்டு வேதக்காரர்களைப் பொய்யராக்கியிருக்கலாமல்லவா?

யூதர்களைப் பொறுத்தவரையில், தங்களது வேத நூல்களைப் பங்கமின்றிப் பாதுகாக்கிறவர்கள் என்பது பழமொழியல்லவா? ஒவ்வொரு புஸ்தகத்திலும் எத்தனை சொற்களும், எழுத்துக்களும் உள்ளன என்பதை எண்ணி வைத்து அந்த நூலில் குறிப்பிட்டிருந்தனர். என்பது யாவரும் அறிந்த உண்மை. இவ்வாறு, பரிசுத்த வேதாகமம், ஆதி முதல் அந்தம் வரை இருந்த வண்ணமாகவே இருக்கிறது. மாற்றங்கள் செய்யப்படவில்லை. செய்யப்படவும் முடியாது என்பதற்குப் போதுமான வரலாற்று மற்றும் பொது அறிவுப் பகுத்தறிவுச் சான்றுகளைத் தாராளமாக வழங்கியுள்ளோம்.

எண்ணிறந்த புஸ்தகங்கள் எழுதப்படுவதால், சத்தியம் மறைந்து போகவோ அல்லது மங்கிப்போகவோ இடமளிக்க வேண்டாம். ஒவ்வொன்றையும் சரிவர ஆராய்ந்து, விசாரித்து, ஒப்பிட்டுச் சத்தியமே ஜெயம் பெறச் செய்வீர். அப்பொழுதுதான் நீங்களும் உண்மைப் பாதையில்

முன்னேற்றங் காணலாம். கீழ்த்தரமான மாம்ச இச்சைகளையும் தன்னலமானக் காரியங்களையும் கண்டித்துணர்த்தி, தீமை நிறைந்த திருக்குள்ள மனித இருதயங்களை மாற்றித் தேவனின் பரிசுத்தமான பண்புகளைப் பெற வாஞ்சையளிக்கும் நூல் எது? நாகரீகமான நற்பண்புள்ள வாழ்க்கையினை இலட்சியமாகக் கொள்ளவும், சாதி சமயப் பாகுபாடுகளைப் பாராமல் இறைவனிடத்தில் முழு அன்பு பாராட்டி, ஆதாமின் சந்ததியாராகிய மனுமக்கள் அனைவரையும் உடன் பிறப்புகளாகக் கருதி அன்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்கிறதான அரும்பெரும் போதனைகளைத் தரும் ஒரே நூல் விவிலியமே.



மூன்றாம் பகுதி

# சரித்திரச் சான்று

திருமறையாம் பைபிள் (துவ்றாத், இன்ஜீல்) ஆதிமுதலாகவே இருக்கிறது. அதன் உண்மை, சர்ச்சைக்கு அப்பாற்பட்டது. உலகில் வேறு எந்த நூலுக்கும் இவ்விதமான சாட்சி கிடையாது. இந்த உண்மையை சந்தேகத்திற்கிடமின்றி புலப்படுத்துவதற்காகச் சாட்சிகளில் மிகச் சிறந்த, நேர்மையானச் சரித்திர சான்றுகளுக்கு அபயமிடுகிறேன்.

பரிசுத்த வேதாகமத்தில் எண்ணிறந்த தீர்க்கதரிசனங்கள் அல்லது முன்னறிவிப்புகள் உள்ளன. அவற்றுள் பெரும்பான்மையானவை சொன்னபடியே நிறைவேறிவிட்டன. மீதமுள்ளவையும் தகுந்த காலத்தில் நிறைவேறுமென்பது உறுதி. சில அரசர்களின் எழுச்சியும், மற்றவர்களின் வீழ்ச்சியும், பல பெரிய பட்டணங்கள் தரைமட்ட மாக்கப்படுமென்றும், ஆணவம் நிறைந்த அநேக ஜாதிகள் தாங்கள் கனவிலும் நினைத்திராவிட்டாலும் இல்பொருளாவார்கள்; அவர்களுடைய மாட்சிமையும், மகிமையும் மறக்கப்பட்டுப்போகும்: அவர்கள் இருந்த இடமும் இனி அறியப்படாமற்போகுமென்றெனத் தீர்க்கதரிசன வாக்குகள் எழுத்தளவில் நிறைவேறியுள்ளன.

உதாரணமாக, அசீரியர்கள் தலைநகரமாகிய நினிவே பட்டணம் நிர்மூலமாக்கப்படுமென்ற நாகூம் தீர்க்கனின் திருவாக்கு எழுத்தளவில் நிறைவேறியுள்ளது. இம்மாபெரும் நகரத்திற்கு அறுபது மைல் சுற்றளவும், நூறடி உயரமும் கொண்ட மதிற் சுவரும் அதில் இருநூறடி உயரத்திற்கு எழும்பும் ஆயிரத்து ஐந்நூறு காவற்கோபுரங்களும் இருந்ததென அறிகிறோம்.

கல்தேயரின் தலைநகரமாகிய பாபிலோன் தன் சர்வ மகிமையிலும், சுபிட்சத்தின் உச்சக்கட்டத்திலும் இருக்கின்ற வேளையில், அது தகர்க்கப்பட்டு, பாழாய்ப்போகும், அது இருந்த இடத்தில் புல்தானும் முளைக்காது: நரிகளுக்கும் ஆந்தைகளுக்கும் புகலிடமாகுமென்றெல்லாம் ஏசாயாவும், எரேமியாவும் தீர்க்க தரிசனம் உரைத்தனர், அவர்கள் முன்னுரைத்த நாளிலிருந்து 160 ஆண்டுகளுக்குள்ளாக அக்காலத்து மக்கள் திடுக்கிடும் வண்ணமாக, பாபிலோன் பட்டணம் நிர்மூலமாக்கப்பட்டு அழிந்தே போயிற்று! அதன் அழிவின் விவரங்களைச் சரித்திர ஆசிரியர்களாகிய ஹிரோடொட்ஸும், செனஃ போனும் விவரிக்கும்பொழுது தீர்க்கதரிசிகளிடம் கேட்டுப்படித்தார்களோ என்று ஆச்சரியப்படும் விதத்தில் அமைந்துள்ளது.

அங்ஙனமே, தீருப் பட்டணத்தின் அழிவைக் குறித்து முன்னுரைத்த எசேக்கியேல் தீர்க்கனின் எழுத்துக்களுக்கும், சரித்திர ஆசிரியர்களின் புள்ளி விவரங்களுக்கும் மிகுந்த ஒற்றுமை காணப்படுகின்றது. எசேக்கியேல் 26:8-ல் நேபுகாத்நேச்சார் தீருப்பட்டணத்தை அழிப்பான். அநேக

ஜாதிகள் அதற்கு விரோதமாக எழும்புவார்களென்று 3-ம் வசனத்தில் தேவமனுஷன் முன்னுரைக்கின்றான். 4-ம் வசனத்தில் அது வறண்டு போனக் கற்பாறையாகும் என்றும், 5-ம் வசனத்தில் மீன்பிடிப்பவர்கள் தங்கள் வலைகளை அங்கே விரித்து காயவைப்பார்களென்றும் வசனம் 12-ல் அப்பட்டணத்தில் மீதமானவையெல்லாம் கடலுக்குள் எறியப்படுமென்றும் தீர்க்கன் உரைக்கின்றான். அது இனி ஒருக்காலும் திரும்பக் கட்டப்படுவதில்லை என்று 14-ஆம் வசனத்திலும்; அதின் அழிவும் மறைவும் நிச்சயமாகவே நேரிடுமென்று 21-ஆம் வசனமும் முன்னறிவிக்கின்றது.

எசேக்கியேல் முன்னறிவித்த மூன்று ஆண்டுகளுக்கும் பின்னர், பாபிலோனின் அரசன் தீருப்பட்டணத்தை பதின் மூன்று ஆண்டுகள் முற்றுகையிட்டு (கி.மு.585-573) அதனைத் தன் நிபந்தனைப்படி சரணடையச் செய்தான். முடிவில் அவன் அந்த நகரத்தின் மதிற்சுவர்களில் திறப்புண்டாக்கி, அவன் படைகள் வெள்ளம்போல் உள்ளே பிரவேசித்தபொழுது, அதன் குடிமக்களெல்லாரும் கடல் மார்க்கமாக அரைமைல் தூரத்திற்கு அப்பாலிருந்த தீவிற்குத் தப்பி ஓடிவிட்டார்கள், என்று தெரிய வந்தது. அப்பொழுது எசேக்கியேல் 26:8-இல் கூறப்பட்டபடியே பட்டணம் முழுவதையும் இடித்துத் தரைமட்ட மாக்கினான்.

சிறிது காலங்கழித்து இந்த இடிபாடுகளின் நடுவிலிருந்து புதிதாகக் கட்டப்பட்ட தீருப்பட்டணத்திற்கு விரோதமாக மகா அலெக்ஸாண்டர் படையெடுத்து வந்தான்.

அறுபது மீட்டர் அகலமுள்ள சுரங்கப்பாதை வெட்டி அந்நகரத்திற்குள் பிரவேசித்தான். எசேக்கியேல் 26:3,12 இல் கூறப்பட்டுள்ளபடியே அதனை மடங்கடித்து. அது உலர்ந்துபோன கற்பாறை நிலமாகும்படி அழித்துப் போட்டான். இவ்வாறு வேதாகமத் தீர்க்கதரிசனங்களெல்லாம் எழுத்தளவில் நிறைவேறி இருக்கின்றன.

மகா அலெக்ஸாண்டரின் பயங்கரமான நாசவேலைகளுடன் தீருப்பட்டணத்தின் சரித்திரம் முடியவில்லை. அதன்பின்னர் கி.மு.314-இல் அந்திகோனேயும், கி.மு. 285-247-இல் டோலமியா ஃபிலடெல்பியஸும் அதனை முற்றிலுமாக அழித்து, அதன் கடல் வாணிபச் சக்தியை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டனர். இறுதியில் கி.பி. 1321இல் முஸ்லீம்கள் அந்நகரத்தின் மிச்ச மீதிப் பகுதியையும் கட்டாந்தரையாக்கி விட்டனர். இபின்பத்தாது என்ற அரபு யாத்திரீகர் வருணிக்கின்ற பிரகாரம் அது ஒரு பழமொழியாகவும் பழிச்சொல்லாகவும் மாறிவிடுமளவிற்குப் பட்டணத்தின் அழிவு பூரணமாகிவிட்டது. இவ்விதமாக எசேக்கியேலின் தீர்க்க தரிசனங்களும் குறிப்பாக எசேக்கியேல் 26:14 லும், நிறைவேறி விட்டது எத்தனை ஆச்சரியம்.

இதனை எழுதுகின்ற வேளையில் எசேக்கியேல் தன் கண்களை ஏறெடுத்துத் தீருப்பட்டணம் எவ்வளவுச் சீரும் சிறப்புமாக இருக்கிறதைக் கண்டான். அவனதுத் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கேட்டிருந்தோர் அவை அவனது மனப்பிரமையே அல்லாமல் வேறல்ல என்று

சொல்லியிருப்பர். அந்தப் பட்டணத்தின் செல்வச் செழிப்பையும் படைபலத்தையும் பார்த்து அதிசயித்தோர் எசேக்கியேலுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ வென்று சொல்லியிருப்பர். மனித ஞானத்தின்படி பார்க்கிற வேளையில், எசேக்கியேலின் இறைவாக்குக்குப் பின்னர் ஏழு ஆண்டுகளுக்குள் அப்பட்டணம் நாசமாக்கப்பட்டதென்றால், அது எழுபத்தைந்து கோடி வாய்ப்புகளில் ஒன்றுதான் என்கின்றனர். ஆகிலும் அவனுரைத்த தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொரு அம்சத்திலும் நுட்பமாக நிறைவேறி இருக்கின்றது.

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதென்னவென்றால் தீருவே, நான் உனக்கு விரோதமாக வருகிறேன். சமுத்திரம் தன் அலைகளை எழும்பி வரப்பண்ணுகிற விதமாய் நான் அநேகம் ஜாதிகளை உனக்கு விரோதமாக எழும்பி வரப் பண்ணுவேன். அவர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப்போடுவார்கள். நான் அதின் மண்ணும் அதில் இராதபடிக்கு விளக்கிப்போட்டு, அதை வெறும் பாறையாக்கிவிடுவேன். (எசேக்கியேல் 26:3,4)

நான்காவது பகுதி

# புதைபொருள் மற்றும் தொல் பொருள் ஆராய்ச்சி தரும் சாட்சி

சரித்திரம் கூறும் சாட்சிகளுக்குச் சவால் ஏற்படினும், புதைபொருள் மற்றும் தொல்பொருள் கூறும் சாட்சியினை எவரும் மறுக்க இயலாது.

வேத நூல்கள் எப்பொழுதுமே குறை கண்டுபிடிப்போரின் கண்டனத்திற்கு, அஞ்ஞானிகள் மற்றும் நாஸ்திகர்களின் தாக்குதலுக்கும் இலக்காகி வந்திருக்கின்றன. ஏனெனில் அவை அவர்களுடைய சுயமாம்ச இச்சைகளுக்கும், கபட வேடங்களுக்கும், நச்சுத் தத்துவங்களுக்கும், கள்ளப் போதனைகளுக்கும் எதிரிடையாகவே இருக்கின்றன. எனவே, தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு, எழுதப்பட்டிருக்கும் வேத உண்மைகளுக்கு மாசு கற்பிக்கும் நோக்கத்துடன் நாஸ்தீகர்கள் பலரும் பாலஸ்தீனா, பாபிலோன், அசீரியா மற்றும் எகிப்து முதலான நாடுகளில் கிடைக்கும் தொல்பொருள் சாட்சிகளைத் தேடி அலைய ஆரம்பித்தனர். புதைபொருள் மற்றும் தொல்பொருள் சாட்சிகளைக்

கொண்டு வேதாகமத்தைப் பொய்யாக்கவும் அல்லது வேதாகமம் சம்பந்தமில்லாத வாசகங்களும், மூட நம்பிக்கைகளும், ஐதீகங்களும் கொண்ட ஒரு கலப்பட வேலை என்று நிரூபிக்க முற்பட்டனர். ஆனால் தேவனோ அவர்களுடைய எண்ணங்களையும் நோக்கங்களையும் முறியடித்தார். அவர்களுடைய நம்பிக்கைகள் குறிதவறி வீணாயின. அவர்கள் பொய்யென்று நிரூபிக்கத் தேடினதெல்லாம் மெய்யென்று பட்டப்பகல் வெளிச்சம் போலாயிற்று. அநேக சந்தர்ப்பங்களில் அஞ்ஞானிகளால் தோற்றுவிக்கப்பட்டக் கல்வெட்டுகளும் வேறு பலச் சான்றுகளும் வேதாகமத்தின் வாக்கியங்களெல்லாம் சத்தியம் எனவும் சரித்திர கோர்வையும் உண்மையுடையது எனவும் அவர்களே கண்டுபிடித்தனர். நாத்திகர்களில் பலர் ஆத்திகர்களாகிவிட்டனர்!

தவ்றாத்தும், இன்ஜீலும் தங்களுடைய குர்ஆனில் அடிப்படைப் போதனைகளுக்கு எதிரிடையாக இருப்பதைக் கண்டு கொண்டவுடன், நமது முஸ்லீம் அன்பர்கள் பைபிள் திருத்தப்பட்டது. கெடுக்கப்பட்டது; தவறுகளும், ஊழல்களும் நுழைந்துவிட்டன என்ற குற்றச்சாட்டைக் கொண்டுவந்து தங்களது மக்கள் அவற்றை படிப்பதையே பாவமென்று, தடைசெய்து விட்டனர். இச்சந்தர்ப்பத்தில், புதைபொருள் மற்றும் தொல்பொருள் ஆய்வுகளின் உண்மையாவது முஸ்லீம் சகோதரரின் தப்பெண்ணங்களை மாற்றக் கூடுமோ என்று ஆசிக்கிறேன்.

இரண்டு காரணங்களை முன்னிட்டு நம்பிக்கையில்லாதோர் மற்றும் நாஸ்திகர்களும்

வேதாகமத்தின் உண்மைகளைக் கேள்விகேட்கவும் குறைகூறவும் முற்பட்டுள்ளனர். முதலாவதாக, எழுத்துக்கள் அல்லது எழுது முறை அக்காலத்தில் தோன்றவில்லை. அதாவது பாலஸ்தீனா நாட்டிலே கி.பி.1040-க்கு முன்னர் இஸ்ரவேல் மக்கள் பாபிலோனியச் சிறையிருப்பிற்குள் செல்லும் முன்பு அவர்களுக்கு எழுதத் தெரியாது எனவும், அல்லது அப்படித் தெரிந்திருந்தாலும் அதை மிகவும் குறைவாகவேப் பயன்படுத்தி வந்தனர் என்று கூறுகின்றனர். ஆதலால், மோசேயோ அல்லது ஏனைய ஆசிரியர்களோ எவ்விதமாக எழுதியிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை கிளப்புகின்றனர்.

இரண்டாவதாக, அக்காலத்தியச் சரித்திர ஆசிரியர்கள் கூறுவதைவிட மக்களின் கலாச்சார, பொருளாதார வளர்ச்சி அதிகமாய் இருந்ததாக தவ்றாத் கூறுகின்றது. ஆனால் சமீபத்தியக் கண்டுபிடிப்புகள் அவர்களுடைய முடிவுகளைப் பொய்யாக்கிவிட்டன! எகிப்து, பாபிலோன், அசீரியா ஆகிய நாடுகளின் நாகரீகங்கள் வேதாகம விளக்கங்களின்படியே வளர்ச்சிப் பெற்று இருந்தன என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. சனகரிப், திக்லாத்பிலேசர், மற்றும் நேபுகாத்நேச்சார் ஆகியோரின் சாதனைகள் மற்றும் அவர்களது, வாழ்க்கை முறைகள் எல்லாம் அவர்களுடைய நடபடிகளின் புஸ்தகங்களில் குறித்து வைக்கப்பட்டிருக்கிறபடியே வேதாகமமும் விளம்புகின்றது என கண்டுபிடித்துள்ளனர். இவ்வாராய்ச்சியின் பலனாக ஏசாயா, எரேமியா மற்றும் மோசே பயன்படுத்தின எழுத்துக்கள் அல்லது அட்சரங்கள்

நமக்குக் கிடைத்துள்ளன. இவ்வாறு, கண்டுபிடிக்கப்பட்ட கல்லுகளே கர்த்தருக்குச் சாட்சிப் பகர்கின்றன. மேலும்,இவற்றின் வாயிலாக எழுத்துப்படிவமும், இலக்கண –இலக்கியமும் சுமார் கி.மு. 2234–ல் இருந்தே . அதாவது ஆபிரகாம், மோசேயின் காலத்துக்கு முன்பிருந்தே வளர்ச்சி பெற்றிருந்தது என்பது தெளிவாகிறது.

இந்தத் கண்டுபிடிப்புகளெல்லாம் தவ்றாத்தின் விளக்கங்களுக்கு இசைவாகவே இருக்கின்றன என்பதை உங்களுக்குக்காண்பிக்கவிரும்புகிறேன்.

இப்பொழுது பிரிட்டிஷ் மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற அசீரிய நாட்டு ஆதிமூலக் கல்வெட்டுகளில் காணப்படும் சிருஷ்டிப்பின் விவரங்கள் தவ்றாத்தின் இவ்வரலாற்றை வியக்கத்தகும் முறையில் உறுதிப்படுத்துகின்றன. சிற்சில இடங்களில் புராணக் கதைகள் சேர்க்கப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. அவற்றை அப்படியேப் பெயர்த் தெழுத விழைகிறேன் ஆனால், காலமும், இடமும் தான் தடைகள்! முதலில் தேவன் ஒரு ஜோடி மனிதரைத்தான் ஆணும்,பெண்ணுமாகச் சிருஷ்டித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தேவதூதர்களின் முகங்களைப் போன்ற இருவரையே தேவன் உண்டாக்கினார் என்று அவ்வாசகம் கூறுகிறது. அதே தொல்பொருட்காட்சி நிலையத்தில் இன்னொரு பாபிலோனியத் தூணில் நமது ஆதிப் பெற்றோரும் அவர்கள் நடுவில் ஒரு மரமும் ஏவாளுக்குப் பின்னால் ஒரு சர்ப்பமும் இருக்கின்றக் காட்சிப் பொறிக்கப்பட்டுள்ளது. இது தவ்றாத்தின் முதல் அதிகாரத்திற்கு முற்றிலும் ஒத்திருக்கிறது.

சில ஆண்டுகட்கு முன்புவரை, அவநம்பிக்கையுள்ள அறிஞர்கள் ஜலப்பிரளய வரலாற்றைப் புராணக் கதையெனப் புறக்கணித்து வந்தனர். இது ஆராய்ச்சியாளர்களின் ஆழ்ந்தச் சோதனைக்கு நிற்க முடியாத போலி தஸ்தாவேஜ் என்று எண்ணி இகழ்ந்தனர். ஆனால் தீர்க்கமானப் புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பின்னர் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டனர். ஏனென்றால் அவர்களுடைய தவறுகளை வெளிப்படுத்தி அவர்களைத் தலைகுனிய வைத்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்புகள்! இப்பொழுது பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள அசீரியக் கல்வெட்டுகள் நோவாவின் பேழை கட்டப்பட்ட விதத்தையும், அவற்றுள் சில மனிதர்களும் எல்லா விதமான மிருகங்களும்,பறவைகளும் ஜோடி ஜோடியாகப் பாதுகாக்கப்பட்டன என்பதும் தொடர்ச்சியான பலத்த மழை பல நாட்களாக வெள்ளம்போல் ஊற்றி உலகமுழுவதையும் முழ்கடித்து, அதின்கண் வாழும் மனிதர்கள் மிருகங்கள் மற்றும் உயிரினங்களையும் அழித்துப் போட்டதெனவும் கூறுகின்றன. இவ்வாறு தவ்றாத் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

புவியமைப்புச் சாஸ்திரிகளின் கண்டுபிடிப்புகளிலிருந்து, ஒவ்வொரு கண்டத்திலும் மலைகளின்மேலும் பள்ளத்தாக்குகளிலும், பூமிக்கடியிலும் ஏராளமானக் கடற்படிகங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சிலப் படிகங்கள் குறிப்பிட்ட கடல்களுக்கே உரியவை. மலைச் சிகரங்களுக்கடியில் மச்சங்கள் மற்றும் கடல் பிராணிகள், தாவரங்களின் படிகங்கள் அடுக்கடுக்காகக் காணப்படுகின்றன. இவைகளெல்லாம் பல தொல்பொருட்காட்சி நிலையங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. சமுத்திரங்களின் அடியிலுள்ள இவையெல்லாம் எவ்வாறு மலையுச்சிக்கு சென்றன? இவை அனைத்தும் வேதாகமத்தின் ஜலப்பிரளய உண்மையை நிரூபிக்கின்றன.

அழிந்துபோன நினிவே நகரத்தின் இடிபாடுகளிலிருந்து ஸ்மித் என்ற ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்தக் கற்பலகையில் பாபேல் கோபுரம் கட்டப்பட்டதும், அங்குப் பாஷைக் குழப்பங்கள் ஏற்பட்டு கலவரம் உண்டானதும் (ஆதியாகமம் 11ஆம் அதிகாரத்தில் உள்ளபடியே) விவரிக்கப்பட்டுள்ளன. வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் இறங்கி சோதோம் கொமரா நகரங்களை அழித்து நிர்மூலமாக்கின. விவரம் (ஆதியாகமம் 19:24ல்) பொறிக்கப்பட்டுள்ளது. இவையும் இன்னும் பல கல்வெட்டுகளும் ஆதியாகமம் 14-ம் அதிகாரத்தில் வருகின்ற ஏலாவின் ராஜாவாகிய கெதர்லாகோமேர், சிநேயாரின் ராஜாவாகிய அம்ராப்பேல் முதலானோரின் சரித்திரத்தையும், போர் நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்துகின்றன.

மோசே தம்முடைய பிரபந்தங்களை எழுதின காலத்தில் எகிப்தில் திராட்சரசம் புழக்கத்தில் இல்லை என்று புளூட்டார்க், ஹெரோடோட்டஸ் ஆகிய வரலாற்று ஆசிரியர்கள் கூறிவந்தனர். ஆனால் சமீபகாலக் கண்டுபிடிப்புகள் இவர்களைப் பொய்யராக்கி நியாயப்பிராமாணம் வழங்கின மோசேயை உண்மையுள்ளவராக்குகின்றன. சில எகிப்தியக் கல்லறைகளில் திராட்சத்தோட்டம் அமைப்பதிலிருந்து திராட்சப் பழங்களை ஆலையில் கொடுத்துத் திராட்சரசத்தை அதற்குரிய பாத்திரங்களில் பாதுகாக்கின்ற முறைகள் வரை சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில புட்டிகளில்(ERB)அதாவது திராட்சரசம் என்று பொறிக்கப்பட்டுள்ளன. யோசேப்பின் நாட்களில் ஏற்பட்ட

கொடிய பஞ்சத்திற்கும் போதுமானச் சான்றுகள் இந்த அழிவுகளிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. (ஆதியாகமம் 41:30) இவை தவ்றாத்தின் வரலாற்றை மேலும் வலுப்படுத்துகின்றன. எகிப்தின் பேரரசன் மகா ராமசேஸ் என்பவன் அந்நிய ஆட்களைக் கொண்டு பித்தோம் மற்றும் ராமசேஸ் பட்டணங்களைக் கட்டினதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இது யாத்திராகமம் 1:11-க்கு ஒத்திருக்கின்றது. தீப்ஸ் என்ற இடத்தில் ஒரு கல்லறையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட குறிப்புகள் இஸ்ரவேல் மக்கள் பொதுப்பணிகளில் அடிமைகளாக ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

பரிசுத்த வேதாகமத்தின் தூய்மைக்கும் மெய்மைக்கும் மவுன சாட்சிகளாக இருப்பவற்றுள் மோவாபியக்கல் எனப்படும் சலவைக் கல்லும் ஒன்றாகும். அகஸ்டஸ் க்ளேய்ன் என்ற ஆசாரியன் இதனைக் கண்டுபிடித்தார். அவர் ஜெர்மனியில் பிறந்து, பாலஸ்தீன நாட்டில் குடிபுகுந்து சுமார் இருபது ஆண்டுகளாக இங்கிலீஷ் சர்ச் மிஷனின் செயலாளராக கெய்ரோவில் பணிபுரிந்து வந்திருக்கிறார். பழங்காலத்தில் மோவாப் தேசம் என்று அழைக்கப்பட்ட டிரான்ஸ் ஜோர்டனில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கி.மு. 890-ல் உருவாக்கப்பட்டது. தற்சமயம் பாரிஸிலுள்ள லோவர் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஃபெனிஷியன் மொழியில் முப்பது வரிகள் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளன. II இராஜாக்கள் 3:4-27-ல் வருகின்ற மோவாபிய அரசனான மிஷாவுக்கும் இஸ்ரவேலில் அரசனாயிருந்த உம்ரிக்கும் மற்றும் ஏதோமியருக்குமிடையில் ஏற்பட்ட யுத்தங்களைப் பற்றி வருணிக்கின்றன. மேலும், வேதாகமத்தில் காணப்படும் அநேக வரலாற்று உண்மைகளை உள்ளவாறே சித்தரிக்கின்றது.

இன்னும் அண்மைகாலத்தில் எருசலேமில் கண்டுபிடிக்கப்பட்ட "சீலோவாம் கல்வெட்டுகள்" II இராஜாக்கள் 20:20லும், II நாளாகமம் 32:30லும், ஏசாயா 22:9,11லும் காணப்படும். வரலாறுகளைத் திட்டவட்டமாய் உறுதிப்படுத்துகிறேன். இதில் எசேக்கியா மன்னன் கீகோன் ஊற்றை மேல்வாயில் அடைத்து, இதைப் பூமிக்கடியில் குழாய்களின் வழியாகத் தாவீதின் நகரத்திற்குக் கொண்டுவந்த விவரமும் அடங்கியுள்ளது.

நினிவேயின் இடிபாடுகளுக்கிடையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு உருளையில் எசேக்கியா எருசலேமில் அரசாண்ட காலத்தில், (கி.மு. 722) அசீரியாவின் மன்னன் சார்கோனுக்கும் அஸ்தோத்தின் அரசன் அஷீரிக்கும் இடையில் நடைபெற்ற போர்க்குறிப்புகள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த உருளை இப்பொழுது லண்டனில் உள்ளது. அசீரியாவின் மன்னன் சனகெரிப் 705 BC எருசலேமை முற்றுகையிட்ட விவரம் இப்பொழுது லண்டனில் வைக்கப்படுள்ள 'அறுகோணத் தூணில்' தெளிவாகப் பதிக்கப்பட்டுள்ளது. இது, II இராஜாக்கள் 18:13-16-ல் கூறப்பட்டுள்ளதற்கு இசைந்திருக்கிறது, ஐரோப்பாவிலுள்ள கீர்த்தி பெற்ற தொல்பொருள் நிலையங்களிலும், நூலகங்களிலும் வைக்கப்பட்டுள்ள எண்ணிறந்தக் கைப்பிரதிகள், வேதாகமத்தின் உண்மைகளை எல்லாம் உயர்த்திப் பிடிக்கின்றன. பெரும்பாலானவை கிரேக்க மொழியிலும் மற்றவை ஏனைய மொழிகளிலும் தோல் சுருள்களில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சில தவ்றாத்தையும் இன்ஜீலையும் முற்றிலும் உள்ளடக்கியிருக்கின்றன. மற்றவை வேதாகமத்தின் பிறபகுதிகளைச் சுமந்து கொண்டிருக்கின்றன. இந்த கைப்பிரதிகளில் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

I. **கோடெக்ஸ் வத்திக்கான்ஸ் :** ஹிஜ்ராவுக்குச் சுமார் 250 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட இக்கையெழுத்துக் பிரதிகள் இப்பொழுதும் ரோமாபுரியுலுள்ள வட்டிக்கன் அரண்மனையில் பாதுகாப்பாக இருக்கிறது.

II. **கோடெக்ஸ் சைனாட்டிக்கஸ் :** ஹிஜ்ராவுக்கு முன்னர் ஏறத்தாழ 200 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டதும், தவ்றாத்தையும் இன்ஜீலையும் உள்ளடக்கியதுமான சீனாய் மலையின் பேரால், நாமம் சூட்டப்பட்டுள்ள இக்கையெழுத்துப் பிரதிகள் இப்பொழுதும் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியத்தில் இருக்கின்றன.

III. **கோடெக்ஸ் அலெக்ஸாண்டிரினஸ் :**இதுவும் பிரிட்டிஷ் மியூசியத்தின் பொக்கிஷச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஹிஜ்ராவுக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட இவை தவ்றாத்தையும் இன்ஜீலையும் உள்ளடக்கியுள்ளது.

IV. **கோடெக்ஸ் எப்பிராயிமஸ் :** ஹிஜ்ாராவுக்கு 150 ஆண்டுகட்கு முன்பாக எழுதப்பட்ட இந்த இன்ஜீல் கையெழுத்துப் பிரதி இப்பொழுது பாரீஸில் உள்ளது.

V. **சவக்கடல் சுருள்கள் :** இந்தச் சான்றுகளுக்கெல்லாம் சான்றாக, 1948-ல் தாமிராஸ் என்ற இடத்தைச்சேர்ந்த முஹம்மது அல் தீப் பதாவி என்பவர் சவக்கடலில் தன்னுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது கண்டுபிடித்த பிரதிகளில் பல உண்மைகள் அடங்கியுள்ளன. ஒரு ஆடு ஒரு மலையின்மீது

ஏறின வேளையில், அதனை விரட்டுவதற்காக ஒரு கல்லை எடுத்து எறிந்திருக்கின்றார். அப்பொழுது ஒரு பானை உடைகின்ற சத்தங் கேட்டு, மெதுவாக அடிமேல் அடிவைத்து அங்கே ஏறிப்பார்த்த வேளையில் சிறிய நுழைவாயில் கொண்ட ஒரு குகை இருப்பதைக் கண்டுபிடித்தார். வெள்ளியும், பொன்னும் நிறைந்த புதையல் தனக்கு கிடைக்குமென்ற நப்பாசையில் மெதுவாக உள்ளே பிரவேசித்துச் சோதனை போட்டார். அவர் கண்டுபிடித்த பொக்கிஷம் அவருக்கு அல்லது அவருடைய சமுதாயத்தினருக்கோ மட்டுமல்லாமல் உலகமனைத்துக்கும் பொக்கிஷமாக திகழ்ந்தது.

பரிசுத்த வேதாகமத்தின் பல்வேறு நூல்களும் இங்கே தோல் சுருள்களில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. கி.மு 700 ஆண்டுகட்கு முன்னர் ஏசாயாவினால் எழுதப்பட்ட தோல்சுருள்களில் வைத்தப்படி இருந்தது. இன்றைக்கு மக்கள் கையிலிருக்கும் வேதாகமப் பகுதிகளுக்கும், இவற்றிற்கும் எந்தவிதமான வித்தியாசமும் வேறுபாடும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. “**சவக்கடல் சுருள்கள்**” என்றழைக்கப்படும் **DEAD SEA SCROLLS** அல்லது கும்ரான் சுருள்கள் பைபிள் கெடுக்கப்பட்டது என்றப் போலிச் சவாலைக் குழிதோண்டி புதைத்து விடுகின்றன.

விலைமதிப்பற்ற இந்தத் திருமறைச் செல்வங்கள் எவ்வாறு பரிசுத்த வேதாகமம் பிழையின்றித் தவறின்றி ஒவ்வொரு முறையும் கைவல்லுநரால் எழுதப்பட்டுள்ளன என்றும்; தேவனுடைய இரகசியங்களையெல்லாம் பாதுகாத்து வரும் கிறிஸ்துவின் சபையானது எவ்வாறு

பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகின்றது என்பதையும் ஐயமின்றி வெளிப்படுத்துகின்றது. இன்றைக்குச் சுமார் 2000 மொழிகளுக்கும் மேலாக விவிலிய நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் இந்த மூலப் பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் எந்தவித விகற்பமும், கருத்துப் பேதமுமின்றி எல்லாம் இசைவினைப்பாக அமைந்துள்ளது. இதனை எப்பொழுதும் யாரும் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்!

## இரண்டாவது விரிவுரை

## குர்ஆன் தவ்றாத்தையும் இன் ஜீலையும் ரத்துச் செய்து நிராகரித்து விட்டதா?

முஸ்லீம் நண்பர்களின் வாக்குவாதம் தோற்றுப் போனவுடன், வேறொரு நொண்டிச் சாக்கை சொல்ல முற்படுகின்றனர். சர்வ ஞானமுள்ள கடவுளின் அநாதித் தீர்மானத்தின்படியே, தவ்றாத்தும் இன்ஜீலும் எல்லா மனிதர்க்கும் திசைமாறா வழிகாட்டியாக இருக்கும்படி அனுப்பப்பட்டுள்ளவை எனவும், அவற்றுள் மாறுதல்களும் திருத்தங்களும் செய்யப்பட்டு கெட்டுப்போய்விட்டதென கூறப்படும் குற்றச்சாட்டு அபத்தமும், கட்டுக்கதையுமாகும் என்று நிரூபித்தவுடன், குர்-ஆன் தவ்றாத்தையும் இன்ஜீலையும் நிராகரித்துவிட்டதென்று முஸ்லீம் நண்பர் கூறுத்துணிகின்றார்! ஆனால், இது முற்றிலும் ஆதாரமற்ற, பயங்கர அவதூறாகும்; ஏனெனில் குர்ஆனே இதனை எள்ளளவும் ஒத்துக் கொள்வதில்லை. இதற்கு மாறாக, எவ்வித ஐயப்பாடுமின்றி எவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய தெளிவான அரபிய மொழியில் தவ்றாத்தும் இன்ஜீலும் இறைவனால் இறக்கிவைக்கப்பட்டதென குர்ஆனின் வசனங்கள் பலவும் பறைசாற்றுகின்றன.

இஸ்ராயீலின் சந்ததிகளே! உங்களுக்கு நான் அளித்திருந்த என்னுடைய கொடையை நீங்கள் நினைத்துப்

பாருங்கள். நீங்கள் என்னிடம் செய்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் (2:40)

இது அவர்களிடமுள்ள தவ்றாத்தை மெய்யாக்கி வைக்கின்ற உண்மையான வேதமாக இருக்கின்றன (2:91)

نَزَّلَ عَلَيْكَ الْكِتَـٰبَ

بِالْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَأَنزَلَ التَّوْرَىٰةَ وَالْإِنجِيلَ

நபியே! முற்றிலும் உண்மையை கொண்டுள்ள இவ்வேதத்தை உம்மீது அவன்தான் இறக்கி வைத்தான். இது இதற்குமுன்னுள்ள வேதங்கள் யாவற்றையும் உறுதிப்படுத்துகின்றது. தவ்றாத்தையும், இன்ஜீலையும் அவனே அருட்செய்தான் (3:3).

உம்மீது இறக்கப்பட்டதையும் உமக்கு முன்னால் இறக்கப்பட்ட வேதங்கள் அனைத்தையும் நிச்சயமாக நம்புவீர்களாக (4:60)

இந்த குர்ஆன் அல்லாஹ்வால் அருளப்பட்டதேயன்றி மற்றெவராலும் பொய்யாக கற்பனை செய்யப்பட்டதன்று. தவிர இது இதற்குமுன்னுள்ள மற்ற வேதங்களை உண்மையாக்கி வைத்து அவைகளிலுள்ளவற்றை விவரித்துக் கூறுவதாகவும் இருக்கிறது (10:37).

முன்னிருந்த நபிமார்களாகிய அவர்களுடைய அடிச்சுவடுகளிலேயே, மர்யமுடைய மகன் ஈஸாவையும்,

நாம் அனுப்பி வைத்தோம். அவர், தன்முன் இருந்த தவ்றாத்தை உண்மையாக்கி வைப்பவராக இருந்தார். அன்றி அவருக்கு இன்ஜீல் என்னும் வேதத்தையும் நாம் அருளினோம். அதில் நேர்வழியும் பிரகாசமும் இருக்கின்றன. அது தன்முன்னுள்ள தவ்றாத்தை உண்மையாக்கி வைக்கின்றது. பயபக்தியுடையோருக்கு அது ஒரு நேர்வழிகாட்டியாகவும் நல்லுபதேசமாகவும் இருக்கின்றது (5:46).

قُلْ يَا أَهْلَ
الْكِتَابِ لَسْتُمْ عَلَىٰ شَيْءٍ حَتَّىٰ تُقِيمُوا التَّوْرَاةَ وَالْإِنجِيلَ
وَمَا أُنزِلَ إِلَيْكُم مِّن رَّبِّكُمْ ۗ وَلَيَزِيدَنَّ كَثِيرًا مِّنْهُم مَّا أُنزِلَ
إِلَيْكَ مِن رَّبِّكَ طُغْيَانًا وَكُفْرًا ۖ فَلَا تَأْسَ عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ

“வேதத்தையுடையவர்களே! நீங்கள் தவ்றாத்தையும், இன்ஜீலையும் உங்கள் இறைவனிடமிருந்து, உங்களுக்கு அருளப்பெற்ற மற்றவைகளையும் மெய்யாகவே நீங்கள் கடைப்பிடித்தொழுகும் வரை, நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களல்லர் ” (5:68).

“நாணயமும், விவேகமும் உள்ள எவரும் தாம் கூறும் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு ஆயிரம் (போதுமான) சான்றுகள் இருந்தாலன்றி இத்தொழிலில் ஈடுபடமாட்டார்” ஆனால், சில முஸ்லீம் சகோதரர்கள் முன்யோசனையின்றி இவ்வாறு குற்றஞ்சாட்டி, ஆழந்தெரியாமல் காலை வைத்து விடுகின்றனர். உமதுக் “குற்றச்சாட்டுகளுக்குத் தக்கச்

சான்றுகளைக் கொண்டு வாரும்" என்றால். "பிந்தினது முந்தினதை ரத்துச் செய்து விட்டது" என்ற வெறுமையான, சாரமற்ற பிரதியுத்தரம் தருகின்றனர். வேறு வார்த்தைகளில் கூறினால், தவ்றாத்துக்கும், இன்ஜீலுக்கும் பிறகு குர்ஆன் வந்ததால், அது முந்தினதை மேற்கொண்டுவிட்டது என்கின்றனர்! தவ்றாத்தும் இன்ஜீலும் குர்ஆனில் உள்ளடக்கமாயிருப்பதால் அவை தேவையில்லை என்றும் வேறுசிலர் கூறுகின்றனர். இவையெல்லாம் பலகீனமான "சாட்சிகள்" ஆகும். இவற்றிற்குத் தகுந்த பதிலளிப்பதற்குக் குர்ஆனே என் உதவிக்கு வந்து விட்டது. முன்பு கூறப்பட்ட ஏழு வாக்கியங்களுடன், மேலும் பல வசனங்களை குர்ஆனிலிருந்தே பெயர்த்தெடுத்துத் தவ்றாத்தும், இன்ஜீலும் சத்தியமான நிறைவேற்றப்பட வேண்டிய இறைவாக்குகளே என்று மெய்ப்பிக்கலாம். அவற்றை நிராகரிப்பதற்கல்ல. "நிறைவேற்றுவதற்கே குர்ஆன் அளிக்கப்பட்டது" என்று குர்ஆன் வலியுறுத்திக் கூறுகின்றது.

நிராகரிப்புப் பணி உண்மையாயிருக்குமானால், யூதர்களும், கிறிஸ்தவர்களும் தவ்றாத், இன்ஜீலின் கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று முஹம்மது நபி வற்புறுத்தியிருக்கமாட்டார். முஸ்லீம்களே, இவற்றையெல்லாம் நம்புங்கள் என்றும் கூறியிருக்கமாட்டார். குர்ஆனுக்குள் தவ்றாத்தும் இன்ஜீலும் அடக்கமாயிருக்கிறதென்ற அனுமானத்தையும் குர்ஆன் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால்,அதற்கு மாறாக, குர்ஆன் நேர் எதிரிடையான அறிவிப்பையே தருகின்றது.

இறைவனின் கட்டளை பிரகாரம் “ருஹுல் அமீன் என்னும் ஜிப்ரயீல் இதனை உமது இருதயத்தில் இறக்கி வைத்தார். மனிதர்களுக்கு நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகத் தெளிவான அரபி மொழியில் இறக்கி வைத்தார். இதைப்பற்றிய முன்னறிக்கை நிச்சயமாக முன்னுள்ள வேதங்களிலும் இருக்கிறது (26:193-196) இவ்வசனத்தின் கடைசி வார்த்தைகளின் மூலம் குர்ஆன் தவ்றாத்திலும் இன்ஜீலிலும் அடக்கமாயிருக்கின்றது இது என்ன விந்தை!

மிகச் சிறப்பாக நோக்குமிடத்து தவ்றாத்துக்கும் இன்ஜீலுக்கும் சமமாகத்தான் குர்ஆன் தன்னைப் பற்றிப் பேசுகின்றது. “இதற்கு முன் மூஸாவுக்கு கொடுக்கப்பட்டதையும் அவர்களின் முன்னோர்கள் நிராகரிக்கவில்லையா? அந்தத் தவ்றாத்தும், இந்தக் குர்ஆனும் இரண்டும் ஒன்றுக்கொன்று உதவிசெய்து கொள்ளும் (வரலாறுகள் 28:48) இவ்வாறு எண்ணிறந்த சந்தர்ப்பங்களில் வேதாகமத்தின் உண்மைக்கும் போதனைக்கும் செவிமடுக்குமாறு குர்ஆன் கட்டளையிடுகிறது. மேலும், அவை அந்நிய மொழிகளிலிருந்தபடியால், அவற்றைப் புரிந்து கொள்வதற்கு அநுகூலமாகக் குர்ஆன் வழங்கப்பட்டது. குர்ஆனைப் போலவே தவ்றாத்தும் இன்ஜீலும் தேவ ஆவியானவரால் அருளப்பட்டதென்று குர்ஆன் ஆமோதிக்கிறது. இதற்கு முன்னர், மூஸாவுடைய வேதம் (ஜனங்களுக்கு) வழிகாட்டியாகவும் அருளாகவும் இருந்தது. இதுவோ, (அதனை) உண்மைப்படுத்தும் வேதமாக(த் தெளிவான) அரபி மொழியில் இருக்கின்றது (46:12).

## மூன்றாவது விரிவுரை

# எல்லாரும் பாவஞ் செய்துள்ளனர்; தீர்க்கதரிசிகளும் கூடத்தான்!

தேவன் மனிதனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தூய்மையும், களங்கமுமற்றவனாகவும், மகிழ்ச்சி நிறைந்த ஏதேன்தோட்டத்தை அவன் வாசம்பண்ணும் இல்லமாகவும் படைத்திருந்தார். ஆகிலும்,அவன் தன் ஆண்டவனின் வார்த்தையை மீறினவனாக விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தான்; அதினால் எல்லாவற்றையும் இழந்தான். ஆதாமை மனுக்குலத்தின் பிரதான பிரதிநிதியாக இருந்தபடியால், அவனுடைய மீறுதல் தேவன் அவனுடன் செய்திருந்த உடன்படிக்கையை உடைத்து விட்டதாகும்.அதன் விளைவாக அன்று முதல் இன்றுவரை ஆதாமின் சந்ததியார் எல்லாக் கஷ்டங்களையும் மிகுந்த விசனத்துடன் அனுபவித்து வருகின்றனர். ஆதாம் சோதனைக்கு இடமளித்துப் பாவத்தில் வீழ்ந்தான். மனிதர்களாகிய நாம் ஆதாமின் தலைமுறைகளானபடியால் பரம்பரை விதிகளின்படி, நாமும் சோதனைகளில் விழுந்து விடக்கூடிய எல்லா பலவீனங்களோடும், தன்மைகளோடும் காணப்படுகிறோம். இவ்வாறிருப்பினும்,அவன் செய்த

பாவத்தின் பொருட்டு நாம் தண்டிக்கப்படவில்லை; ஆனால் தேவனுக்குப் பிரியமில்லையென்று அறிந்தும் நாமும் பாவஞ்செய்கிறபடியால் நாம் தண்டிக்கப்படுகிறோம். அவனைப் போலவே நாமும் பிரத்தியட்சமான பாவங்களுக்காளாகிறோம். பின்வரும் அறிக்கை அதனை உறுதிப்படுத்துகின்றது, ஆதாம் விழுந்தான். அதுபோல அவன் சந்ததியாரும் விழுந்தனர்; "ஆதாம் மறதியாக மரத்தின் பழத்தை புசித்தான். இவ்வாறு அவனது சந்ததியாரும் மறந்து போய்ப் பாவஞ்செய்கின்றனர்"; இவ்வாறு ஆதாமின் சந்ததியாரும் மரபு வழியாகப் பாவஞ்செய்கின்றனர் என்ற முதுமொழி சொல் உண்மையாயிற்று. இதனை கூறின **(Tarmathi)** தார்மதியும் ஏனையோரும் மெய்த்தத்துவத்தையே எடுத்துரைத்துள்ளனர். ஆதாமின் தலைமை ஸ்தானத்தையும் அவனது பாவம் அனைவரையும் பற்றிப்பிடித்துவிட்டதையும் எல்லா முஸ்லீம் மேதைகளும் சந்தேகத்திற்கிடமில்லாமல் யதார்த்தமான உண்மையாக ஏற்றுக் கொள்கின்றனர்.

இதனைக் குறித்து விளக்கமாகத் தமது நூலில் 305-ம் பக்கத்தில் ஷேக் முஹியத்தின் இப்ன் எல் அரபி என்பவர் எழுதியுள்ளார். கள்ளங்கபடற்ற நிலையில் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாம் அவனுடைய கர்த்தாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை என்றால், அவனுடைய வழிவழியாகத் தோன்றின அவனுடையச் சந்ததியினர் இன்னும் எவ்வளவு பலவீனரும் உள்ளவர்களாக இருப்பர்? எனவேதான் எல்லாரும் பாவஞ் செய்து தேவனுடைய மகிமையையும் இரக்கத்தையும் இழந்து போனார்கள். சரித்திரம், அநுபவம் ஆகிய இவ்விரண்டும் மனிதனின்

இருதயம் கேடுபாடு நிறைந்ததென்றும், இந்தப் பொல்லாத நமது இருதயங்களே பாவஞ்செய்ய நம்மைத் தூண்டுகின்றன என்பதற்கு அத்தாட்சியாக நிச்சயமாக மனிதனுடைய மனம் பாவம் செய்யும்படி தூண்டக்கூடியதாகவே இருக்கின்றது (12:53) என்று இவ்வசனம் தெளிவாக கூறுகின்றது. தனது ஆசை இச்சைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்புகள் கிடைத்தவுடன், சிருஷ்டி கர்த்தராகிய தேவன் தடைகளைப் போடாவிட்டால், தனது இஷ்டம்போல் அவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகிறது. பாவமும் துன்மார்க்கமும் தடைசெய்யப்பட்டுள்ளன என்றறிந்தும் நாம் நமது மனச்சாட்சியை மழுக்கிக் கொண்டு, அதனையும் மீறி விலக்கப்பட்ட, வேண்டாத செயல்களையே செய்கிறோம். குடிபோதையும் வெறியும் தனக்கும் தன் குடும்பத்திற்கும் எவ்வளவு தீங்கிழைக்கின்றதென்று பாடுபட்டிருந்தும், தனது தொழிலுக்கு, மத நம்பிக்கைகளுக்கும் பங்கம் விளைவிக்கின்றதென அறிந்திருந்தும் ஒருகுடிகாரன் இன்னமும் தன் குடிப்பழக்கத்திலேயே இருக்கிறான். அவனுக்குள்ளே இருக்கின்ற தீய சக்திகள் தான் அவனை அப்படிச் செய்ய வைக்கின்றன. அதே போன்றுவேசி மார்க்கத்தாரும், திருடரும், உதாசினரும் மற்றும் எல்லாத் துர்க்கிரியையினரும் தங்களிலிருக்கும் பாவ சுபாவத்தினாலேயே கீழ்நோக்கி இழுக்கப்படுகின்றனர்.

மிகவும் கீழ்த்தரமான இச்சை ரோகங்களுக்கு எளிதில் ஆளாகும் தன்மையுடையவர்கள் நாம் என்பதனை நமது சொந்த அநுபவமே கற்பிக்கின்றதும். நன்மை இன்னது என்று அறிந்தபோதிலும், மிகுந்த வெறுப்புக்கும்

கண்டனத்துக்குரியவைகளையே செய்வதற்கு விரும்புகிறோம். காரணம், நமது பாவசுபாவமே. அது நமது மனச்சாட்சியையும், நல்லெண்ணங்களையும் எதிர்த்து நிற்கிறது. எனவே நமது சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனின் திருவுளச் சித்தத்தை நிறைவேற்ற முடியாதபடி கேடானவைகளுக்கு அடிமைகளாயிருக்கிறோம்.

குற்றம் குறை இல்லாதவர்கள் இவ்வுலகில் எவருமே இல்லை எனக்காண்கிறோம். இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறெந்த மனிதனும் நான் பாவமே இல்லாத பூரண பரிசுத்தன் என்று உரிமை கொண்டாடினதில்லை (சில பைத்தியக்காரர்களைத் தவிர) இதைக்குறித்து பின்னர் இந்நூலில் விவாதிப்போம்.

எல்லாரும் கறைப்பட்டவர்கள், பொல்லாதவர்கள் என்பதை உறுதிப்படுத்த யூஸுப் 12:53 –ஐ கவனிப்போம் "நிச்சயமாக மனிதனுடைய மனம் பாவம் செய்யும்படி தூண்டக்கூடியதாகவே இருக்கின்றது". ஸூரா (12:53) என்பதாகப் படிக்கிறோம். அல்ராசி இதற்கு விளக்கம் அளிக்கையில் "மனிதனின் ஆன்மா அவனைப் பாவம் செய்யவே தூண்டுகிறது. மனிதன் தன் சுயரூபத்தைக் காண்பிக்கையில், அது துன்மார்க்கத்தையும், கலகத்தையும், சிற்றின்பத்தையுமே நாடுகின்றது. மேலானவைகளைத் தேடாமல் கீழானவைகளின் மீதே நாட்டம் கொள்கின்றது" என்கின்றார். 'அது' என்று இங்கு கூறுகையில், 'அது' மனிதர்கள் எல்லாரையும் அல்லது மனித சுபாவம் முழுவதையும் ஏகமாகக் குறிப்பிடுகின்றது.

லா-அம்மாரா என்ற அரபிய வார்த்தை நிச்சயமாக (ஐயப்பாடின்றி) மெய்யாகவே என்று குர்ஆன் வலியுறுத்துகிறது. ஆதலால் ஒவ்வொருவனுடைய ஆத்துமாவும் அவனை துன்மார்க்கத்துக்கும் கீழ்ப்படியாமைக்கும் நிச்சயமாகவே வழிநடத்துகிறது என்பது மாறாத தெய்வீகத் தீர்ப்பும் நடைமுறை உண்மையுமாகும்.

எல்லா மனிதரும் பாவஞ் செய்துள்ளனர் என்பதற்கு மேலும் ஒரு அச்சாணிபோல் அமைந்துள்ள குர்ஆனின் வாக்கு.

وَإِن مِّنكُمْ إِلَّا وَارِدُهَا ۚ كَانَ عَلَىٰ رَبِّكَ حَتْمًا
مَّقْضِيًّا ۝ ثُمَّ نُنَجِّي الَّذِينَ اتَّقَوا وَّنَذَرُ الظَّالِمِينَ
فِيهَا جِثِيًّا ۝

அதனை கடக்காது உங்களில் எவருமே தப்பிவிட முடியாது. இது உமது இறைவனிடம் முடிவு கட்டப்பெற்ற மாற்றமுடியாத தீர்மானமாகும். ஆனால், நாம் பரிசுத்தவான்களை இரட்சித்துக் கொள்வோம். அக்கிரமக்காரர்களை, முழந்தாழிட்டவர்களாகக் குனிந்திருக்கும் நிலமையில் அதில் தள்ளிவிடுவோம் (19:71,72).

"**உங்களில் எவரும்**" என்கின்ற பொழுது விதிவிலக்காக யாருமில்லை எனவும்; '**நாம் ஈடேற்றுவோம்**' என்கின்றபொழுது, எல்லாரும் நரக அக்கினிக்குள் போவது அவர்களுடைய விதி என்று அல்ராசி விளக்குகின்றார். ஏனையோர் தரும் விளக்கங்களும்

இம்மாதிரியே இருக்கின்றன. ஜாஃபரிடம் விசாரித்தபொழுது, “(Al - worood) அல் ஒருத் என்றால் கீழிறங்கி அதற்கு செல்ல வேண்டும் என்பதற்குப் பொருள் நல்லவரோ, கெட்டவரோ, விதிவிலக்கின்றி எல்லாரும் அதற்குள் பிரவேசிப்பார்கள் என்று கடவுளின் தூதுவர் சொன்னதைக் கேட்டேன் என்றார். வரிதுகா என்றால் அதற்குள் இறங்கிச் செல்வார்கள் என்றும் அப்படியானால் தீயினால் பொசுக்கப்படுவார்கள் என்பதாக ஜலாலுத்தின் அர்த்தப்படுத்துகிறார். அல்ராசியும் தமது வியாக்கியானத்தில் இதை உறுதிப்படுத்துகிறார்.

நம்முடைய தூதர்களையும் நிச்சயமாக நாம் விசாரணை செய்வோம் (7:6) ஒவ்வொருவரின் நன்மை தீமைகளையும், அன்றையதினம் எடைபோடுவது திண்ணம் ஆகவே, எவர்களுடைய நன்மையின் எடை கனத்ததோ அவர்கள் தாம் நிச்சயமாகச் சித்திப்பெறுவார்கள்.

இவ்வசனங்களின் வாயிலாக உள்ளங்கை நெல்லிக்கனி எனப்பெறப்படும் உண்மையாவது ஒவ்வொருவரும் பாவங்கள் செய்கிறவர் என்றும் சிலர் மட்டும் சிலகாலம் நரகில் தண்டிக்கப்படுவர். ஆனால் மற்றெல்லாரும் நித்தியமாக அக்கினியில் இருப்பார்கள் என்பதாகும். எல்லோரும் கெட்டுப் போயுள்ளனர் என்பதற்கு மேலும் ஆதாரமான வசனம்.

எவன் ரஹ்மானுடைய நல்லுபதேசத்திலிருந்து கண்ணை மூடிக்கொள்கிறானோ அவனுக்கு நாம் ஒரு சைத்தானை சிநேகிதனாக சாட்டிவிடுவோம். அவன் அவனுக்கு இணைபிரியாத தோழனாகிவிடுகிறான் (43:36)

கடவுளின் திருநாமத்தை எப்பொழுதும் நினைவு கூர்வது என்பது மனித சக்திக்கு முற்றிலும் விஞ்சின காரியமானபடியால், சாத்தான் எப்பொழுதுமே மனிதனுடன் போராடுகிறான் என்பதில் ஆச்சரியமில்லை. போர்களில் (ஜிஹாத்) சிறந்தது எது என்று முஹம்மதுவிடம் வினவினபொழுது, “உங்களது துர்க்குணங்களுடனுள்ள போர்தான்” என்று உடனடியாகப் பதிலுரைத்தார். இதுவே பிரதானமான போராட்டம் என்று அழைக்கப்படுகிறது. “உன்னுடைய கொடிய சத்துரு நீதான் உனக்குள்ளிருப்பதுதான்” என்று கூறப்படுகிறது. மனிதத்தன்மை கெட்டுப்போயுள்ளது. மனிதனுள்ளத்தில் பாவம் குடிகொண்டிருக்கிறது: சிறிய – பெரிய பாவங்களுக்கெல்லாம் பிறப்பிடம் மனித இருதயமே.

இதிலிருந்து நாம் அறியும் சத்தியம் மனுக்குலம் சீர்கெட்டுப்போன பாவஜாதி என்றும்,தேவனுடைய கிருபையும் இரக்கமும் இல்லாத பட்சத்தில் ஒருவராகிலும் நீதிமானாக்கப்பட முடியாது. தேவகோபாக்கினையினின்று தாம் தப்பிவிட்டதாக ஒருவர் நினைப்பதும் கூட மிகப்பெரிய பாவம் என்று முஸ்லீம்கள் கருதி வந்திருக்கின்றனர். எவரும் மறுக்கமுடியாத சான்றுகளினின்றும் எல்லாரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயுள்ளனர் என்ற முடிவுக்கு வந்துள்ளோம். ஆகையால் தங்களின் பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவின் தியாகபலி எல்லோருக்கும் தேவை என்பதையும் உணருகிறோம். இல்லாவிட்டால், கடவுளுடைய நீதியை திருப்தி செய்வதற்காக, நிறைவேற்றுவதற்காக எல்லாரும் நரகத்துக்கு அனுப்பப்படுகிறார்கள்.

ஆதிப்பிதாவாகிய ஆதாமின் தன்மையும் ஆவியும் எல்லாருக்குமிருப்பதால், பாவம் செய்வது இயல்பாகவும், பிறப்புரிமையாகவும் இருக்கின்றது. ஆதலால் இதனை அடக்கவும், வெல்லவும், ஆத்துமாக்களைச் சுத்திகரிக்கவும் எல்லாருக்கும் பரிசுத்த ஆவியானராகிய கடவுளின் ஆவியானவர் அத்தியாவசியத் தேவை. அக்கிரமச் செயல்களையும், துன்மார்க்க நாட்டங்களையும் படிப்படியாகக் களைந்தெறியவும் தாறுமாறான எண்ணங்களையும் நெறிதவறிய உணர்ச்சிகளையும் ஜெயித்து, மனித சுபாவத்தை மறுரூபப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவர் இன்றியமையாத்தேவை. இதனையே மறுபிறப்பு அல்லது புதிய ஜனனம் என்று விவிலியம் அழைக்கிறது.

வேதாகமம் இயம்புகின்றபடி எல்லாரும் பாவம் செய்திருக்கின்றனர். சீர்கேடும் சிதைவும் மனுக்குலம் முழுவதையுமே பாதித்துக் கெடுத்துத் தீட்டுப்படுத்திவிட்டது என்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். தீர்க்கதரிசிகளும் ரசூல்களும் மனிதர்கள் ஆனபடியால் அவர்களும் பாவிகளே! ஆனால் மனிதர்களை எச்சரித்து, அவர்களுக்கும் தேவ செய்தியைக் கொடுப்பதற்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியர்களும், தீர்க்கர்களும் அப்போஸ்தலர்களும் வாய்மூலமாகவும், எழுத்துவடிவத்திலும் கொண்டு வந்த செய்திகள், குற்றம், களங்கம் பங்கமின்றிப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன என்றும் நம்புகிறார்கள். அவர்கள் மறந்து விடாமல், அவதூறு செய்திடாமல், விருப்பு வெறுப்பு பயமின்றி தங்கள் பணியை

முடித்திட தேவ ஆவியானவர் அவர்கள் உள்ளங்களை நிரப்பி, ஏவி, எழுப்பி வழிநடத்தி வந்தார். இவை எல்லாவற்றின் நடுவிலும் அவர்கள் பாவம் சுபாவம் உள்ளவர்களாக, பாவத்தில் விழுந்துவிடக் கூடியவர்களாக, குறைவுள்ளவர்களாக இருந்தார்களேயன்றி, இதற்கெல்லாம் விதிவிலக்கானவர்களாகவோ, பாவமே இல்லாத பரிசுத்தவான்களாகவோ, பூரணர்களாகவோ இருக்கவில்லை. சர்வவல்லமையும் மகிமையுமுள்ள தேவாதி தேவன் ஒருவரே பூரணர், பரிசுத்தர்.

மேலும் பாவம்–அது பெரியதோ, சிறியதோ– கடவுளின் உக்கிரத்தை வருவிக்கிறது. நரகமே அதன் பங்கு. திருடுவது அல்லது சாபமிடுவதை விட கொலை செய்வது பெரிதெனப்பட்டாலும், இவை ஒவ்வொன்றும் குற்றமாகவும், கட்டளையை மீறினதாகவும் இருப்பதால் , எல்லாமுமே தேவனால் தண்டிக்கப்பட வேண்டியதாகிறது, இந்த உண்மை தவ்றாத்தாலும் இன்ஜீலாலும் ஆதரிக்கப்படுகிறது, எடுத்துக்காட்டாக. "**எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை எனவும் எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர் களானார்கள்**" (ரோமர் 3:12;23) எனவும் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. ஹதீஸும் (பாரம்பரியங்கள்) இதனை வலியுறுத்துகிறது. "கொடுக்க வேண்டிய கடனை பலாத்காரமாகப் பிடுங்குகிறவனுக்கு மோட்சமில்லை. அல்லாஹ் அவனை அக்கினிக்குத்தான் இரையாக்க வேண்டும்." ஓ! அல்லாஹ்வின் நபிகளே, அது சிறியகுற்றமானாலும்

அப்படித்தானா? என்று கேட்டதற்கு, அவர் அளித்தபதில் “ஆம்! அது கருவேலம் பட்டையாயிருப்பினும் அப்படியே!”

நபிமார்களின் அல்லது இறைத்தூதுவர்களின் பாவமுள்ள அல்லது பாவமற்ற நிலைமையைக் குறித்து முஸ்லிம்களுக்குள் கருத்து வேறுபாடுகளிருக்கின்றன. அவர்கள் முற்றிலும் பாவமற்றவர்கள் என்று சிலர் வாதிடுகையில், மற்றவர்கள். அவர்கள் சிறார்களாகப் பாவம் செய்திருக்கலாம், ஆனால் பெரியவர்களான பொழுது பாவமில்லாதவர்களாக இருந்தார்கள் என்கின்றனர். அவர்கள் இறைத்தூது அளிக்கையில் பாவமற்றவர்களாகவும், மற்ற சமயங்களில் பாவஞ்செய்யக் கூடியவர்களாயுமிருந்தனர் என்று கூறும் சிலரும் உண்டு. ஷேக் முகம்மது அதா என்ற பெரியார் இந்த மூன்றாவது கருத்தை அங்கீகரிக்கிறார். ஆனால், குர்ஆனோ நபிகளில் அநேகர் மீறுதலுக்குட்பட்டிருக்கின்றனர் என்றும் சிறியது அல்ல, பெரிய அத்துமீறல்களும் நடைபெற்றிருக்கின்றன என்றும், அவர்களது வாழ்க்கைச் சித்திரங்களையும், அன்னாரின் சொந்த அறிக்கைகளையும் வெளியிடுகின்றது.

இஸ்லாமிய இறையியல் நிபுணர்கள் பெரிய பாவங்கள் மற்றும் சிறிய பாவங்கள் என வகையறுத்திருக்கின்றனர். சிறியவற்றை அல்லாஹ் மன்னிக்கிறவராயிருக்கிறார் ஆனால் பெரியவற்றை ஒருபோதும் மன்னிக்கமாட்டார். அவர்களுடைய அபிப்பிராயத்தில கீழ்க்காணும் 17-ம் பெரிய பாவங்களாகும்.

1. நாத்திகம் (தெய்வபயமின்மை) தெய்வம் இல்லை என்று சொல்லுதல்
2. சிறியபாவங்களைத் தொடர்ந்து செய்தல்
3. அல்லாஹ்வின் இரக்கத்தில் நம்பிக்கை இழத்தல்
4. தேவனின் கோபத்திற்கு ஆளாக மாட்டேன் என்ற அகந்தை
5. பொய்ச்சாட்சி (கள்ளக் கையெழுத்து)
6. ஒரு முஸ்லிமை அவதூறு செய்தல்
7. பொய்யாகச் சத்தியம் பண்ணுதல்
8. மாயாஜாலம், மந்திரம், பில்லிசூனியம்
9. போதை லாகரிப் பொருட்களைப் பயன்படுத்துதல்
10. அநாதைகளை அபகரித்தல்
11. அநியாய வட்டி வசூலித்தல்
12. விபச்சாரம், வேசித்தனம்
13. சோதோமின் பாவமான ஓரினச் சேர்க்கை
14. திருடுதல்
15. கொலை
16. போரில் அஞ்ஞானிகளுக்குப்புறமுதுகு காட்டி ஓடுதல்
17. பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை, ஆகியனவாகும்.

இப்பெரிய பாவங்களில் ஒன்றினையோ, சிலவற்றையோ விசுவாசிகள் செய்து விட்டு, மனந்திரும்பி மன்னிப்புப் பெறாதோர் நரக அக்கினியில் தண்டிக்கப்படுவர். இவை தவிர மற்றவை யாவும் சிறிய பாவங்களே.

ஆதாமின் பாவத்தை எடுத்துக் கொள்வோமானால்,

فَوَسْوَسَ إِلَيْهِ ٱلشَّيْطَٰنُ قَالَ يَٰٓـَٔادَمُ
هَلْ أَدُلُّكَ عَلَىٰ شَجَرَةِ ٱلْخُلْدِ وَمُلْكٍ لَّا يَبْلَىٰ
فَأَكَلَا مِنْهَا فَبَدَتْ لَهُمَا سَوْءَٰتُهُمَا وَطَفِقَا
يَخْصِفَانِ عَلَيْهِمَا مِن وَرَقِ ٱلْجَنَّةِ ۚ وَعَصَىٰٓ ءَادَمُ رَبَّهُۥ فَغَوَىٰ

ஆதம் இப்லீஸின் கலைப்பில் சிக்கித் தவறிழைத்து தன் இறைவனுக்கு மாறு செய்து, வழித்தப்பி விட்டார் *ஸூரா* (20:121) என்று அவரின் பாவம் ஊர்ஜீதப்படுத்தப்படுகிறது. மேலும் கீழ்கண்ட வசனத்தின்படி நீங்கள் இருவரும் இதில் விரும்பும் இடத்தில் விரும்பியவற்றை தாராளமாகப் புசியுங்கள். ஆனால், இவ்விருட்சத்தை அணுகாதீர்கள்! அணுகினால் நீங்கள் இருவரும் உங்களுக்குத் தீங்கிழைத்துக் கொண்டவர்களாவீர்கள்! என்று கூறினோம் (2:35) என்றும் அம்மரத்தின் கனியைப் புசித்ததினால் தமது ஆண்டவரின் கட்டளையை மீறிப் பாவஞ்செய்தனர் என்றும் வியாக்கியானிகள் விளக்கம் தருகின்றனர். எனினும் சைத்தான் அவ்விருவரையும் தவறிழைக்கும்படி செய்து, அதைவிட்டும், அவ்விருவரும் இருந்த மேலான நிலைமையிலிருந்தும் அவர்கள் வெளியேறும்படி செய்து விட்டான் (2:36)

அவனிடம் அல்லாஹ் எதிர்ப்பார்த்ததைவிட்டு, வழிவிலகிச் சென்று, தவறிழைத்து அம்மரத்தின் கனியைப் புசிப்பதினால் தனக்குச் சாவாமையும் நித்திய ஜீவனும் கிட்டும் என்ற யூகத்தில் அதனைப் புசித்துவிட்டனர். இவ்வாறு சத்துருவால் வஞ்சிக்கப்பட்டு கடவுள் தமக்கு விதித்திருந்த

கட்டளையை மீறிவிட்டனர் என்று பைய்தாவி விளக்குகின்றார். ஆதாம்பாவம் செய்தான் என்று அல்ராசி ஒத்துக் கொள்கின்றார். ஆனால் இது அவர் நபியாக்கப்படுமுன்னர் நடந்தது என்றும், ஆதம் கீழ்ப்படியாமை காண்பித்ததெல்லாம் விலக்கப்பட்ட அந்தமரத்தின் கனியைப் புசித்ததுதான் என்றும், அதற்காக அவர் மிகவும் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டபடியால், இறைவன் அதனை மன்னித்துவிட்டார். அவருக்கு விரோதமாகக் கணக்கில் வைக்கமாட்டார் என்றும் அல்ராசி வியாக்கியானப்படுத்துகிறார். இவ்விளக்கத்தின் கடைசிப் பகுதியை நாம் ஏற்றுக் கொண்டபோதிலும் ஆதாம் வழிவிலகிச் சென்று கீழ்ப்படியாமையினால் மீறுதலுக்குட்பட்டுப் பாவம் (முதற்பாவத்தைச்) செய்து கலகக்காரனும், துரோகியும், பாவியுமானான் என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக, கீழ்ப்படியாமை என்பது மிகக்கொடிய பாவங்களில் ஒன்றாகும் என்பதனை கீழ்வரும் வசனம் வெளிப்படுத்துகிறது.

எவன் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்கின்றானோ அவனுக்கு நிச்சயமாக நரக நெருப்புத்தான் கூலியாக இருக்கிறது. அதில் அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள் என்று நபியே நீர் கூறும் (72:23) மேலும்.

பின்னர் அவர் மன்னிப்புக்கோரவே அவருடைய இறைவன் அவருடைய குற்றங்களையும் மன்னித்து, அவரை தேர்ந்தெடுத்து நேரான வழியில் செலுத்தினான் (20:122) இதிலிருந்து ஆதாம் கீழ்ப்படியாமலிருந்தான்.

قَالَا رَبَّنَا ظَلَمْنَا أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ

الْخَاسِرِينَ

பின்னர் மனந்திரும்பினான் என்று அறிகிறோம். மனந்திரும்புதல் என்றால், தனது பாவத்துக்காக ஒருவர் மனஸ்தாபப்படுவதும், அதனை அறிக்கை செய்வதும், மறுபடியும் அதனைச் செய்யக் கூடாது என்று தீர்மானிப்பதுமாகும். மேலும் மனந்திரும்புவது கீழ்ப்படியாமைக்கே பொருந்தும்.

எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள்புரியாவிடில் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம் என்று கூறினர் *ஸூரா* (7:23) என்பதாக ஆதாமும் ஏவாளும் தங்களுடைய கீழ்ப்படியாமைக்கு மனம் வருந்தினவர்களாக தங்கள் இறைவனிடம் பாவமன்னிப்பு வேண்டினர்.

இவ்வாறு இங்கு நபிகளில் முதற்பேறானவராக ஆதம் ஷைத்தானுக்குக் கீழ்ப்படிந்ததையும், அவனுக்கு செவிமடுத்து தனது கனத்துக்கும் வணக்கத்துக்குமுறிய ரப்பை விட்டுவிட்டு சாவாமை கிடைக்கும் என்ற நப்பாசையால் மிகப்பெரிய பாவத்தைச் செய்து விட்டார். இதுவே மூலபாவமாக, ஆதி அல்லது ஜென்ம பாவமாக பாவங்களுக்கெல்லாம் மேலான பாவமாக, எல்லா மனிதரையும் பாவிகளாக்கும் பாவமாகக் கருதப்படுகிறது.

நூஹ் (நோவா) நபியும் பாவம் செய்து விட்டார் என்பது திண்ணம்; ஏனெனில் ஸூரா 71:24-ல் குறிப்பாக வசனம் 28-ல் "என்னுடைய ரப்பே! என்னை நீ மன்னிப்பாயாக" என்று பிரார்த்தித்தார். பெரியதொரு பாவத்தைச் செய்துவிட்ட குற்ற உணர்வுடன்தான் இவ்வாறு இறைவனிடம் மன்னிப்புக்காகக் கெஞ்சுகிறார். வியாக்கியானிகள் இதன் கூர்மையை மழுக்கினாலும் அல்லது மழுப்ப முற்பட்டாலும், இதன் அகோரம் நாம் கூறினபடிதான் என்பதில் ஐயமில்லை.

ஆபிரகாமும் (இப்ராஹீமும்) கொடிய பாவம் செய்துள்ளார் என்பதற்கு அத்தாட்சியாக பின்னர் உதயமான சந்திரனைக் காணவே "இது என்னுடைய இறைவன் ஆகுமா? " எனக்கேட்டு, அதுவும் மறையவே,அதனையும், நிராகரித்துவிட்டு "என் இறைவன் என்னை நேரான வழியில் செலுத்தாவிடில், வழி தவறிய ஜனங்களில் நிச்சயமாக நானும் ஒருவனாகிவிடுவேன் " என்று "இது மிகப் பெரியதாயிருக்கிறது. இது என்னுடைய இறைவன் ஆகுமா?" எனக்கேட்டு அதுவும்மறையவே, அவர் தம் மக்களை நோக்கி "என் மக்களே! நீங்கள் இறைவனுக்கு இணையாக்கும் இவை ஒவ்வொன்றிலிருந்தும் நிச்சயமாக நான் விலகிக் கொண்டேன்" என்று கூறிவிட்டு; "வானங்களையும் பூமியையும் எவன் படைத்தானோ அந்த ஒருவனின் பாலே நிச்சயமாக நான் முற்றிலும் நோக்குகிறேன். நான் அவனுக்கு எதனையும் இணைவைப்போன் அன்று" என்று கூறினார் *ஸூரா* (6:77,78,79).

இவ்வாறு இயற்கையிலுள்ள விண்கோள்களைக் கண்டு பயந்து இந்த அறிக்கை செய்திருப்பாரென்றால் நிச்சயமாகவே அவர் ஒரு விக்கிராதனைக்காரர். அப்படி தான் செய்யவில்லை என்று மறுப்பாரானால் அவர் பொய் சொல்லுகின்றார். எப்படியும் அவர் ஒரு பெரிய பாவத்தைச் செய்து விட்டார். ஆதலால்,

"எங்கள் இறைவனே! எனக்கும், என் தாய் தந்தைக்கும், மற்ற விசுவாசிகளுக்கும் கேள்வி கணக்கு கேட்கும் மறுமைநாளில் மன்னிப்பளிப்பாயாக!"என்று பிரார்த்தித்தார் (14:41)

இதன் மூலம் ஒளிவுமறைவின்றி மன்னிப்புக் கோருகின்றார். இன்னொரு சந்தர்ப்பத்தில் இறைவன்மீது நம்பிக்கையற்றவராக ஒரு கேள்வி கேட்கிறார்.

இப்ராஹீம் இறைவனை நோக்கி, "என் இறைவனே! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய்? அதை நீ எனக்கு காண்பி எனக்கூறியபோது. அதற்கு இதை நீர் நம்பவில்லையா? என்று கேட்டான். அதற்கு மெய்தான், நான் நம்பியிருக்கிறேன். ஆயினும், அதனை என் கண்களால் கண்டு என்னுடைய இருதயம் திருப்தியடையும் பொருட்டு அதனை காண்பி" என அவர் கூறினார் (2:260) என்பதாக வாசிக்கிறோம்.

ஆபிரகாம் அல்லாஹ்வைச் சந்தேகித்தது அவரது வல்லமையை நம்பாததும் ஒரு பெரியபாவம் ஆகும். என்பதனை நாம் மறக்க வேண்டாம். நாம் இப்ராஹீமைவிடவும் அதிகமாக அவநம்பிக்கைக் கொள்கிறவர்கள் என்று ஹதீத் கூறுகிறது.

அன்பியா 21:63 “இல்லை! அவற்றில் பெரியதுதான் இதனைச் செய்தது” என்றார். ஆபிரகாம் ஓரிடத்திலுள்ள சிலைகளை உடைத்துவிட்டுப்பின் விசாரிக்கப்பட்டபொழுது, “பெரிய விக்கிரகம் சிலவற்றை எல்லாம் சுக்குநூறாக உடைத்துவிட்டன” என பொய்யாகக் கூறினார். கடவுளின் தீர்க்கத் தரிசியான அபுஹுரைராவின் கணக்குப்படி இப்ராஹீம் மூன்று தடவைகள்தான் பொய்யுரைத்தார்: அவற்றுள் இரண்டு கடவுளுடன் இணைந்தது. “நான் வியாதியாயிருக்கிறேன்” என்றது முதல் பொய்; “இந்தப் பெரியதுதான் (விக்கிரகம்) இதனைச் செய்தது” என்பது இரண்டாவது பொய்: மூன்றாவது ஒரு அரக்கன் சாராவை அடைய நாடினபொழுது, “சாரா என் சகோதரி” என்று கூறினதாகும் (ஆதாரம் : புகாரி மற்றும் முஸ்லீம்)

மூஸாவும் (மோசேயும்) பாவஞ்செய்தவர்தான் என்பதற்குத் தகுந்த ஆதாரம் இதோ! மூஸா இரு வாலிபர்கள் சண்டையிட்டு கொண்டிருப்பதை கண்டார். ஒருவன், அவர் இனத்தை சேர்ந்தவன் அவரிடத்தில் கோரிக்கொண்டான். அதற்கிணங்கி மூஸா அவனை ஒரு குத்து குத்தினார்; அவன் காரியத்தை முடித்து விட்டார். அவன் இறந்துவிட்டான். இதை அறிந்த மூஸா, இது ஸைத்தானுடைய வேலை. நிச்சயமாக அவன் வழிகெடுக்கக்கூடிய பகிங்கரமான விரோதி! எனக்கூறினார். அன்றி அவர்,என் இறைவனே! நிச்சயமாக நான் எனக்கே தீங்கிழைத்துக் கொண்டேன், நீ என்னுடைய குற்றத்தை மன்னிப்பாயாக! என்று பிரார்த்தித்தார். ஆகவே இறைவனும் அவனுடைய குற்றத்தை மன்னித்துவிட்டான்.

ஏனெனில், நிச்சயமாக அவன், மிக மன்னிப்போனும், கிருபை செய்வோனுமாக இருக்கிறான் *ஸுரா* (28:15,16) மேலும் அதற்கு மூஸா "நான் அறியாதவனாக இருந்த நிலையில் அதனை செய்தேன்" என்று அவர் கூறினார் *ஸுரா* (26:20) வேறொரு சமயத்திலும்,

"மூஸாநபி இறைவனிடம் மன்னிப்புக்கோரினார் என்று பார்க்கிறோம். இதனை கேள்வியுற்ற மூஸா கோபத்துடனும் துக்கத்துடனும், தன் மக்களிடம் திரும்பி வந்தபொழுது, (அவர்களை நோக்கி) "நான் இல்லாத சமயத்தில் நீங்கள் செய்த இக்காரியம் மிகக்கெட்டது. உங்கள் இறைவனின் கட்டளையாகிய வேதனையை நீங்கள் அவசரப்படுத்துகின்றீர்களா"? எனக்கூறி இறைவனின் கட்டளைகள் எழுதப்பட்ட கற்பனைகளை எறிந்துவிட்டு தன் சகோதரரின் தலைமுடியை பிடித்துத் தன் பக்கம் இழுத்தார். அதற்கவர், என் தாயின் மகனே! இந்த மக்கள் நிச்சயமாக என்னை பலஹீனப்படுத்தி என்னைக் கொலை செய்துவிட முற்பட்டனர். ஆதலால், நான் ஒன்றும் செய்ய முடியாமலாகிவிட்டது. ஆகவே. என்னை அவமானப்படுத்திய என்னுடைய விரோதிகள் சிரிக்குமாறு நீர் செய்துவிடாதீர். இந்த அக்கிரமக்காரர் மக்களுடன் என்னை சேர்த்துவிடாதீர்" என்று கூறினார். பிறகு மூஸா இறைவனைநோக்கி, என் இறைவனே! எனக்கும் என் சகோதரருக்கும் நீ பிழை பொறுத்தருள்வாயாக! உன்னுடைய அன்பிலும் எங்களைச்

சேர்த்துக் கொள்வாயாக கிருபை செய்வோரிலெல்லாம், மிக்க கிருபையாக  என்று பிரார்த்தனை செய்து கூறினார் (7:150, 151).

இவற்றிலிருந்து பெறப்படும் மெய்ப்பொருள் யாதெனில், முதலில் தான் செய்த கொலைக்குற்றத்தைப் பெரும்பாவமாக உணர்ந்து மூஸா மன்னிப்புக் கேட்டார். இரண்டாவது நிலையில் எரிச்சலுடன் கற்பலகைகளை எறிந்து உடைத்தமைக்காகவும் அத்துடன் தனது சகோதரனை நிந்தித்ததற்காகவும் மனமுடைந்து மன்னிப்பு கோரினார். ஹாரூனின் பாவம் யாதெனில், பொற்கன்றுக் குட்டியைச் செய்து, இஸ்ராயீல் மக்கள் அதனை வணங்கும்படி செய்ததுதான்.

பார்வோனின் சேனைத்தலைவனாகிய போத்திபாரின் மனைவியின் விவகாரத்தில் யூசுப்பும் (யோ சேப்பு) களங்க மடைந்துள்ளவரே என்பதனை கீழ்வரும் வசனத்தில் தெளிவாக காண்கிறோம்.

அவள் அவரை காதலிப்பதில் உறுதிகொண்டு விட்டாள். அவர் தன் இறைவனுடைய எச்சரிப்பை கண்டிராவிடில், அவரும் அவளை காதலித்தே இருப்பார். எனினும் கெடுதல்களிலிருந்தும், மானக்கேடான செயல்களிலிருந்தும், அவரை திருப்பி விடுவதற்காக நாம் அவருக்கு இவ்வாறு எச்சரிக்கை செய்தோம். நிச்சயமாக அவர் நம்முடைய உண்மையான தேர்ந்தெடுக்கப் பெற்ற அடியார்களில் ஒருவராக இருந்தார் (12:24)

தாவூத் (தாவீது) பாவஞ்செய்தவர் என்பதற்கு ஆதாரமாக தாவூத் ஆகிய அவர், நிச்சயமாக நாமே அவரை

சோதனைக்குள்ளாக்கிவிட்டோம் என்று எண்ணி, தன் இறைவனிடம் தன் குற்றத்தை மன்னிக்கும்படி கூறி, குனிந்து சிரம் பணிந்து எழுந்து வணங்கித்தன் இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்தார் (38:24).

இன்னும் அல்லாஹ்வின்பால் மீண்டார் எனவே. அவருக்கு நாம் அதனை மன்னித்தோம்; நிச்சயமாக அவருக்கு நம்மிடத்தில் நெருக்கமும், அழகான ஒதுங்குமிடமும் உண்டு. தாவீது மோக இச்சையில் விழுந்து தமது போர்வீரனின் (வேலைக்காரனின்) மனைவியுடன் விபச்சாரம் செய்து, அதனை மறைக்க அவனைக் கொலையும் செய்து ஒன்றுமறியாதவரைப் போல பொய்யனாக மாய்மாலம் பண்ணினார் என்ற சரித்திர விவரம் தவ்றாத்தில் 2 சாமுவேல் 11,12 அதிகாரங்களில் துலாம்பரமாகப் பதிவாகியுள்ளது. இவ்வாறிருப்பினும் பின்னர் தமது பாவங்களுக்காக மெய்மனஸ்தாபப்பட்டு தம்மைப் புழுதிமட்டுமாக இறைவன் முன்னிலையில் தம்மைத் தாழ்த்தி மன்னிப்புக் கேட்டார். பலவியாக்கியானிகளின் விகற்பமான சர்ச்சைக்களுக்குள் சிக்கித் திசை தெரியமால் தவிக்காதிருக்க, தவ்றாத் சுருக்கமாக, தெளிவாக, நேரடியாக இந்த உண்மைகளை விளக்குகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்ஸ் இபின்மாலேக்கும், இபின் அப்பாஸ், வஹாப் இபின் முனாபேயும் மற்றும் பலரும் இதற்கு ஒப்புதல் தெரிவிக்கின்றனர்.

ஸுலைமானை (சாலமோனை) பாவஞ்செய்தவராக கீழ்வரும் வசனம் சுட்டிக்காட்டுகிறது.

உயர்ந்த குதிரைகள் ஒருநாளன்று மாலை நேரத்தில் அவர்முன் கொண்டுவரப்பட்டபொழுது அதனை பார்த்துக் கொண்டிருந்ததினால், சூரியன் அஸ்தமித்து, அவருடைய தியான நேரம் (தொழுகை) தவறிவிட்டது. அதற்கு அவர்: நிச்சயமாக நான் சூரியன் திரைக்குள் மறைந்துவிடும் வரையில், என் இறைவனை நினைப்பதைவிட்டு, இந்த நல்ல பொருள்கள் மீது அதிகமாக அன்பு கொண்டுவிட்டேன், என்று மனம்வருத்தி எனினும் அதுவும் என் பணியே. ஆதலால் அவைகளை என்னிடம் கொண்டு வாருங்கள் எனக்கூறி, அவைகளின் பின்னங்கால்களையும் கழுத்துக்களையும் கையினால் நீவி தடவி கொடுத்தார். நிச்சயமாக நாம் சுலைமானை மற்றொரு விதத்திலும் சோதனை செய்து. அவருடைய சிம்மாசனத்தில் ஒரு முண்டத்தை எறிந்தோம். உடனே அவர் நம்மளவில் திரும்பிவிட்டார். ஆகவே அவர் என் இறைவனே! என்னுடைய குற்றங்களை மன்னித்துவிடு. எனக்கு பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் ஆட்சியை எனக்கு நீ அளித்தருள் புரிவாயாக! நிச்சயமாக நீயே பெரும் கொடையாளி என்று பிரார்த்தனை செய்தார் (38:31-35).

அல்கஷ்ஃப், அல்ராசி போன்ற விரிவுரையாளர்கள், இதற்கு வேறுபட்ட விளக்கங்கள் தந்து, தங்கள் கருத்தை மெய்ப்பிப்பதற்காக பல நிகழ்ச்சிகளையும் கூறுகின்றனர். எப்படியிருப்பினும், இவற்றின் பொழிப்புரை என்னவென்றால் ஸுலைமானின் கவனமும் சிரத்தையும் அல்லாஹ் மற்றும் தொழுகையினின்றும் குதிரைகளின் மீது மாற்றப்பட்டன என்பதுவே. அதினிமித்தம் அவர் அவற்றைப் பின்னர் கொன்று போட்டார். எனவும் சொல்லுகின்றனர்.

மேலும், தாம் பாவம் செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வு மேலிடவே ரப்பிடம் மன்னிப்புக் கேட்கின்றார்.

யூனுஸ் (யோனா) பாவம் செய்தவராக, குற்றவாளியாகக் காணப்படுகிறார் என்பதை நிரூபிக்கும் பகுதியை கீழே வாசிக்கலாம். நிச்சயமாக யூனுஸும் நம் ரஸூல்களில் உள்ளவராவர். நிரப்பப்பட்ட கப்பலில் அவர் தப்பி ஓடியபோது அக்கப்பலிலுள்ளவர்கள் சீட்டுப்போட்டனர்; அதில் தோல்வியுற்றோரில் உள்ளவராக அவர் ஆகிவிட்டார். எனவே, அவர் பழிக்கப்பட்டவராக இருக்கும் நிலையில் அவரை ஒரு மீன் விழுங்கி விட்டது.

மீன் வயிற்றினுள் நிச்சயமாக அவர் தஸ்பீஹ் (துதித்தல் மகிமைப்படுத்துதல்) செய்பவர்களில் இல்லாமலிருந்தால் அவர்கள் எழுப்பப்படும் நாள்வரை, அதனுடைய வயிற்றிலேயே அவர் தங்கியிருப்பார், என்று எழுதப்பட்டுள்ளது. மீனின் வயிற்றிலேயே தங்கியிருப்பார் என்ற வினைச்சொல் யூனுஸ் தம் ரப்பிடம் தகாதவிதமாக நடந்து கொண்டார்: மீறிவிட்டார் – அதிலும் இறைத்தூதுவர்களில் ஒருவராயிருந்தும் – தன்னிச்சையாக நடந்தபடியால் தண்டிக்கப்பட்டார்; பின்னர் மன்னிப்புக்கோரி, சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

முஹமதுவும் பாவம் செய்தவரே என்ற முடிவுக்கு வருகிறோம். ஏனெனில்

لِّيَغْفِرَ لَكَ اللَّهُ مَا تَقَدَّمَ مِن ذَنبِكَ
وَمَا تَأَخَّرَ وَيُتِمَّ نِعْمَتَهُ عَلَيْكَ وَيَهْدِيَكَ صِرَاطًا مُّسْتَقِيمًا ۝

“நபியே! உமது முன்பின்னுள்ள தவறுகளை அல்லாஹ் உமக்கு மன்னித்து தனது அருட்கொடையையும் உம்மீது பூர்த்தியாக்கிவைத்து, உம்மை அவன் நேரான வழியிலும் நடத்துவதற்காக இத்தகைய வெற்றியை தந்தோம் (48:2) என்று வாசிக்கிறோம். மேலும் நீர் உம்முடைய தவறுகளுக்கு மன்னிப்பைகோரிக் கொண்டு காலையிலும் மாலையிலும் உமது இறைவனை புகழ்ந்து துதி செய்து கொண்டு இருப்பீராக.” (40:55)

நபியே! அல்லாஹ்வை தவிர வேறொரு நாயன் இல்லை என்பதை நீர் உறுதியாக அறிந்து கொண்டு விசுவாசங் கொண்ட ஆண்களுக்காகவும் விசுவாசங் கொண்ட பெண்களுக்காகவும், உமக்காகவும் பாவமன்னிப்பை கோருவீராக (47:19).

நபியே! எவர்கள் மனிதர்களுக்கு தீங்கிழைத்து தமக்குதாமே சதிசெய்து கொண்டார்களோ அவர்களுக்காக, என்னிடம் மன்னிப்பைக்கோரி நீர் தர்க்கிக்க வேண்டாம். ஏனென்றால் எவன் சதிசெய்யும் பாவியாக இருக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை (4:97).

இதில், ஏதும் தவறேற்பட்டுவிட்டால், அதற்காக நீர் அல்லாஹ்விடம் மன்னிப்பை கோரும். நிச்சயமாக அல்லாஹ் மிக்க பிழை பொறுப்போனும் அன்புடையோனுமாக இருக்கின்றான் (4:106) என்றும் வாசிக்கிறோம்.

முந்தின ஆயத்து நமக்குத் தெளிவாக வெளிப்படுத்துகிறது என்னவென்றால் இறைவாக்கு தனக்கு வருவதற்கு முன்பும் பாவம் செய்துள்ளார்; பின்னரும் பாவம்

செய்வார் என்பதனை “உம்முடைய பாவத்தில் முந்தியதையும், பிந்தியதையும்” என்ற சொற்றொடர் காண்பிக்கின்றது. முதலில் உம்முடைய பாவத்துக்காகவும் அதன்பின்னர் முஃமின்களான ஆண்கள் பெண்களுக்காகவும் என்றிருப்பதால், முஹம்மது தமக்காக அல்ல, தமது ஜனங்களுக்காக மாத்திரம் விண்ணப்பம் செய்தார் என்று அல்கஷாஃப், அல்ராசி முதலானோர் கூறுவது முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போலிருக்கின்றது.

மற்றும் சில இஸ்லாமிய நிபுணர்கள் கூறினதாவது பயபக்தியுள்ளோரின் (முஃமின்களின்) புண்ணியங்களின், நற்குணங்களை என்பது அல்லாஹ்வுக்கு அருகிலுள்ளோரின் தீங்குகள், கெட்ட குணங்களுக்குச் (முக்கராபின்) சமம் ஆகும். அல்லாஹ்வின் பிரதிநிதிகள் எனப்படுவோர் சிறுசிறுகாரியங்களில் அவருக்குக் கீழ்ப்படியாவிட்டாலும், அல்லாஹ் அதனைப் பெரிய, கொடிய பாவமாகக் கணக்கிடுகிறார். ஏனையோரிடம் பாவமெனக் கருதாவற்றையும், இவர்கள் தம்மிடம் மன்னிப்பு கேட்கும்வரை பாவமாகக் கருதுகிறார். இதுதான் முகம்மதுவுக்குச் சம்பவித்தது என்று விளக்குவதற்கு முயற்சிக்கின்றனர். ஆனால், இங்கு அல்லாஹ் அல்லவா முஹம்மதுவை மன்னிப்புக் கேட்கத்தூண்டுகிறார் அல்லது கட்டளையிடுகிறார் என்பதை மறந்து விடுகிறார்கள். குற்றமல்லாததைப் பாவமாக அநுமானித்து (முஹம்மதுவே!) உம்முடைய பாவத்துக்காகவும், முஃமினான ஆண்களுக்காகவும் பெண்களுக்காகவும் நீர் மன்னிப்புத்

தேடுவீராக என்று பணிப்பதால் ஆண்டவனே தவறு செய்கிறானா?

முஹம்மது நபி ஒரு குற்றத்தை தம் உள்ளத்தில் மூடி மறைத்து வைத்ததாகவும், பின்னர் அல்லாஹ்வுக்கு அல்ல மனிதருக்கே அஞ்சி நடந்ததாகவும் கீழ்வரும் வசனம் கூறுகிறது.

அல்லாஹ் எவருக்கும் அருள் புரிந்து, நீரும் அவர்மீது கருணை கூர்ந்திருந்தீரோ,அவரிடத்தில், நீர் அல்லாஹ்வுக்குப் பயந்து, ஜைனபு ஆகிய உம்முடைய மனைவியை பந்தத்திலிருந்து நீக்காது உம்மிடமே நிறுத்திக் கொள்ளும் என்று கூறியபோது, அல்லாஹ் வெளியாக்க இருந்ததை, மனிதர்களுக்கு அஞ்சி, நீர் உம்மனதில் மறைத்தீர். நீர் பயப்பட மிகத்தகுதியுடையோன் அல்லாஹ்தான். மனிதர்களல்லர். ஜைது என்பவர் மனம் மாறித் தன் மனைவியாகிய அவளைத் தலாக்குக் கூறிவிட்ட, பின்னர், நாம் அவளை உமக்குத் திருமணம் செய்து வைத்தோம். ஏனென்றால், விசுவாசிகளால் சுவீகரித்து வளர்க்கப்பட்டவர், தங்கள் மனைவிகளைத் தலாக்கு கூறிவிட்டால், அவர்களை வளர்த்த விசுவாசிகள், அப்பெண்களைத் திருமணம் செய்து கொள்வதில் யாதொரு தடையிருக்கக் கூடாதென்பதற்காக இது நடைபெற்றே தீரவேண்டிய அல்லாஹ்வுடைய கட்டளையாக இருந்தது (33:37)

இந்த வரலாறு அல்லது வழக்கு என்னவென்றால் முஹம்மது தன்னுடைய அடிமை ஜைதுவை விடுதலை செய்து தனது மகனாக சுவீகரித்த, ஜைனப் என்ற உயர்குல மாதுவை அவனுக்கு மணமுடித்து வைத்தார். ஆனால் சிறிது

காலத்துக்குப் பிறகு, முஹம்மதுவுக்கு அவள் மீது பாசம் ஏற்படவே, தமது விருப்பத்தை ஜைனப்பிடம் "உள்ளங்களையும், உணர்ச்சிகளையும் மாற்றுகிறவருக்கு நன்றி" என்று வார்த்தைகளினால் தெரியப்படுத்தினார். ஜைனப் இதனைத் தமது கணவருக்குத் தெரியப்படுத்தவே, அவரும் அதைப்புரிந்து கொண்டார். ஜைனப் முஹம்மதுவை அணுகி, தம் சுயவிருப்பத்தின்படியே தீர்மானத்ததுபோல, எனது வாழ்க்கைத் துணைவியை விட்டு விட (துலாக்செய்ய) விரும்புகிறேன் என்றாராம். அதற்கு முஹம்மது பாராமுகமாய், அந்த வேண்டுகோளைப் பொருட்படுத்தாதவர் போல "உனக்கு என்ன நேர்ந்தது? அவளைச் சந்தேகிக்கின்றாயா?" என்று கேட்டார். அதற்கு "இல்லை அவள் உயர்குடிப்பிறப்பாயிருப்பதால் என்மீது அதிகாரம் செலுத்துகிறாள் என்பதைத் தவிர வேறு குறை இல்லை" என்று ஜைது பதிலுரைத்தாராம். "உன்மனைவியை உனக்கே சொந்தமாக வைத்துக்கொள்" என்று முஹம்மது தீர்ப்பளித்தார்.

இங்கு கடவுள் வெளிப்படுத்திக் கொண்டிருந்ததை முஹம்மது மறைத்துக் கொண்டிருந்தார் என்பது புலப்படுகிறது. ஜைதுவின் மனைவியாயிருந்தவரை அல்லாஹ்வின் கட்டளையின்படி திருமணம் செய்து கொண்டதாகவும் மனிதருக்கு முன்பாகக் காண்பிக்கப் பிரயாசப்படுகிறார். ஜைனபை அடைய வேண்டும் என்று தம் உள்ளத்திலிருந்த வாஞ்சையை மூடி மறைக்கிறார். எனவே அல்லாஹ் எதனை வெளியாக்க விருந்தானோ, அதனை உம் மனதினில் நீர் மறைத்து வைத்திருந்தீர் என்று இறைவனால் கடிந்து கொள்ளப்படுகிறார்.

அல்ராசி வியாக்கியான நூலில் இதனை இவ்வாறு அர்த்தப்படுத்த விழைகிறார்: அவர் ஜைனபை மணமுடிக்க விரும்பினார் என்று கூறிவிட்டு அல்ராசி சற்று பின்வாங்குகிறார்: அவர் அல்லாஹ்வுக்குப் பயந்தும் மனிதருக்கும் அஞ்சியும் சற்று பின்வாங்குகிறார். “அவர் அல்லாஹ்வுக்குப் பயந்தும் மனிதருக்கு அஞ்சியும் இருந்தபடியால், அல்லாஹ் அவரைக் கண்டித்தார்”. இவ்வாறு பயப்படத் தேவையில்லாத காரியத்திலும் பயந்தபடியால் இவ்விஷயத்திலும்அவர் பாவம் செய்தார்.

“உம்மை நாம் உறுதிப்படுத்தி வைத்திருக்கா விட்டால், நீர் அவர்களின் பக்கம் கொஞ்சமேனும் திட்டமாகச் சாய்ந்திருக்கக்கூடும்” என்று அல்லாஹ் கூறுவதிலிருந்தும் உடனேதானே நபிகள், “அல்லாஹ்வே! என்னைவிட்டு நொடிப்பொழுதும் (கண்ணிமைக்கும் நேரமும்) பிரியாதிருப்பீராக” என்று வேண்டிக் கொண்டதாக கத்தாதா **(Quatada)** என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து பெறப்படும் உண்மை அவர் பாவம் செய்தார்; அல்லது பாவம் செய்யக்கூடிய வெறும் மனிதர்தான் என்பது, “என்னைத்தனியே என் வசம் விட்டுவிட்டால், நான் விழுந்து போவேன்” என்பது தானே பொருள்.

முஸ்லீம் மற்றும் புகாரியின் வாய்மொழிச் செய்திகளில் முஹம்மது நபி இவ்வாறு அறிக்கையிட்டதாகக் கூறப்படுகிறது: “உங்களில் ஒருவராகிலும் அல்லாஹ்வின் அருளில்லாமல் பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்” அப்பொழுது அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர்! “ஓ, அல்லாஹ்வின் நபியே! நீரும் அப்படித்தானா”? என்று

கேட்டதற்கு, "அல்லாஹ் தமது அருட்கொடையால் என்னைச் சூழ்ந்து கொள்ளாவிட்டால், நானும் கூட மோட்சத்தில் பிரவேசிக்க முடியாது" என்றுரைத்தாராம். "நான் அல்லாஹ்வின் மன்னிப்பை நாடி, ஒருநாளில் எழுபது தடவைகள் மனந்திரும்புவேன்" என்று நபிகள் கூறக் கேட்டதாக அபுஹுரைரா கூறுகின்றார். "பாதாளத்தின் வாதைகளுக்கும் நரக அக்கினியின் தகிப்புக்கும் தப்பும்பொருட்டு, அல்லாஹ்வே, நீரே எனது தஞ்சம் என்றுஅவரிடம்அடைக்கலம் புகுந்து கொள்வேன்" என்று நபிகள் கூறுவார்கள் என்பதாக இப்நாத் கல்தும் அபுஹுரைராவும் சாட்சிப்படுத்துகின்றனர். (புகாரி முதல்பாகம்)

இந்த அத்தியாயத்தில் இதுகாறும் நாம் கண்ட பகுதிகளிலிருந்து நாணயமுள்ளவர் எவரும் எந்தவித ஐயமுமின்றி மிகத்தெளிவாகக் கண்டுபிடித்த சத்தியம் என்னவென்றால் நமது ஆதித்தந்தை ஆதாம் கீழ்ப்படியாமையினாலே பாவத்தில் விழுந்தார். அதன் விளைவாக அவரது இதயத்தின் எண்ணங்கள் கறைப்பட்டன. அதிலிருந்து அநீதி – அக்கிரமத்தின் பக்கமே சாய்ந்தார். அத்துடன் ஆதாமின் சந்ததியாராகிய நாமனைவரும் பாவ சுபாவத்தைச் சுதந்தரித்துக் கொண்டு சிந்தனையிலும், செயலிலும் பாவிகளும், நீசர்களுமானோம். நமது அனுபவமும், சுயசரிதையும் இதனை மெய்ப்பிக்கின்றது. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருமே பாவிகள்தான். இதில் இன்னமும் சந்தேகமுண்டோ?

பெரிய தீர்க்கத்தரிசிகளும், நபிகளும் மகான்களும் கடவுளுடைய பரிசுத்த கட்டளைகளை மீறிப்

பாவம் செய்துள்ளனர் என்று கண்டோம்.முஸ்லீம்களின் நபியாகிய முஹம்மதுவும் இதற்கு விதி விலக்கல்ல என்று கண்டோம். இவ்வாறு கற்பனைகளை மீறிச் செய்த பாவங்களுக்காக அளிக்கப்படும் நியாயமான நித்திய நரகதண்டனையிலிருந்து எவ்விடத்திலுள்ள எல்லா மனிதரையும் விடுவிக்க, இரட்சித்துக்காப்பாற்ற ஒரு மீட்பர் தேவை. தேவனுடைய நீதியையும், இரக்கத்தை வெளிப்படுத்தும் கறைதிரையற்ற மீட்பே எல்லா ஆத்துமாக்களின் அவசியத் தேவை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமே தேவ நீதியைப் பூரணமாய் நிறைவேற்றுகிற மனுக்குலத்தின் பிராயச்சித்தபலி. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொருவரின் பாவங்களும் தேவனால் மன்னிக்கப்பட்டு மறக்கப்பட்டு அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள். இவ்விதம் நித்திய ஜீவனையும் நித்தியமான பேரின்பப் பெருவாழ்வையும் பெறுகின்றனர்.

திருக்குர்ஆனின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு அத்தியாயமும் முன்னால் நபிமார்களும், மற்ற மானிடரைப்போல, பாவக்கறை படிந்தவர்களே என்று நிரூபிக்கின்ற வேளையில்,இவற்றிற்கெல்லாம் முரணாக, நமது முஸ்லீம் சகோதரர்கள் ஏனோ இவர்களை இந்தப் பழியினின்றும் விலகினவர்களாகவும், பாவமற்ற பரிசுத்தராகவும் காண்பிக்கப் பிரயாசப்படுகின்றனர்? திருத்தூதுவர்களே நாணமின்றி தாங்களும் பாவத்தன்மையுடையவர்கள்,பலவீனர், மற்றவர்களைவிடச்

சிறந்தவர்களில்லை என்று அறிக்கை செய்யும் பொழுது, இவர்களது செயல் வியப்பாக இருக்கின்றது. மெய்யாகவே கடவுள் தம்முடைய வேதங்களை அனுப்பி, அவருடைய ஒப்பற்ற, அனந்த ஞானத்தின்படி பிரமாணங்களை நமக்கு எழுதித் தந்திருக்கிறார். தம்முடைய வழிகளிலெல்லாம் உண்மையுள்ளவரும், கிரியைகளிலெல்லாம் உத்தமரும், மனிதத் தேவைகளை அறிந்து கொள்வதில் ஞானமுள்ளவருமாயிருக்கிறார். அவருக்கே என்றென்றும் மகிமையுண்டாவதாக!

# நான்காவது விரிவுரை

## அறிமுகம்

இஸ்லாமிய சட்டமும், உரிமை இயல் சட்டமும் ஏக மனதாக, அக்கிரமம் அல்லது தீங்கு யாருக்கு விரோதமாக இழைக்கப்பட்டதோ, அதைப் பொருத்தே தண்டனை கடுமையாகவோ, இலகுவாகவோ இருத்தல் வேண்டும் என்று நிர்ணயிக்கிறது. எடுத்துக்காட்டாக பள்ளியில் ஒரு மாணவன் தனது சக மாணவர்களை தூஷித்தால் அவன் இலேசாகத் தண்டிக்கப்படுகிறான். ஆனால் அவன் ஒரு ஆசிரியரை அவமானமாகப் பேசினால் அவனுக்குக் கிடைக்கும் சிட்சை மிகக் கடுமையாக இருக்குமல்லவா? பள்ளி நீக்கம் செய்யப்படுவானல்லவா? நீதிமன்றச் சட்டப்படி, ஒருவர் தனக்குச் சமமானவரைத் திட்டினால் அது ஒரு குற்றமெனக் கருதப்படுகிறது. ஆனால் அதே வேளையில் நீதிபதியை நிந்தித்தால், அதற்கு அதிகத் தண்டனை உண்டு. அதைவிட அரசனைத் தரக்குறைவாகப் பேசிவிட்டால் அது மிகப்பெரியதாக, இன்னும் எவ்வளவு பெரிய குற்றமாக, இராஜ துரோகமாகக் கருதப்பட்டு தூக்கிலிடுதல் அல்லது நாடு கடத்தல் போன்ற,தண்டனை விதிக்கப்படுமல்லவா? இவை எல்லாவற்றிற்கும் மேலாக, வல்லமையிலும், பரிசுத்தத்திலும்,

மகிமையிலும் சிறந்தவரும், ஈடு இணையற்றவருமான தேவனுக்கு விரோதமாக ஒருவன் பாவம் செய்யும் பொழுது அதற்குக் கிடைக்கும் தண்டனை எவ்வளவு பெரிதாயிருக்கு மென்று நாமும் எண்ணிப்பார்க்க முடியுமா? நிச்சயமாகவே, குற்றவாளி முடிவேயில்லாத, நித்தியவாதைக்கு ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

தேவன் எல்லாமறிந்தவரும், பூரண நீதிபரருமாயிருப்பதால், எந்த ஒரு சிறு தவறையும் கண் சாடையாய் விட்டு விட முடியாது. ஆதலால் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறவர்கள் எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றிருப்பதால் (ரோமர் 3:23) அவர்களுக்கென்று ஆயத்தம் செய்யப்பட்டுள்ள நித்திய நரகாக்கினியில் அழுந்தவேண்டும். இவ்வாறு தெய்வநீதி நிறை வேற்றப்படுகையில் கடவுளின் இரக்கம் எங்கே? பாவிகளைத் தண்டிக்காமல் விட்டு, அல்லாஹ் இரக்கம் காண்பித்து, பாவிகளைச் சும்மா மன்னித்து விடுதலை செய்துவிட்டால் அவருடைய நீதி நியாயம் எங்கே? இக்காரணத்தை முன்னிட்டே அல்லாஹ் தமது நீதியையும் இரக்கத்தையும் ஒப்புரவாக்க, நிலைப்படுத்த ஒரு மார்க்கத்தை உண்டு பண்ணியிருக்கிறார்.

## நான்காம் விரிவுரை

## முதல் பகுதி

# கிறிஸ்துவின் சிலுவையில் கடவுளின் நோக்கம் : இந்த ஒப்புரவாகுதல் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது

ஆதாம் தனது கர்த்தருக்குக் கீழ்ப்படியாமலிருந்தான் (அல்லது, அவருக்கு விரோதமாகப் பாவஞ் செய்தான்) ஆதலால் அவன் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டான் (ஆதியாகமம் 3). இந்த நிகழ்ச்சி அல்பகரா 2:36-ல் எதிரொலிக்கிறது. ஷைத்தான் அவர்கள் இருவரையும் அதிலிருந்து தவறச் செய்து, அவர்களிருவரும் இருந்த உயர்ந்த நிலையைவிட்டு வெளியேற்றப்பட்டான் ஆதாம் நித்திய மரணத்துக்கு பாத்திரனாகிவிட்டான். தீய விருப்பங்கள் அவனுக்குள் வளரவே, பாவஞ்செய்யும் தன்மையும் அவன் உள்ளத்தில் வேர் கொண்டது. அவனது சந்ததியாரும் வழிவழியாக அவனுடைய போக்குகளைச் சுதந்தரித்துக் கொண்டவர்களாக, தகப்பனின் அடிச்சுவடுகளில் நடக்கத் துணிவு கொண்டிருக்கிறார்கள். பூமி முழுவதும் அக்கிரமங்களாலும், கொடுமைகளாலும் நிறைந்திருக்கின்றன. தேவ நீதியை நிறைவேற்ற, திருப்தி செய்ய, மனிதரை அழித்து நிர்மூலமாக்குவதைத் தவிர வேறு வழியில்லாமற்போயிற்று, ஏனெனில் அவர்கள் தாமாக ஒரு

உபாயத்தைத் தேடி இழந்துபோன நீதியையும், பரிசுத்தத்தையும் மீண்டும் பெற இயலாதவர்களாகி, பரிசுத்தமான பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை இழந்தனர். மேலும் தேவாதி தேவன் தாம் போட்ட சட்டங்ளைத் தாமே மீறவோ, பக்க வழியாகச் செல்லவோ முடியாது. எதனையும் பாராமுகமாய் இருந்திட முடியாது! பாவி தனது சுகவாழ்வை விட்டு, அவியாத அக்கினியில் புழுவாகத் துடிக்க வேண்டும் என்று நீதிகோருவதால், நீதி தனது கடமையை நிறைவேற்றட்டும் என்று இருந்திடல் வேண்டும் . "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை: தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன் மேல்தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல்தான்இருக்கும் "(எசேக்கியேல் 18:20). சட்டமியற்றுபவர் தான்போட்ட, சட்டங்களை அமுல்படுத்தாவிட்டால், நீதி என்பதே அற்றுப் போகிறது. (நீதி அநீதியாகிவிடும்)

எந்த ஒரு மொழியிலும், நீதி என்றால் அநீதிக்கு நேர் எதிர் பதமாகும். நீதி என்றால் நியாயம், நேர்மை, சரியான, பாரபட்சமற்ற என்ற அர்த்தங்களைக் கொடுக்கும். அப்படியே இரக்கம் என்ற சொல்லுக்கு மொழிவாரியாக இளகின உள்ளம், கருணையுள்ள, கிருபையுள்ள, தயவுள்ள, அருள்நிறைந்த, அன்பும், பாசமுள்ள, பரோபகார சிந்தையுள்ள, மன்னிக்கும் தன்மையுள்ள என்று பல்வேறு அர்த்தங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தண்டனைக்குத் தகுதியானவனை தண்டியாமல் சும்மா விடுதல் என்றும் சிலர் பொருள் தருகின்றனர். நீதிநெறியை அசட்டை பண்ணாமல் எரி நரகத்தின் கொடிய

தண்டனையினின்று மனிதனை விடுவிக்கும் வழியையே இரக்க உருக்கமாயிருக்கிற தேவன் தேடினார். எனவேதான் மீட்பின் இரக்க உருக்கமாயிருக்கிற தேவன் தேடினார். எனவேதான் மீட்பின்மார்க்கத்தை அநாதிகாலமாகவே திட்டமிட்டிருந்தார் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு அச்சாணி போலத் திகழும் இரத்தபலிகளின் மூலம் இந்த மீட்பின் வரலாறு முதலில் வெளிப்படலாயிற்று. எழுதப்பட்ட நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு எத்தனையோ நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆதாமின் குமாரர்கள் பலி செலுத்தி வந்துள்ளனர். தேவனின் வாயாகத் திகழ்ந்த மோசேயின் வழியாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும்வரை தெய்வ பக்தியுள்ள ஆதாமின் சந்ததியினரும் அங்ஙனமே பலி செலுத்தி வந்தனர். பாவத்தின் அலங்கோலத்தையும் அதன் அகோர விளைவுகளையும் பசுமரத்தாணிபோல மனிதருள்ளத்தில் பதித்திட, பிள்ளைகளுக்காகக் கற்றுக் கொடுப்பதுபோல நியாயப் பிரமாணத்தின் மூலமாக தேவன் போதித்து வந்தார். சுத்தமான அசுத்தமான பிராணிகள் என்று மிருகங்கள், பறவைகளை வகையறுத்து; "நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது" (எபிரேயர் 9:22) என்ற அடிப்படையில் தத்துவத்தைப் புகட்டிவந்தார். குறை பழுதில்லாத சுத்தமான பிராணியையே பலியிடுவதற்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்று கற்பித்து வந்தார். அதனைக் கொன்று, சந்து சந்தாக வெட்டி நெருப்பில் சுட்டெரிப்பதன் மூலம் பாவிக்கு தந்த தண்டனையை மாதிரிப் பாடமாகக் காண்பித்தார். அந்தப் பலியினால், பாவிக்கு மன்னிப்பும், விடுதலையும் கிடைக்கிறது என்பதையும்

உணர்த்தினார். இந்தப் பலிகள் எல்லாம் மிகவும் குறைவுள்ளவை. பாவ மன்னிப்பையோ, மீட்பையோ சம்பாதிக்கத் திராணியற்றவை எனினும், மகோன்னதமான, ஒப்பற்ற கிறிஸ்துவின் பலிக்கு, உலகின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக் குட்டியாகிய இயேசுவுக்கு, அடையாளங்களே தவிர, வேறல்ல என்பதனையும் சுட்டிக் காண்பித்தன.

காலம் நிறைவேறினபோது, கடவுள் தமது வார்த்தையாகிய கிறிஸ்துவை அனுப்ப, அவர் ஒரு மாம்ச சரீரத்தை எடுத்துக் கொண்டவராய், நம்மில் ஒருவரைப் போலானார். நம்மைப் போலவே அநேக காரியங்களில் அவர் பங்கு கொண்டபோதிலும், அவர் ஒரு பொழுதும் ஒரு சிறிய பாவமும் செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சனையோ, கள்ளமோ, கபடோ காணப்படவில்லை. (இந்தப் புத்தகத்தின் ஐந்தாவது விரிவுரையில் கிறிஸ்துவின் பாவமில்லா புனிதத்தன்மையைக் காண்க.) இந்த வார்த்தை அதாவது கிறிஸ்து, மாம்ச தேகத்தை எடுத்துக் கொண்டவராய், நமது பாவங்களுக்குரிய தண்டனையை தம்மீது ஏற்றுக்கொண்டவராய், மனிதரெல்லாருடைய ஆத்துமாக்களுக்கும் பதிலீடாகச் சிலுவையிலே இரத்தம் சிந்தி பலியாக மாண்டார். இம்மாபெரும் தியாகத்தை ஆத்துமாக்களின் ஈடேற்றத்திற்காக தேவன் அங்கீகரித்தபடியால், தேவ நீதி திருப்தி செய்யப்பட்டது. தேவனுடைய நீதியையும் அவருடைய இரக்கத்தையும் இணைத்தார். இவ்விரண்டும் ஒன்றையொன்று சந்தித்துக் கைகுலுக்கிக் கொண்டன. தாவூது தமது ஜபூரில் தீர்க்க

தரிசனமாக முன்னுரைத்த கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்யும் (சங்கீதம் 85:10) என்ற வாசகம் நிறைவேறிற்று. சிலுவையிலே கிறிஸ்து மரித்ததை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் இந்த இரட்சிப்பை அடைகிறார்கள். தவ்றாத் மற்றும் இன்ஜீலீன் தேவ கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படிவோம் என்ற நிபந்தனையுடன் விசுவாசிக்கிறவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.தேவனாக அல்ல, மனிதனாகவே கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார், என்பதையும் வலியுறுத்துகிறோம்; ஏனெனில் நமது முஸ்லீம் சகோதரர்களில் சிலர் இதில் சில சந்தேகங்களைக் கிளப்புகின்றனர்.

மற்ற மதங்களைப் போலவே, இஸ்லாமும் பலிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி என்ன கூறுகிறது என்பதை அதிகமாக விளக்கத் தேவையில்லை என நினைக்கிறேன். அதாவது, பாவ மன்னிப்பையும், கடவுளின் அங்கீகாரத்தையும் பெறுவதற்குப் பலி செலுத்துதலும் ஒரு வழியாகும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றனர். அல் அதா பண்டிகையின்போது ஆடு அறுக்கப்படுவது ஆகாரத்திற்காக அல்ல என்றும், ஆனால் அல்லாஹ்வின் அருளையும் அபரிமிதத்தையும் ஆசீர்வாதங்களையும் அடைவதற்குரிய மீட்பின் மார்க்கம் என்றும் கருதப்படுகிறது, அதே போன்று ஆபிரகாம் தனது மகன் ஈசாக்குக்குப் பதிலாகப் புதரில் சிக்கியிருந்த கிடாவைப் பிடித்து பலியிட்டதும் ஆகும்.

வலுப்பமான ஓர் ஆட்டை (பலியிடயிருந்த) அவருக்குப் பகரமாக்கிக் (பிரதிக்கிரயமாகக்) கொடுத்தோம். இவ்வாறு ஒவ்வொரு பலியும் பலியிடுவோரின் பாவ மன்னிப்புக்கு வழியாகவும் மதிக்கப்படுகிறது. முஹம்மதுவும் இவ்வாறே நம்பினார். அர்த்தப்படுத்தினார் என்பதைப் பின்வரும் ஹதீத்திலிருந்து அறிகிறோம்.

“ஒஃபாத்திமாவே! பலியாகிறவரின் சிரசருகே இருப்பாயாக; அவரின் முதல் சொட்டு இரத்தம் தரையில் விழுந்தவுடனே உனது பாவங்கள் மன்னிக்கப்படும்” என்று நபி தனது மகள் ஃபாத்திமாவிடம் கூறினார். மேலும் ஒரு ஹதீத்தின்படி, தீர்வை நாளிலே தங்கள் ஆயுட்காலத்திலே தாங்கள் செலுத்தின பலிகளை பரதீசுக்குச் செல்லும் வழியில் ஒடுக்கமான இடங்களில் பாலங்களாக அமைத்து அவற்றின் மீது நடந்துசெல்வர் என்பதாக முஸ்லீம்கள் நம்புகிறார்கள். ஆனால் நாம் அறியவேண்டிய சத்தியமாவது யார் நிமித்தம் இந்தப் பலிகள் செலுத்தப்பட்டனவோ, அவர்களின் ஆத்துமாக்களின் மதிப்புக்கு எவ்வளவேனும் ஈடாகாது; உண்மையில் பார்த்தால், உலகிலுள்ள மிருகங்கள் அனைத்தும் ஏகமாய்ப் பலியிடப்பட்டாலும் ஒரு பகுத்தறிவுள்ள ஆத்துமாவுக்கு இணையாகாது. ஐந்தறிவு மாத்திரம் படைத்த ஒரு மிருகம் ஆறறிவுள்ள ஒரு மனிதனுக்கு எப்படி ஈடாக முடியும்? எனவே, பலிகள் பாவ நிவாரணத்துக்காக அல்ல; தவ்றாத் நிழலாட்டமாகக் காண்பித்துக் கொண்டே வந்ததும், இன்ஜீலில் இயேசு கிறிஸ்துவின் சிலுவையிலே நிறைவு பெற்றதுமான அதி

மகோன்னதமான, மிகப்பெரிய சிலுவைப் பலிக்கு அடையாளமாக மாத்திரம் இருந்து வந்திருக்கின்றன. இதுவே தேவனுக்குப் பிரியமான பலியும், எல்லா மனிதாத்துமாக்களுக்கும் போதுமான பாவ நிவாரணமாக, மீட்கும் கிரயமாக இருக்கிறது.

**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரை (இயேசுவை)த் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.**

(யோவான் 3:16)

# இம்மாபெரும் பரிசுத்த பணிக்கு கிறிஸ்து ஒருவரே தகுதி பெற்றிருந்தார்

ஆம், கிறிஸ்து ஒருவர் மாத்திரமே இந்த அபூர்வச் செயலுக்குப் பாத்திரராயிருந்தார் என்பதனைக் கீழ்க்கண்ட காரணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

1. அந்தப் பலி பரிசுத்தமும், பழுதற்றதுமாயிருக்க வேண்டும்.

2. மீட்கப்பட வேண்டிய ஆத்துமாக்களின் இலக்கத்துக்குச் சரியான மதிப்புடையதாய் பலி இருக்க வேண்டும்.

3. பலியினால் நன்மை பெறுவோரின் தன்மையுடையதாக, மனிதனாக, இருக்க வேண்டும்.

4. கடவுளுக்கும், மனிதனுக்கும் நடுவில் தொடர் பாலமாக, இணைப்புச் சங்கிலியாகச் செயல்படும் யோக்கியதாம்சம் உடைய பலியாக அது இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவைத் தவிர இந்த உலகின் கண் வாழ்ந்த, வாழும் எண்ணிறந்த கோடா கோடி மக்களில் எங்ஙனம் துருவித்துருவி ஆராய்ந்தாலும், தேடினாலும் வேறு ஒருவரையும் இத்தகுதிகள் அனைத்தும் பெற்றவராகக்

காண்பதற்கில்லை. இதற்கு முக்கியமான காரணம் யாதெனில் எல்லா மனிதரும், இறைத்தூதுவரும் பாவிகளானபடியால், அவர்களையே மீட்பதற்கு ஒருவர் தேவைப்பட்டிருக்கும்பொழுது. அவர்கள் எப்படி மற்றவர்களை மீட்க முடியும்? எவருக்கும் அருகதை இல்லை! இறைவாக்காகிய இயேசுவைத் தவிர வேறு எவரும் சுயமான, மெய்யான தகுதி பெற்றிலர்.

எனக்குச் சுகமளிப்பவரே! என் ஆத்துமா நோயால், துன்பத்தால் சாகையில் நின் சிலுவையின் மூலமாகக் காயம்பட்ட நின் கரங்களால் குணமாக்குவீராக! சமாதானக் காரணரே, பரிந்துரைப்பவரே! உமது சிலுவை என் தஞ்சம் நின் மன்றாட்டைக் கேட்டிடும் தந்தையிடம் ஏழையின் வேண்டுதலையும் சேர்த்திடும் ஐயனே!

தேவன் ஒருவரே,
தேவனுக்கும் மனுஷருக்கும்
மத்தியஸ்தரும் ஒருவரே,
மனுஷனாகிய
கிறிஸ்து இயேசு அவரே
(1 தீமோத்தேயு 2:5)

## மூன்றாவது பகுதி

# கிறிஸ்துவானவர் மனரம்மியமாக சிலுவையை ஏற்றுக் கொண்டாரா?

மெய்யாகவே கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்பதனை விசுவாசிக்கத் தயங்கும் முஸ்லிமிடம் அதற்கான காரணத்தைக் கேட்டால்: பிரதான நபிகளால் ஒருவராக இருக்கின்ற கிறிஸ்துவை கொடூரமான சிலுவையில் சாகடிக்கப்படுவதற்கு அந்தப் புல்லர்களான யூதர்களின் கையில் தமது மேன்மையான தாசனை இறைவன் ஒப்புக் கொடுக்க முடியாது என்று சொல்லுகின்றார். ஆனால்இவ்வாறு கூறும் நமது முஸ்லீம் நண்பர் தமது குர் ஆனிலுள்ள ஒரு வாக்கியத்தின்படி அல்லாஹ் இப்படிப்பட்டதையும் அனுமதிக்கிறார் என்பதை மறந்து விட்டார்.

ஆகவே, அவர்கள் தங்கள் வாக்குறுதிகளுக்கு மாறு செய்ததன் காரணமாகவும்,அல்லாஹ்வுடைய வசனங்களை அவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் காரணமாகவும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்து கொண்டிருந்ததன் காரணமாகவும் நாம் அவர்களைச் சபித்து விட்டோம் (4:155). உங்கள் மனம் விரும்பாத

யாதொன்றையும் நம்முடைய எந்த தூதர் உங்களிடம் கொண்டு வந்தபோதிலும் நீங்கள் கர்வம் கொண்டு விலகி கொள்ளவில்லையா? அன்றியும் அத்தூதர்களில் சிலரை நீங்கள் பொய்யாக்கிச் சிலரைக் கொலை செய்தும் விட்டீர்களா?" (2:87)

ஒரு யூதப் பெண்ணின் நம்பிக்கைத் துரோகத்தினால் தாம் விஷமிட்டுக் கொல்லப்பட்டதாக (மரிப்பதற்குமுன்பு) முஹம்மதுவே அறிக்கை வெளியிட்டார். அல்மகாசி முகம்மது இபின் இஷ்ஹாக் ஆகியோரின் நூல்களிலும் ஹதீத்திலும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறிருப்பதால், கிறிஸ்துவின் வன்கொலையை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது. தேவன் அநாதி காலமாகவே அதனைத் தீர்மானித்திருந்தபடியால், தவ்றாத்தும், ஜபூரும், இன்ஜீலும் மிகத் தெளிவாக அறுதியிட்டு உறுதி கூறுகின்றன. தாம் உலகத்திற்கு வந்ததின் நோக்கமே மனுக்குலத்தின் இரட்சிப்பை நிறைவேற்றுவதற்காகவும், அதற்கெனத்தம்மையே தியாக பலியாகச் சிலுவையில் ஒப்புக் கொடுப்பதாகவும் கிறிஸ்து தமது சீடர்களுக்கு அடிக்கடி உபதேசித்து வந்தார். அவர்களுக்கோ புரியவில்லை! "அப்பொழுது பேதுரு..., ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே? இது உமக்கு சம்பவிப்பதில்லை!" என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய்" என்று கடிந்து கொண்டார் (மத்தேயு 16:22,23) மேலும்

இயேசுவைப் பிடித்து கைது செய்து கொண்டு போக யூதர்கள் வந்தபொழுது, தற்பாதுகாப்புக்காக பட்டயத்தை உபயோகித்த சீஷனிடம், இயேசு, "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள். நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால். அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான (எண்ணிறந்த) தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய் சம்பவிக்க வேண்டும் என்கிற வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்"? என்றார். (மத்தேயு 26:52-54)

"சிற்சில முஸ்லீம் சகோதரர்கள் இவ்வாறு கேள்வி கேட்கிறார்கள்: மற்றவர்களின் பாவங்களுக்காக கடவுள் எப்படி கிறிஸ்துவை சிலுவையிலறைந்து தண்டிக்கலாம்? ஏனெனில் 2 ராஜாக்கள் 14:6 சொல்லுகிறதாவது. ஆனாலும் பிள்ளைகளினிமித்தம் பிதாக்கள் கொலை செய்யப்படாமலும், அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலை செய்யப்படவேண்டும்" என்று மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி, கர்த்தர் கட்டளையிட்ட பிரகாரம் கொலை செய்தவர்களின் பிள்ளைகளை அவன் கொல்லாதிருந்தான் என்று எழுதியிருக்கிறதே என்கின்றனர். இதற்கு மாறுத்தரமாக நான் கூறுவது. கடவுள் மனுக்குலத்தின் பாவங்களுக்காக கிறிஸ்துவை மரண தண்டனைக்கு உட்படுத்தவில்லை; ஆனால் நம் மீது கொண்ட தமது

அளவற்ற அன்பினால் தாமாகவே, மனப்பூர்வமாக, எவருடைய வற்புறுத்தலுமின்றி நமக்காக நம்முடைய ஸ்தானத்தில் தம்மையே ஒப்புக் கொடுத்தார்.

தம்மைப் பலாத்காரமாகப் பிடித்துக் கொண்டு போக வந்த யூதர்களை நோக்கி "கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக் கொண்டு என்னைப் பிடிக்க வந்தீர்கள். நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தேன். அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே? ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது" என்றார். அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள் (மத்தேயு 26:55,56) எந்தக் குற்றமும் புரிந்ததற்காக இயேசு சிலுவையில் அறையப்படவில்லை என்பது திண்ணம். அவருடைய பேச்சிலோ, செயலிலோ, அல்லது ஆள் தன்மையிலோ யூதர்கள் ஒரு குற்றத்தையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் அவர் நமது பாவங்களுக்காகவே, நமது இடத்தில் நம் பாவங்களை ஏற்றுக் கொண்டவராகச் சிலுவையில் பிராயச்சித்த பலியானார் என்பதுதான் உண்மை. இயேசு கிறிஸ்து சபிக்கப்பட்டவர் அல்ல; பாவம் செய்தவரும் அல்ல ; ஆனால், நமது நிமித்தம் சபிக்கப்பட்டவராக, பாவம் ஆக்கப்பட்டவராக சிலுவையில் தம்மைத்தாமே அர்ப்பணித்தார். அவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய

பரிசுத்தர்! மேற்கூறப்பட்டவைகளிலிருந்து,மேலான நோக்கங்களுக்காகத் தம்முடைய நபிகள் துன்பப்படுத்தப்படுவதற்கும், கொலை செய்யப்படுவதற்கும் இறைவன் இடங்கொடுக்கிறார் என்றும்; தேவ நீதியை சாந்தப்படுத்தவும், நமது பாவங்களை நீக்கவும், நமக்கு மீட்பையும், நித்திய ஜீவனையும் அருளவும் கிறிஸ்து தமது விருப்பத்தின்படியே, மன மகிழ்ச்சியுடன் சிலுவையிலே நமக்காக கிருபாதாரபலியானார். ஆகையால் கிறிஸ்து இயேசுவைப் புறக்கணித்துவிட்டு,தேவன் எந்த ஒரு விசுவாசிக்கும் மன்னிப்பையும் இரக்கத்தையும் காண்பிப்பதில்லை என்பது சத்தியம்.

விசுவாசிகளின் இரட்சிப்புக்காகக் கடவுள் நியமித்திருக்கும், கட்டளையிட்டிருக்கும் ஒரே ஒரு வழி இதுதான். இயேசு கிறிஸ்துதான் – இவருடைய பிராயச் சித்தபலி ஒரே நேரத்தில் ஒரு மிக்க தேவனுடைய நீதி நியாயத்தையும், கிருபை இரக்கத்தையும் நிறைவேற்றுகின்றது. இஸ்லாமிய சட்டத்தைப் பொருத்தவரை அல்லாஹ்வின் நீதிக்கும் இரக்கத்துக்கும் எவ்வித ஒற்றுமையோ, இணக்கமோ, இசைவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. குர்ஆனிலும் சரி. ஹதீத்திலும் (பாரம்பரியங்கள்) சரி, நியாயத்தீர்ப்பு –கணக்கெடுப்பு – மன்னிப்பு ஆகியவற்றை ஏற்புடைய விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு வழி காண்பிக்கப்படவில்லை என்பதனையும் மறந்திடலாகாது. நியாயத் தீர்ப்பைக் குறித்த மட்டும், நமது முஸ்லீம் சகோதரர்கள் இந்த ஒரு வசனத்தையே மேற்கோள் காட்டுகின்றனர்:

வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்குரியவனே! உங்கள் மனதிலுள்ளவற்றை நீங்கள் வெளியிட்டாலும், அவற்றை மறைத்துக் கொண்டாலும் அவற்றை பற்றியும் அல்லாஹ் உங்களை விசாரணை செய்வான். அவன் விரும்பியவர்களை மன்னிப்பான்: அவன் விரும்பியவர்களை வேதனை செய்வான் (2:284)

இந்த வசனம் கூறுகிறபடிதான் கடவுள் நியாயம் தீர்ப்பாரென்றால், அதில் அவருடைய நீதிக்கும் இரக்கத்துக்கும் எவ்விதமான அறிகுறியும் இல்லையே! இறைவன் தமது விருப்பப்படியே எதையும் செய்யும் உரிமையும் ஆற்றலும் கொண்டவர் என்பது உண்மையாயினும் அவர் தாம் உண்டாக்கின சட்ட திட்டங்களை மீறினால், நீதி நியாயங்களைப் புரட்டினால் அது அவருடைய அடிப்படை தெய்வீக குணாதிசயங்களுக்கு மாறுபட்டதாகுமல்லவா? உதாரணமாக உங்கள் உடன்பிறப்பைக் கொலை செய்தவரை கையும் மெய்யுமாகப் பிடித்து, நீதிமன்றத்தில் நிறுத்தி , குற்றத்தை நிரூபித்த பின்னரும், நீதிபதி அவரைத் தண்டிக்காமல் விடுதலை செய்து விடுவாரென்றால் அவரை நீதியுள்ளவரென்று கணிப்பீர்களா? அத்தீர்ப்பை ஏற்றுக் கொள்வீர்களா? அந்த நீதிபதியையே குற்றவாளியாகத் தீர்க்கமாட்டீர்களா? நாட்டின் சட்டம் அவமதிக்கப்பட்டு, நியாயம் புரட்டப்பட்டு, நீதி செத்தது என்று ஓலமிடமாட்டீர்களா! இப்படிப்பட்ட நிலைமையில், தன்மையில்தான் அல்லாஹ்வும் இருக்கிறார் என்பதைச்

சிறிதளவேனும் சிந்தித்துக் கூடப்பார்க்க முடிவதில்லை. அவருடைய பிரமாணங்களைப் பிரதிபலிக்காமலும், பகுத்தறிவுக்கு முரணானதாகவும் இருக்கிறது!

ஒவ்வொருவரின் நன்மை தீமைகளையும், அன்றையதினம் எடைபோடுவது திண்ணம். ஆகவே எவர்களுடைய நன்மையின் எடை கனத்ததோ அவர்கள் தாம் நிச்சயமாக சித்தி பெறுவார்கள். *ஸூரா* (7:8-9)

இந்த வசனங்களின் வாயிலாக கணக்குத் தீர்ப்பு மிகவும் எளிதாக்கப்படுவதாகச் சித்தரிக்கிறது, இம்முறையை எகிப்தியர்களாலும், ஞானசாஸ்திரிகளாலும் பயன்படுத்தப்பட்டது. அதன்மூலமாக ஒருவன் செய்த நன்மைகளும் தீமைகளும் தராசின் இரு பக்கங்களிலும் வைத்து நிறுக்கப்பட்டு, எது அதிகமான பழுவாயிருக்கிறதோ அதன்படியே அல்லாஹ் தீர்ப்பளிக்கிறார். நன்மைகள் கூடுதலாக இருந்தால் மன்னிப்பும் மகிமையும் பெற்று சுவர்க்கத்திலும்; பொல்லாப்புகள் பாரமாக இருந்தபடியால் நஷ்டப்படுகிறவர்களில் ஒருவராக, நாசமடைந்து நரகத்திலும் நித்தியமாக வாதிக்கப்படுவார். இது உண்மையாயிருக்க முடியாது; ஏனெனில் மனிதர் யாவரும் நாடும் பரலோகத்தில் பூரண பரிசுத்தமும், நீதியும் உடையவர்கள் மாத்திரமே பிரவேசிக்கக்கூடும். ஆதலால் ஒரு பாவம் செய்தவனும், மீறி விட்டதால் அசுத்தனாயிருக்கிறான். இந்நியையில் அவன் சுவர்க்கத்தை எட்டிக்கூட பார்க்க முடியாது! இதனை இன்னமும் அதிகத் தெளிவாக்க இதோ ஒரு சான்று.

தூய்மையான வெள்ளை ஆடை அணிந்தவராக தொழுகைக்குச் செல்லும் வழியில் முஸ்லிம் நண்பரின் ஆடையின்மீதோ, ஆளின்மீதோ ஒரு சிறிய சகதித்துளியோ,

காக்கா எச்சமோ விழுந்து விட்டதாக கொள்வோம். இப்பொழுது அவர் அசுத்தமாகி விட்டதாகக் கருதப்படுவாரல்லவா? இச்சூழலில் அவர் மீண்டும் தம் இல்லத்துக்குத் திரும்பி தன்னைச் சுத்திகரித்துக் கொண்ட பின்னர் தானே அவர் தொழுகை செய்ய இலாயக்குள்ளவர் ஆகிறார். சுத்தம் அசுத்தம் என்பதைப் பொருத்தவரை கடவுளின் சந்நிதியில் மனிதனும் இவ்வாறே காணப்படுகிறான். பூரண சுத்திகரிப்பும், புதிதான இருதயமும் பெற்றுக் கொள்ளும் வரை அவன் பரலோகத்தில் குடியிருக்கத் தகுதி பெறவில்லை. புதிய இருதயத்தையும், சுபாவத்தையும் பெற்றுக் கொள்ளாத வரை, அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டாலும் உள்ளத்தில் பாவம் பதுங்கியிருப்பதால் அவன் பரலோகத்திற்கும் பாத்திரவான் இல்லை; எந்த நேரத்திலும் கலவரமும் அமைதியின்மையும் ஏற்படலாம்! சில காலம் அக்கினியில் கிடந்து அவதிப்படுவதால் சுத்திகரிப்பு கிடைக்குமா என்றால் அதுவும் கிடையாது என்று குர்ஆன் தன் முடிவை வெளியிடுகிறது.

وَإِنْ مِّنكُمْ إِلَّا وَارِدُهَا ۚ كَانَ عَلَىٰ رَبِّكَ حَتْمًا
مَّقْضِيًّا ۝ ثُمَّ نُنَجِّي الَّذِينَ اتَّقَوا وَّنَذَرُ الظَّالِمِينَ
فِيهَا جِثِيًّا ۝

அதனை கடக்காது உங்களில் எவருமே தப்பிவிட முடியாது. இது உமது இறைவனிடம் முடிவுகட்டப் பெற்ற மாற்ற முடியாத தீர்மானமாகும். ஆனால் நாம் பரிசுத்தவான்களை

இரட்சித்துக் கொள்வோம். அக்கிரமக்காரர்களை, அவர்கள் முழந்தாழிட்டவர்களாக குனிந்திருக்கும் நிலையில் அதில் தள்ளி விடுவோம் (19:71,72)

மனிதனின் மாறுபாடு நிறைந்த, திருக்கும் கேடும் உள்ள இருதயமும், மனிதத்தன்மையும் மாற்றப்படாவிட்டால், அவன் சுவர்க்கத்திற்கும், சுவர்க்கம் அவனுக்கும் இலாயக்குள்ளதல்ல. அங்ஙனமே திருடனைப் பிடித்து அடிப்பதாலும், களவு செய்த ஒரு கையையோ, இரண்டினையுமோ தறித்து எறிந்து போடுவதாலும், அவனுடைய திருட்டு சுவாபமும், விபச்சாரத்தில் பிடிபட்டோரை பொது இடத்தில் கசையடி கொடுப்பதால் காம இச்சையும் அவர்களை விட்டு நீங்கி விடுவதில்லை. இந்தத் தண்டனை அவர்களின் உக்கிரத்தை கிளப்பி, பாவ சுபாவத்துக்குப் தூபம் போடுவது போலத் தானிருக்கும். தண்டனை கொடுப்பது தீய சுபாவத்தை மாற்றிவிடாது!

"மனிதனுடைய மனம் பாவம் செய்யும்படி தூண்டக்கூடியதாகவே இருக்கின்றது" (12:53). இதற்கு சரியான பரிகாரம் கிறிஸ்தவத்தில் நேரடியாகச் சொன்னால் பரிசுத்த வேதாகமத்தில் மட்டுமே உள்ளது. இது யாரும் மறுப்புத் தெரிவிக்க முடியாத தேவ ஏற்படாகும். கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாகத் தேவனின் கிருபாசனத்தை அடையலாம். பணிவுடன் கிறிஸ்துவின் பலியை அங்கீகரித்துக் கொண்டு, பாவ மன்னிப்பையும், பரிசுத்த ஆவியானவர் தாம் வாசம் பண்ணும்படி ஈவாக,

இலவசமாகத் தருகின்ற நவமான இருதயத்தையும் பெற்றுக் கொண்டு பரலோகம் செல்லத் தகுதி பெறலாம்.

நிச்சயமாக அல்லாஹ், ஓர் அணுவளவும் அநியாயம் செய்வதில்லை. ஆயினும், ஓர் அணுவளவு நன்மை இருந்தால்கூட, அதனை இரட்டித்து தன்னருளைக் கொண்டு மகத்தான கூலியை கொடுக்கின்றான் (4:40)

இவ்வசனம் அல்லாஹ்வை மிகவும் தயவுள்ளவராகச் சித்தரித்தபோதிலும், ஒரு நன்மையை இரட்டிப்பாக்குவது நியாயமாகாது என்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள்.

ஒவ்வொரு மனிதனின் செயலைப் பற்றிய விரிவான தினசரி குறிப்பை அவனுடைய கழுத்தில் மாட்டி இருக்கிறோம். மறுமை நாளில் அதனை அவனுக்கு ஒரு புத்தகமாக எடுத்துக் கொடுப்போம் அவன் அதனை விரித்துப் பார்ப்பான் ஸூரா (17:13)

ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர்த்தெழுதலின் நாளிலே அவனுடைய செயல்கள் பதிவாகியுள்ள ஒரு புத்தகம் திறந்து வைக்கப்படும் என்பதாக இவ்வசனம் கூறுகிறது. அவன் அதனை வாசித்து தன்னை நியாயம் தீர்த்துக் கொள்வான். ஆகிலும் எவ்வாறு இந்தப் புத்தகம் எழுதப்படுகிறது என்றோ, ஒவ்வொருவரும் எந்த அடிப்படையில், எந்த அளவுகோல் அல்லது விதிமுறையைக் கொண்டு நியாயந் தீர்ப்பான் என்றோ ஒரு விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

وَأَقِمِ ٱلصَّلَوٰةَ طَرَفَيِ ٱلنَّهَارِ وَزُلَفًا مِّنَ ٱلَّيْلِ
إِنَّ ٱلْحَسَنَٰتِ يُذْهِبْنَ ٱلسَّيِّـَٔاتِ ذَٰلِكَ ذِكْرَىٰ لِلذَّٰكِرِينَ

நிச்சயமாக நன்மைகள் பாவங்களை போக்கிவிடும் (11:114)

ஒரு நற்செயல் மற்றொரு துர்ச்செயலை நீக்கி விடுகிறது என்பது தான் பொருளாகும். நற்கிரியைகள் துர்க்கிரியைதான் விஞ்சுமானால் விண்ணுலகையடையலாம். இல்லாவிடில், அழிவும், நாசமும், நரகமும் தவிர்க்க முடியாதவையாகும். "தனது புண்ணியக் கிரியைகளுக்கும் பலன் இல்லாமற் போயிற்றே" என்று ஒருவனாகிலும் கடவுளுக்கு எதிராகப் புகார் செய்ய முடியாது; "துன்மார்க்கரும் – தங்கள் துர்க்கிரியைகள் அதிகமாக இருப்பதால் பின்னர் நரகத்திற்குச் சென்றாலும்– அவர்களது நற்கிரியைகளுக்கு தக்க நல்ல பலனை இவ்வுலகிலேயே அடைந்துவிடுகின்றனர்" என்பதாக இஸ்லாமியப் பேரறிஞர்கள் சொல்லுகின்றனர். அவரவர் கிரியைகளுக்குரிய கணக்கெடுப்பு நீதியாக நிறைவேற்றப்படுகிற வேளையில், எல்லாச் சிருஷ்டிகளும் தங்களுக்கிழைக்கப்பட்ட தீங்குக்குச் சரியாக பழிவாங்கிவிடுவார்கள். துன்புறுத்தினோரைத் துன்பப்படுத்துவர்: கொள்ளையடித்தோரைக் கொள்ளயடிப்பார்: நஷ்டப்பட்டோருக்கு நஷ்டஈடும்: ஒடுக்கப்பட்டோருக்கு ஒடுக்கினவர்களிடமிருந்து தக்க பரிகாரமும் கிடைக்கும். இதனையே "வழக்காடுதலும்,

கைம்மாறு செய்தலும், அநீதங்கள் நிவர்த்தி செய்யப்படுதலும் ”
என்று முஸ்லீம்கள் அழைக்கின்றனர் அதன்படியே தேவ தூதர்கள் தீங்கிழைத்தோர், ஒடுக்கினோர் ஆகியவர்களின் நன்மைகளிலிருந்து தீங்கிழைக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், கொடுமை செய்யப்பட்டோர் அடைந்த துன்பங்கள், நஷ்டங்களுக்கு சரியாய்ப் பறிமுதல் செய்தல் பதிலீடு செய்வார்களாம். இவ்வாறு சரிக்குச் சரிக்கட்டின பிற்பாடு, நிறுத்துப் பார்க்கையில் ஒருவருடைய புண்ணியங்கள் அவரது தீச்செயல்களைவிட அணுவளவு கூடக்காணப்பட்டாலும், கருணை மிகுந்த அல்லாஹ் அதனை இரட்டிப்பாக்கி சுவர்க்கமளிப்பார். அதே போன்று, ஒருவரது துர்க்கிரியை அணுவளவு கூடிவிட்டாலும், அவர் துன்பப்படுத்தினவர்களின் பாரங்களிலிருந்து எடுத்து, அதனை இரட்டிப்பாக்கி, தனது மற்றும் தான் தீங்கிழைத்தவர்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டு, நித்திய அக்கினியிலே தள்ளப்படுவார். இது மனித நீதியிலும் தாழ்ந்ததாகும் – இது நீதியே அல்ல; அநீதிதான்!

இவற்றால் நாம் நமது குறிக்கோளை அடைகிறோமா? என்பது தான் சிந்திக்க வேண்டிய காரியம். மேற்கூறிய அநீதியான, அசத்தியமான விளக்கங்கள், இருதயத்தை எவ்விதத்திலும் சுத்திகரித்து, பாவக்கறை, பாவக்கசப்பு, பாவத்தீட்டு, பாவ விளைவு, பாவவேர், பாவ சுபாவம் முதலானவற்றைக் களைந்தெறிந்து உள்ளத்தில் ஒளிந்திருக்கும் கள்ளத்தை நீக்கி, பாவத்தை வெறுத்து, பரிசுத்தத்தையே நாடும் நலமான இருதயத்தைப் பெறுவதற்கு ஏதாவது வழி காண்பிக்கின்றதா? முற்றிலும் பரிசுத்தராகிய தேவனின் வீட்டிற்குள் அவரைப் போன்ற பரிசுத்தமுள்ளவர்தானே நுழைய முடியும்!

தவ்றாத்திலும், இன்ஜீலிலும் தேவன் ஏற்படுத்தினதும், நியமித்ததுமான இரட்சிப்பின் வழியே மனிதர் யாவருக்குமுரிய இலட்சியமான அறவழி என்பதில் சற்றேனும் ஐயமில்லை. நித்தியமாக பரதீசில் இறைவனுடன் வாழவேண்டுமானால், இவ்வழியைப் பின்பற்றி, பாவ மன்னிப்பு, புதிய இருதயம், உள்ளச் சுத்திகரிப்பு அடைவது அவசியம். தேவன் இந்த மெய்ஞானத்தை எல்லோருக்கும் நல்குவாராக.

## நான்காவது பகுதி

# கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது குறித்து - குர்ஆன்

சிலுவையில் ஒருவர் அறையப்பட்டது வாஸ்தவம் ஆனால் அது கிறிஸ்து அல்ல; கிறிஸ்துவின் சாயல் இறங்கின, கிறிஸ்துவைப் போலக் காணப்பட்ட ஒருவரே சிலுவையில் அறையப்பட்டார் என்று முஸ்லீம்கள் எண்ணுகின்றனர். குர்ஆனிலுள்ள ஒரு வசனம் இதற்கு அநுகூலமாக இருப்பதுபோலத் தோன்றுகிறது:

“அல்லாஹ்வுடைய தூதர், மரியமுடைய மகன் ஈஸாமஸீஹை, நிச்சயமாக நாம் சிலுவையில் அறைந்து கொலை செய்துவிட்டோம்,” என்று அவர்கள் கூறியதன் காரணமாகவும் அவர்களைச் சபித்தோம். அவர்கள் அவரை வெட்டவுமில்லை; அவரை அவர்கள் சிலுவையில் அறையவும் இல்லை. அவர் இருந்த அறைக்குள் அவரை தேடிச் சென்றவன், அவரைப்போல் ஆக்கப் பட்டு விட்டான். தேடிச் சென்ற மற்றவர்கள், அவனையே சிலுவையில் அறைந்தனர். இதனால் அவர்கள் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டு விட்டனர். ஆகவே, எவர்கள் இதற்கு மாறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களோ அவர்கள், வீண் சந்தேகத்திலேயே ஆழ்ந்து விட்டனர். நிச்சயமாக அவர்கள் அவரை வெட்டவே

இல்லை. எனினும் அல்லாஹ் அவரை தன் அளவில் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் யாவரையும் மிகைத்தோனும் ஞானமுடையோனுமாயிருக்கின்றான் (4:157,158).

இது ஒரு குழப்பம் நிறைந்த வாக்கியமாக இருக்கிறது. யூதர்கள் கிறிஸ்துவைச் சிலுவையிலறையவே பிடித்துக் கொண்டு போனார்கள்; ஆனால் அவரை அல்ல, அவரைப் போன்ற சாயலுடைய வேறொருவருரைச் சிலுவையில் அறைந்தார்கள் என்பது விந்தையான சந்தேகம். மேலும் "நாம் அதைப் பார்க்கவில்லை" என்று அரபிக்கில் இருப்பதால், கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை நேரடியாக நிராகரிப்பதில் எத்தனை தயக்கம்!

அவரை உறுதியாக அவர்கள் கொல்லவே இல்லை என்ற குர்ஆனின் சொற்றொடர்க்கு, அவருடைய உண்மையான ஆள் தத்துவத்தை எவரும் தாக்கவோ, அதற்குப் பங்கம் விளைவிக்கவோ முடியாது. சொல் விளக்கம் தரலாம். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைவதின்மூலம், அவரை அவமானப்படுத்தி, மனிதர்களும் அவர் பெயரை கேலிக் கூற்றாக்கி, அவரின் நினைவையே அற்றுப் போகச் செய்திடலாம் என்று யூதர்கள் எதிர்பார்த்தனர். இதில் அவர்கள் படுதோல்வியடைந்தார்கள் என்பதனை இவ்வசனம் சுட்டிக் காட்டுகிறது. இவர்களின் செயலால் இயேசு நாதரின் பெயருக்கு அபகீர்த்தி உண்டாவதற்குப் பதிலாக, நற்கீர்த்தியும், பெருமையும், புகழும் பாரெங்கும் பரவி அவர் திருநாமம் மகிமைப்பட

ஏதுவாயிற்று. மேலும் அவர் உலகிற்கு வந்த நோக்கமும் நிறைவேறிற்று. சரீரமரணம் அவரை அழித்துப் போடவில்லை: ஏனென்றால், மனிதனால் சரீர ஜீவனைத் தான் அணைத்துப்போட முடியுமே தவிர, மெய்யான ஆள் தத்துவத்தை ஆத்துமாவையும், ஆவியையும் தீண்டமுடியாதே; எங்ஙனம் தீங்கிழைக்கக் கூடும்! சரீரத்தில் சாவினைத் தழுவிய இயேசு கிறிஸ்துவை தேவன் மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பினார். அவர் மரித்ததே உயிர்ப்பதற்குத் தான்.

கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததன்மூலம் யூதர்கள் ஏன் வெற்றி பெறவில்லை! மாறாகத் தோற்றுப் போனார்கள் என்பதை மேலும் தெளிவுபடுத்த, இதோ ஒரு எடுத்துக்காட்டு. நான் உங்களை நிந்தித்து, சபித்து, சிறுமைப்படுத்துகிறேன் என்று வைத்துக் கொள்வோம். நீங்களோ பெருந்தன்மையுள்ளவரானதால், அதனைப் பொருட்படுத்தாது, பதிலுக்குப் பதில் செய்யாமலிருக்கிறீர்கள். விளைவு என்ன? சகோதரனே, நீர் என்னைத் துன்புறுத்தவும், இழிவுபடுத்தவுமில்லை; ஆனால், நான் சாந்தமுடன் சகித்துக் கொண்டதால், மற்றவர்கள் முன்னிலையில் எனது மதிப்பை உயர்த்தி, என்னைக் கவுரவப்படுத்தியிருக்கிறீர்; அதே வேளையில் உமது அநாகரீக நடத்தையால் உமது கயமை வெளிப்பட்டிருக்கிறது. என்று நீங்கள் கூறினால் அது முற்றிலும் நியாயமல்லவா. நிற்க, முடிவாக நோக்குமிடத்து, யூதர்களல்ல, ரோம சர்க்காரின் (கவர்னர்) தேசாதிபதி பிலாத்து கிறிஸ்துவைச் சிலுவையிலறைய ஆணையிட்டான்!

அவர் போன்று ஒருவர் ஒப்பாக்கப்பட்டார் அவரையே அவர்கள் சிலுவையில் அறைந்தனர் என்று வசனம் கூறும்பொழுது, “அவர் யார்? எங்கிருந்து வந்தார்? அவருக்கு ஏன் இந்தக் கதி? அந்த அப்பாவி மனுஷனுக்கு ஏன் இந்த அநியாயம் இழைக்கப்பட்டது”? என்று கேள்விக்கு மேல் கேள்வி எழும்புகின்றது. கிறிஸ்துவை சிலுவையில் அறையவிடாமல் , தடுக்கவும் காப்பாற்றவும் கடவுள் நினைத்திருப்பாரென்றால், அங்கு குழுமியிருந்த யாவரும் காணவும், கண்டு அதிசயிக்கவும், பிரம்மிக்கவும் தக்க விதத்தில், மிகத்தெளிவாக தமது ரஸூலை தீர்க்கதரிசியை தம்மிடமாய் பரத்துக்கு எடுத்துக் கொண்டிருக்க மாட்டாரா? யூதவெறியர்கள் கிறிஸ்துவை வாரால் அடிக்கவும், முட்கிரீடம் தரிக்கவும், அனுமதிப்பாரா? தேவன் சர்வ சக்தியுள்ள அல்லாஹ் தமது தீர்க்கத்தரிசியை ஒருவரும் துன்புறுத்தவும், சிறுமைப்படுத்தவும் முடியாது என்பதனை நிரூபிக்க நேரடியாக கிறிஸ்துவை மீட்டிருக்க மாட்டாரா? அவருக்குப் பதிலாக அவரைப்போன்று தோற்றமளிக்கும் வேறொருவரை சிலுவையில் அறையப்பட வழிவகுத்து, நம்மெல்லாருக்கும் ஏன் குழப்பத்தை விளைவிக்க வேண்டும்! இவ்வாறு செய்வதால் தேவ வல்லமையால் எவ்வாறு அந்த யூத ஜனத்துக்கு விளங்கச் செய்ய முடியும்? கிறிஸ்துவுக்குக் களங்கமுண்டாதிருக்க முஸ்லிம்கள் புனைந்திருக்கும் இந்தக் கற்பனைக் கதை அவர்கள் நாடுகின்ற முடிவை நமக்கு அளிக்கவில்லை. சிலுவை மரணம் தமது பரிசுத்தத்திற்கும் மகத்துவத்திற்கும் இழுக்குண்டாக்கும் என்று தேவன் கருதியிருந்தால், இந்த ‘அற்புதம்’ அவருடைய அலட்சிய புத்தியை வெளிப்படுத்தவில்லையா? கிறிஸ்துவை தம்மிடமாய் தேவன் எடுத்துக் கொண்ட போதிலும், முஸ்லீம்களின் நம்பிக்கையின்படி கிறிஸ்துவைப் போன்ற

ஒருவர், கிறிஸ்து அறையப்படவேண்டிய சிலுவையில் அறையப்படவில்லையா? என்ன அபத்தம்?

கிறிஸ்து மெய்யாகவே மரித்தார் என்பதைப் பகிரங்கமாகப் பறைசாற்றா விட்டாலும், சூசகமாகத் தெரிவிக்கும் வாக்கியங்கள் பல குர்ஆனில் இல்லாமலில்லை. தெளிவில்லாத முந்தின வசனங்ளை நமக்குப் புரிய வைக்க எடுத்துக்காட்டாக,

إِذْ قَالَ ٱللَّهُ يَٰعِيسَىٰٓ إِنِّى مُتَوَفِّيكَ وَرَافِعُكَ
إِلَىَّ وَمُطَهِّرُكَ مِنَ ٱلَّذِينَ كَفَرُوا۟ وَجَاعِلُ ٱلَّذِينَ ٱتَّبَعُوكَ
فَوْقَ ٱلَّذِينَ كَفَرُوٓا۟ إِلَىٰ يَوْمِ ٱلْقِيَٰمَةِ ثُمَّ إِلَىَّ مَرْجِعُكُمْ
فَأَحْكُمُ بَيْنَكُمْ فِيمَا كُنتُمْ فِيهِ تَخْتَلِفُونَ ٥٥

“ஈஸாவே நிச்சயமாக நான் உம்முடைய ஆயுளை பூர்த்தி செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரிப்போரின் அவதூற்றிலிருந்து உம்மைப் பரிசுத்தமாக்கி வைப்பேன். உம்மை பின்பற்றுவோரை, நிராகரிப்போர் மீது மறுமை நாள் வரையில் மேலோக்கியும் வைப்பேன்”. *ஸூரா* (3:55)

“முத்தவஃபீக்க என்ற மூலப்பதம் (Mutawaffeeka) “உம்மை நித்திரைக்குள்ளாக்குவேன்” என்று பொருள் தருகிறது, என்பதாக சில வியாக்கியானிகள் கூறுகின்றனர். ஒருவரை முதலில் உறக்கத்துக்குட்படுத்தி விட்டு, பின்னர் எழுப்புவது என்றால் என்ன அர்த்தம் என்பதை இக்காலத்து வியாக்கியானிகள் தான் எடுத்துரைக்க வேண்டும்.

உண்மையாகக் கூறுமிடத்து, இவ்வசனம் ஈஸா மஸீஹின் மரணத்தைத்தான் குறிப்பிடுகிறது. இதற்கு இபின் அப்பாசும், முகம்மது இபின் இஷ்ஹாக்கும் ஆதரவு தெரிவிக்கின்றனர். ஆனால் எவ்வளவு நேரம் மரித்த நிலையில் இயேசு இருந்தார் என்பதில்தான் கருத்துப் பேதமிருக்கிறது. வஹாப் மூன்றுமணி நேரமெனவும், முகம்மது இபின் இஷ்ஹாக் ஏழு மணி நேரமெனவும், இமாம் அல்னபதாவி மூன்று மணி நேரமெனவும் தீர்மானிக்கின்றனர். அல்ராபி இபின் அன்ஸ் கூறுவதாவது, கிறிஸ்துவை மெய்யாவே மரிக்கச் செய்து, பின்னர் மோட்சத்துக்கு எடுத்துக் கொண்டார். தவஃபா **(Tawaffa)** என்றால் கடவுள் ஒருவரை இறக்கச் செய்கிறார். அவருடைய ஆத்துமாவை எடுத்துக் கொண்டார் என்று அகராதியில் அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

முத்தவஃபீக்க என்ற பதமும்,அதன் திரிபுகளும் (தவஃபா போன்றவை) குர்ஆனில் 23 தடவைகள் வருகின்றன; அவற்றுள் இரண்டு சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் பூர்த்தியான மரணத்தையே குறிப்பிடுகின்றன. விதிவிலக்கான அந்த இரு சந்தர்ப்பங்களிலும் தூங்குவதை சாக்காட்டிற்கு ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறது.

மனிதர்களே! இரவில் நீங்கள் நித்திரை செய்யும் போது அவன் தான் உங்கள் உணர்ச்சியை நீக்கி உங்களை இறந்தவர்கள்போல் ஆக்குகின்றான். நீங்கள் பகலில் செய்பவற்றையும் அவன் நன்கறிகின்றான் (6:60)

மனிதர்கள் இறக்கும்பொழுதும் இறக்காமல் நித்திரையில் இருக்கும்பொழுதும், அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகின்றான் ஸூரா (39:42)

சில வியாக்கியானிகள், முத்தவஃபீக்க என்ற பதத்திலுள்ள வா (Waw) என்ற 'மற்றும்' என்று அர்த்தம் கொள்ளும் இணைச்சொல் விளையாட்டுப்பதமாகவும், படிப்போருக்குப் புதிராகவும் இருக்கிறது. அவர்களுடைய அபிப்பிராயப்படி, கிறிஸ்து மறுபடியும் இவ்வுலகிற்கு வந்து இயற்கை மரணம் எய்துவார். ஓ! தேவனே! எங்களை இப்படிப்பட்ட வஞ்சகத்திலிருந்தும் இரட்சிப்பீராக! அந்த வாக்கியங்களின் வார்த்தைகளை யதார்த்தமென, எழுத்தளவில் எடுத்துக் கொள்வதினால் முஸ்லிம்களுக்கு என்ன நஷ்டம்? அதாவது, தேவனுடைய சித்தப்படியே, நமது பாவங்களுக்காக, கிறிஸ்து சிலுவையிலே மரித்தார்; பின்னர் உயிர்த்தெழுந்தார்; மறுபடியும் மகிமையிலே திரும்பிவருவார்!

அவர் (யோவான் அல்லது யஹ்யா) அவர் பிறந்த நாளிலும், அவர் இறக்கும் நாளிலும், மறுமையில் உயிர்பெற்றெழும் நாளிலும் அவர்மீது சாந்தியும் சமாதானமும் நிலைத்திருக்கும் (19:15) ஒப்பிட்டுப் பார்க்க (19:33).

யஹ்யாவைப்பற்றி கூறும் வசனத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளுகிற முஸ்லிம்கள், ஈஸாவைப் பற்றி கூறும் வசனத்தை ஏன் அப்படியே விசுவாசிக்க மறுக்கிறார்கள்? முந்தின் வசனத்தின் யஹ்யா மரிப்பது உண்மையென்றால், பிந்தின வசனத்தின்படி ஈஸாநபியும் மரிப்பது உறுதிதானே.

ஏனெனில் இரு வசனங்களும் ஒன்றையே ஊர்ஜிதப்படுத்துகின்றன; வார்த்தைகளும், வாக்கிய அமைப்பும் ஒன்று போலிருக்கின்றன.

وَأَقِمِ ٱلصَّلَوٰةَ طَرَفَيِ ٱلنَّهَارِ وَزُلَفًا مِّنَ ٱلَّيْلِ
إِنَّ ٱلْحَسَنَٰتِ يُذْهِبْنَ ٱلسَّيِّـَٔاتِ ذَٰلِكَ ذِكْرَىٰ لِلذَّٰكِرِينَ

நான் எங்கிருந்தபோதிலும், அவன் என்னை மிக்க பாக்கியவானாகவே ஆக்குவான். நான் ஜீவித்திருக்கும் வரையில், தொழுகையை கடைபிடித்தொழுகும் படியும், ஜக்காத்துக் கொடுத்து வரும்படியும் அவன் எனக்கு உபதேசிக்கின்றான் (19:31) என்பதாக ஈஸாவே இங்கு தெரிவிக்கிறார். ஜக்காத் என்றால் இறையாணைப்படி ஒரு முஸ்லீம் தனது அடிமையல்லாத (ஹஷீம்) இன்னொரு முஸ்லீமுக்கு (தரித்திரப்பட்ட) கொடுக்க வேண்டிய கட்டாயப் பணத்தொகையாகும். குர் ஆனில் 'ஜக்காத்' என்ற பதம் எங்கு காணப்பட்டாலும் அது பணத்தையே குறிப்பிடுகிறது. எனவே முஸ்லிம்கள் யூகிக்கிறபடியும், கற்பிக்கிறபடியும் இயேசுவானவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பார் என்றால், இந்தக் கட்டளையை அவர் எங்கு, எப்படி நிறைவேற்றுவார்? அவர் அவ்வாறு தர்மம் செய்ய ஏழை முஸ்லிம்கள் சுவர்க்கத்திலுண்டா? அல்லது கிறிஸ்து மரிக்கவில்லை; பூமியிலேதான் சஞ்சரித்துக் கொண்டிருப்பாரென்றால்,அவர் எங்கே இருக்கிறார்? யாருக்கு ஜக்காத் (நன்கொடை) வழங்கிக் கொண்டிருக்கிறார்?

அவர் இப்பொழுது இவ்வுலகில் ஜீவித்துக் கொண்டும், ஜக்காத் செய்து கொண்டுமிருக்கவில்லை என்று நிச்சயமாக நாம் அறிகின்றபடியால், அவர் மெய்யாகவே மரித்தார். ஆதலால் தர்மம் அளிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமான கடமை அவரைவிட்டு நீக்கப்பட்டது.

مَا قُلْتُ لَهُمْ إِلَّا مَا أَمَرْتَنِي بِهِ أَنِ اعْبُدُوا اللَّهَ رَبِّي وَرَبَّكُمْ ۚ
وَكُنتُ عَلَيْهِمْ شَهِيدًا مَّا دُمْتُ فِيهِمْ ۖ فَلَمَّا تَوَفَّيْتَنِي كُنتَ أَنتَ
الرَّقِيبَ عَلَيْهِمْ ۚ وَأَنتَ عَلَىٰ كُلِّ شَيْءٍ شَهِيدٌ

நான் அவர்களுடன் இருந்தவரையில், அவர்களின் செயலை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். நீ என்னைக் கைப்பற்றிய பின்னர், நீ தான் அவர்களை கவனித்தவனாக இருந்தாய், யாவற்றிற்கும் நீயே சாட்சி (5:117) என்ற வசனத்திற்குப் பொழிப்புரை வழங்குகையில் அல்ராசியும், அல்ஜலாலனும், "இவ்வாறு ஈஸாமஸிஹ் கணக்கெடுப்பு நாளிலே அல்லாஹ்விடம் கூறுவார்" என்று கூறுகின்றனர். என்னை கைப்பற்றியதும் என்ற சொற்றொடருக்கு "பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் என்று அர்த்தப்படுத்துகிற அல்ராசி 3:55ம் வசனத்திற்கு வியாக்கியானம் கூறும் பொழுது அவரை நித்திரைக்குள்ளாக்குவேன்" என்று முன்னர் அர்த்தப்படுத்தினதை மறந்து விட்டார். நித்திரைக்குள்ளாக்குவேன் என்றால் "மேலே எடுத்துக் கொள்வேன்" என்று அல்ராசியுடன் அர்த்தப்படுத்தினால், கிறிஸ்து ஒருபோதும் சாக மாட்டார் என்று பொருளாகிறது. இது குர்ஆனின் அடிப்படைப் போதனைக்கே சாவு மணி

அடிப்பதாகும். ஏனெனில், "பூமியாகிய இதன்மீது இருக்கின்ற ஒவ்வொன்றும் அழிந்துவிடக் கூடியதுதான் வல்லமையும், சங்கையும் உடையவனான உம்முடையரப்பின் திருமுகம் மட்டுமே நிலைத்திருக்கும்" என்று ரஹ்மான் - அளவற்ற அருளாளன் (55:26-27) "வசனங்களும்" அவனுடைய உள்ளமையைத் தவிர மற்ற (பொருட்கள்) அனைத்தும் அழியக்கூடியவையே! "என்று வரலாறுகள் (28:88) வசனமும் ஐயந்திரிபரக் கூறுகின்றன.

முந்தின பத்தியில் நாம் பார்த்த குறிப்புகள், கிறிஸ்து ஏற்கெனவே மரித்துவிட்டார் என்ற சில முஸ்லிம்களின் நம்பிக்கைக்கும்; இல்லை, இனி மேல்தான் உயிர்த்தெழுதலின் நாளைக்கு முன்பு, இவ்வுலகில் மீண்டும் வந்து மரிப்பார் என்ற மற்ற முஸ்லிம்களின் எதிர்பார்க்குதலுக்கும் பெருத்த முரண்பாட்டை உண்டாக்குகிறது. வசனத்தில் கூறப்பட்ட படியே விசுவாசிப்பதினால் என்ன தீமை விளைந்து விடும்? "உம்மை என்னிடமாய் எடுத்துக் கொள்வேன்" (முத்தவஃபீக்க) என்பதற்கு "மரணம்" அல்லது "மரிப்பார்" என்றே பொருள்படும். மேலும் இது குர்ஆன் எழுதப்படுவதற்கு முன்பே சொல்லப்பட்ட வார்த்தைகள் என்று இவ்வசனத்துக்கு முன்னுரையில் நாம் வாசிக்கிறோம். அப்படியிருப்பின், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். பின்னர் மரித்தார் என்ற தவ்றாத், இன்ஜீலின் விசுவாசத்துக்கும் குர்ஆன் வெளிப்படுத்துவதற்கும் விகற்பமில்லை; வாக்குவாதமில்லை; இரண்டும் இசைந்து, ஒரே கருத்தையே வலியுறுத்துகிறது.

ஓ! என் அருமைத் தேவனே உமது சத்தியத்தை உள்ளார்ந்த மனதோடு தேடுவோருக்கு தெரியப்படுத்தி, தேவைப்படுவோருக்கு உமது வெளிச்சத்தை அனுப்புவீராக; ஒப்பற்ற, மகாசிறந்த கொடையாளராகிய உம்மிடம் கெஞ்சி மன்றாடுகிறோம். ஜெபம் கேளும் கிருபாசனபதியே!

**தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**

**யோவான் 3:16**

# ஐந்தாவது பகுதி

# கிறிஸ்துவின் சிலுவையும் சரித்திரமும்

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சம்பவம் மனிதனின் கண்டுபிடிப்பு அல்ல. அது சரித்திர பூர்வமான உண்மையாக இல்லாமல்,மனிதனின் மனோராஜ்யமாக அல்லது கண்டுபிடிப்பாக இருக்குமானால், நிச்சயமாகக் கிறிஸ்தவர்கள் தங்கள் தலைவரும், தீர்க்கதரிசியும், இரட்சகரும், கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு இப்படிப்பட்ட மானபங்கமான முடிவு ஏற்பட்டதாக பகிரங்கப்படுத்தமாட்டார்கள் "...மரத்திலே தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்" (உபாகமம் 21:23) என்று மோசேயின் நியாயப்பிரமாணம் அறுதியிட்டு உறுதிகூறுவதால், கிறிஸ்துவின் மரணம் எப்பேற்பட்டது? கிறிஸ்து உண்மையிலேயே சபிக்கப்பட்டவரா? ஆனால், இன்ஜீல் கூறுவது என்ன? "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" (கலாத்தியர் 3:13) கிறிஸ்தவர்கள் தங்கள் தலைவருடைய சிலுவை மரணத்தை

அறிக்கை செய்து ஊர்ஜிதப்படுத்துவதுடன், தங்களுடைய இரட்சிப்புக்கும் சகல ஆசீர்வாதங்களுக்கும் – தங்களுக்கு மட்டுமல்ல. இந்த உண்மையை விசுவாசித்து அறிக்கை செய்கிற எல்லோருக்கும் அஸ்திபாரமும், ஆரம்ப ஸ்தானமுமாக இருக்கிறதென மிகவும் பெருமையுடன் கருதுகின்றனர். விசுவாசிக்கின்றனர், விளம்பரமும் செய்கின்றனர். எங்கும், என்றும், எவராலும் மறைக்கவோ, மறக்கவோ, மாற்றவோ முடியாத இயேசு கிறிஸ்துவின் மரணம் சகல நல் ஈவுகளுக்கும், குறிப்பாக பாவமன்னிப்புக்கும், பாவியின் மீட்புக்கும் உத்தரவாதம் அளிக்கிறது, எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரலாற்றுச் சிறப்பும், அடிப்படையும் கொண்டதாக இருக்கின்ற காரணத்தால், இதற்கான சரித்திர ஆதாரங்களை நம்முடைய முஸ்லீம் சகோதரர்களுக்கு அளிக்கலாமென ஆசிக்கிறேன்.

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 1050 ஆண்டுகட்கு முன்பிருந்தே, கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ப்பு மற்றும் வாழ்க்கைச் சரித்திரங்களை, தீர்க்கதரிசிகளாகிய, தாவீது, ஏசாயா, தானியேல் இன்னும்பல தீர்க்கதரிசிகள் முன்னறிவித்து வந்தனர். அதிலும் சிறப்பாக அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை அதிகமுக்கியப்படுத்தியிருக்கின்றனர். உண்மையில் நோக்குமிடத்து, சிலர் கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் இடம், காலம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அடையாளங்களையும், சூரியன் ஒளிகொடாதிருத்தல், பூமி அதிர்ச்சி முதலான அடையாளங்களையும் தெளிவாக,

நுட்பமாக அறிவித்துள்ளனர். அவை அப்படியே நிறைவேறியிருக்கின்றன. வேறு சில சரித்திரப் பூர்வமான நிகழ்ச்சிகளையும் முன்னறிவித்துள்ளனர். பலிகளெல்லாம், கிறிஸ்துவின் நிறைவான, தேவனுக்குத் திருப்திகரமான, பிரதான பலிக்கு அடையாளமாக இருப்பதால், அவை நிறுத்தப்படும் என்றும் மற்றும் யூதர்களின் நடுவே முடியாட்சி முற்றுப் பெறும் என்றும் முன்னறிவித்துள்ளனர். அவை அப்படியே நிறைவேறிவிட்டன.

கிறிஸ்து மனிதனாக அவரித்துத் தம்முடைய ஊழியத்தைத் துவங்கின வேளையில், யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தில், அவருடைய மரணத்தைப் பற்றி எழுதியிருக்கிற வசனங்களெல்லாம் நிறைவேறி தீரும்; மனித வர்க்கத்தின் பாவநிவாரண பலியாகத் தாம் சிலுவையில் அடிக்கப்படுவோம். பின்னர் உயிர்த்தெழுவோம் என்று கூறிக் கொண்டே வந்தார். அப்போஸ்தலர்கள் அவருடைய சிலுவை மரணத்தை மகிமையாக, பெருமையாகப் பேசியும், பிரசங்கித்தும் வந்தார்கள். "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே யன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்"(1கொரிந்தியர் 2:2) என்று சொல்லுவதற்கும் ஒருவர் உந்தப்பட்டார். கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே, திரளான யூதர்கள் நடுவே தைரியமாக எழுந்து நின்று ஒரு சீஷன் இவ்வாறு அறிவித்தார் "... அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்" (அப்போஸ்தலர் 2:23) அந்தப் பிரசங்கத்தின் பலனாக 3000 யூதர்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டார்கள்.

ஆதிக்கிறிஸ்தவர்களுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் தங்கள் பிரசங்கத்தின் மையப்பொருளாக, கிறிஸ்துவின் சிலுவைமரணமும், அதன் மூலம் பாவ மன்னிப்பும், மீட்பும் தான் இருந்தது. அவர்களுக்குப் பறைசாற்றுவதற்கு வேறு ஒன்றும் கிடையாது. "நானோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக" என்று கூறி வந்தனர். சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவின் சீடர்களாக இருந்தார்கள்; சிலுவையே அவர்களது இதய கீதமாக இருந்தது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் உலகமெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களைப் போலவும், ஆதிக் கிறிஸ்தவர்கள் போலவும் இருந்து வந்திருக்கின்றனர்.இதற்குக் காரணம், தவ்றாத்திலும், இன்ஜீலிலும் இப்பொருளே (சிலுவையில்) மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

"எங்களுடைய பிரதான ஆசாரியர்களும், அவர்களுடைய தூண்டுதலினிமித்தம், யூதர்களில் பலரும், தேசாதிபதியாகிய பிலாத்துவின் சமூகத்தில் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவைச் சிலுவையிலறையும்படி கட்டளை கொடுக்க வேண்டும் என்று மிகுந்த கூச்சல், குழப்பம், கலவரத்தைக் கிளப்பவே, அவர்களுடைய அலட்டுதல் தாங்காமல் அவர்களுடைய அநியாயமான கோரிக்கையை பிலாத்து நிறைவேற்றினான். ஆனால் முதலிலிருந்தே கிறிஸ்துவை நேசித்தவர்களோ, அவரைவிட்டுப் பின் வாங்காமல், அவருடைய கொள்கையில் இன்று வரை உறுதியாய் நிலைத்திருக்கிறார்கள்." அவர்கள்

கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இது புகழ்பெற்ற யூத வரலாற்று ஆசிரியர் ஜோஸிபஸ் என்பவரின் வர்ணனை. கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையப்பட்டார் என்று இப்பொழுது யூதர்களும் அங்கீகரிக்கிறார்கள். அவ்வாறு யூதர்கள் கூறுகின்றனர் என்று குர்ஆனும் ஆமோதிக்கிறது: "அல்லாஹ்வின் ரஸூலாகிய மரியமுடைய மகன் ஈஸா மஸீஹை நிச்சயமாக நாங்கள் கொன்று விட்டோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்" (*ஸூரா*-பெண்கள் 4:157). யூதமதத் தலைவர்களின் விண்ணப்பத்தின் படியும், ரோம அரசாங்கச் சட்டத்தின்படியும், தன்னைத் தேவனுடைய குமாரன் என்றும், யூதருக்கு ராஜா என்றும் உம்மை பாராட்டின முகாந்தரத்தினால், எருசலே முக்குப்புறம்பே ஒரு மேட்டில் ஒரு மரத்தின் மீது தூக்கிலிட்டுக் கொன்றார்கள்" என்று ஹில்லலின் சீடர் ரபி யோஹன்ணன் பின் ஜக்கா வெகு காலத்துக்கு முன்பே எபிரேய மொழியில் ஒரு நூல் எழுதியுள்ளார்.

டாஸிட்டஸ் என்ற அறிஞ்ஞரான (யூதரல்லாத) வரலாற்று ஆசிரியர் கிறிஸ்துவுக்குப் பிறகு 40 ஆண்டுகள் கழித்து எழுதின தமது நூலில் 15-வது அதிகாரத்தில் டைபீரியஸ் ஸீஸர் என்ற ரோமச் சக்கரவர்த்தியின் ஆட்சியில், யூதேயாமாகாணத்தின் அதிகாரியாயிருந்த பொந்திய பிலாத்துவின் நாட்களில் கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார் என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்தவர்களும், அவருடைய கடுந்தண்டனைக்குச் சாட்சிகளுமாயிருந்த முதியவர்களில் பலரும் இந்த சரித்திரத்தை வாசித்திருப்பார்கள். ஆட்சித்தலைவர்களின்

நாட்குறிப்புகள் அடங்கிய கோப்புகளைச் சோதித்துப் பார்க்கும் சிலாக்கியம் பெற்றிருந்த இச்சரித்திர ஆசிரியரின் எழுத்துக்களுக்கு அதிக மதிப்பும், முக்கியத்துவம் அளித்துவந்தனர்.

பிலாத்து கிறிஸ்துவுக்கும் விதிக்கப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மரண ஆக்கினையின் விவரமான அறிக்கையை தலைமைச் செயலகத்துக்கு அனுப்பியிருந்தான். நாகரீகமான அரசுகளின் பழக்க வழக்கத்தின்படியே முக்கியமான குறிப்புகளும், தஸ்தாவேஜ்களும் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றைப் பார்வையிட்ட டாஸிட்டஸ், இந்த அதிகாரபூர்வமான குறிப்பேடுகளை ஆராய்ந்து பார்த்து இத்தகவலை வெளியிடுகிறார். இதற்கு ஃபிளேவியஸ் ஜஸ்டினஸ் என்ற தத்துவ சாஸ்திரியும், பின்னர் கி.பி.139ல் அன்டோனியஸ் பையஸ் என்ற பேரரசரும் ஒப்புதல் தெரிவிக்கின்றனர். கார்த்தேஜ் நகரத்திலிருந்த தெர்த்துல்லியன் என்ற மேதையும் கி.பி. 199ல் இவ்வரலாற்றினை உறுதிப்படுத்துகிறார்.

இவ்வாறு கிறிஸ்துவின் சிலுவை மரணம் முன்னமே நிர்ணயிக்கப்பட்டதென்றும், மிகவும் பிரசித்தமான நிகழ்ச்சி என்றும் யூதர்களும், கிறிஸ்தவர்களும், ஏனைய மக்களும் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தனர் என்றும்,வேத சாஸ்திரிகள் குறைந்தது 600 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இதன் நிச்சயத்தைப் பெற்றிருந்தனர் என்றும் 700 ஆண்டுகள் கழித்து. குர்ஆன் எழுதப்பட்டு, கிறிஸ்துவின் மரணத்தைப்

பற்றி தெளிவற்ற, இரட்டை அர்த்தப்படும் சில வசனங்களை இங்குமங்குமாக சிதறியடித்த பின்னர்தான் முஸ்லிம்களுக்கு மட்டும் இந்தக் குழப்பம் தோன்றியுள்ளதை நீர் காண்கிறீர்! ஆகிலும் அநேக முஸ்லீம்கள் இயேசு கிறிஸ்து உண்மையிலேயே சிலுவையில் மரித்தார் என்றும் நம்புகிறார்கள்!

சிலுவையில் அறையப்பட்டது இயேசு கிறிஸ்து தான், வேறொருவர் அல்ல என்பதற்கு, இதோ இன்னுமொரு எடுத்துக்காட்டு! ஸையது என்பவர் அமர் என்பவரைக் கொலைசெய்து விட்டார் என்றும், அதனைநேரில் பார்த்தவர்களும், ஐயமின்றி அந்த சம்பவத்தை அறிந்ததுமான சுமார் 100 பேர் நம்பகமான, நாணயமுள்ள சாட்சி அளித்துள்ளனர் என்று வைத்துக் கொள்வோம். இவ்வாறு சையது அமரைக் கொன்றது சரித்திரப் பிரசித்தி பெற்ற உண்மை ஆகிவிட்டது. ஆனால் 700 வருடங்களுக்குப் பிறகு, புதிதாக, திடீரென ஒரு சாட்சி கிளம்பி. கொலை நடந்தது மெய்தான் ஆனால் கொலை செய்யப்பட்டவர் அமர் அல்ல, பக்கிர் என்று சொல்வாரானால் எல்லாருக்கும் "பகீர்" என்றிருக்குமல்லவா! எந்த அறிவுள்ள மனிதரும், ஞானமுள்ள சட்ட நிபுணரும், நேர்மையான நீதிபதியும் அதனை அங்கீகரிப்பாரா? அது எல்லாவித அரசியல், சமூகவியல், பகுத்தறிவு பிரமாணங்களுக்கும், பொது நீதிக்கும் பொருந்தாத வெறும் வதந்தி அல்லவா! இதைப் போன்று தானே சில முஸ்லீம்கள் வேத சாஸ்திரங்கள், வரலாறுகள், மற்றும்

கிறிஸ்தவரல்லாதவரும், கிறிஸ்துவை வெறுப்பவரும் எதிர்ப்பவரும் எழுதியுள்ள நூல்கள் ஆகியவற்றின் வாயிலாக இயேசு கிறிஸ்து சிலுவையில் அடிக்கப்பட்டார். மரித்தார் என்று கூறும் திடமான சாட்சிகளை மறுதலித்தும், புறக்கணித்தும் இயேசு சிலுவையில் அறையப்படவில்லை; அவரைப் போன்ற வேறொருவர் கொல்லப்பட்டார் என்றும் திரித்துக் கூறவும் துணிவு கொண்டிருக்கின்றனர்.

சத்தியத்தைச் சிரத்தையுடன் தேடிக் கொண்டிருக்கும் முஸ்லிம் சகோதரனே, இப்பொழுது என்ன சொல்லுகிறீர்? என்ன முடிவுக்கு வந்துள்ளீர்? கிறிஸ்து சிலுவையில் மரித்ததற்கு இவ்வளவு ஏராளமான மறுக்க முடியாத சான்றுகள் இருப்பதால், மத வைராக்கியயமும், சமயத்துவேஷமும் இன்றி, நீதியின் படியும், உத்தம இருதயத்தோடும், மூளையறிவோடும் பாரபட்சமற்ற நடுநிலையிலிருந்து இதனைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்று வெகு மனத்தாழ்மையுடன் ஆலோசனை கூறுகிறேன். ஆனால் மரணம் அவரை மேற்கொள்ளவில்லை கல்லறையில் இருந்து உயிரோடு எழுந்து பரலோகத்துக்குச் சென்று மரணத்தை ஜெயித்தார். இனி ஒரு போதும் மரணம் அவரை ஆண்டு கொள்வதில்லை.

**தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்று முடிய இரட்சிக்க கிறிஸ்துவல்லவராக இருக்கிறார், எபிரேயர் 7:25**

# ஐந்தாவது விரிவுரை

## கிறிஸ்துவின் பாவமின்மையும் தெய்வீகத்தன்மையும், குமாரத்துவமும்

தேவன் தமது விலைமதிக்க முடியாத புத்தகத்தில் வெளிப்படுத்தியுள்ள படியே, இயேசு கிறிஸ்து கெட்டுப் போன மனுஷீகத்தன்மையையும், பாவ சுபாவத்தையும் வம்சாவழியாக அல்லது பரம்பரைக் குணமாக பெற்றிடாமல் பாவமில்லாத, பிழையற்ற, அதிபரிசுத்தராக உலகில் பிறந்தார் வாழ்ந்தார், மரித்தார் என்று கிறிஸ்தவர்களாகிய நாங்கள் விசுவாசிக்கிறோம். மற்ற வேத நூல்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. குர்ஆனும் ஹதீஸும் பைபிளின் புனிதத்தன்மைக்கும் இறைநூல் என்பதற்கும் சாட்சி பகருகிறது.

இன்ஜீல் வெளிப்படுத்துகிறபடியே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரே நேரத்தில் தேவனாகவும் மனிதனாகவும் தோன்றினார் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். இந்த உண்மையை எடுத்தியம்பும் பின்வரும் அறிக்கையையும் கூறுகிறோம். அதாவது ஒரே தேவனாகிய கர்த்தர் மனிதனாகிய இயேசுக் கிறிஸ்துவில் காணப்பட்டு, தமது

வரையறையற்ற, தெய்வீகத்தன்மையால் அவரை நிரப்பியிருந்தார். "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது". (கொலோசெயர் 2:9) பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்க தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாய் இருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார் (எபிரெயர் 1:1-3) ஆதலால் இயேசு கிறிஸ்து ஒரே சமயத்தில் தேவனும் மனிதனுமாக இருக்கிறார் என்று சொல்வது சரிதான். மனுஷீகத் தன்மையும் தெய்வீகத்தன்மையும் ஒன்றாக இணைந்திருக்கிறது: அவர் பூரணமான தேவனும், பூரணமான மனிதனுமாக - தேவ மனிதனாக இருக்கிறார். நமது முஸ்லிம் நண்பர்கள் அனுமானிக்கிறது போல கிறிஸ்து இரண்டு கடவுள்கள் அல்ல. தேவனுடைய சக்தியினாலே அற்புதங்களைச் செய்த நபிமார்களைப்போல் அல்லாமல், கிறிஸ்து தம்முடைய தெய்வீக வல்லமையினால் அற்புதங்களையும், அம்மனுஷீகமான கிரியைகளையும் செய்தார். மனிதன் என்ற நிலமையிலே மற்ற மனிதர்களைப்

போல அவர் புசித்தார், குடித்தார், உறங்கினார். அநேக வேளைகளில் அவர் தேவனைப் போல பேசினார்: ஆனால் மற்றும் சில சந்தப்பங்களில் ஒரு மனிதனைப் போல பேசினார், நடந்து கொண்டார். அவர் ஏக காலத்தில் தேவனும் மனிதனுமாக இருந்த காரணத்தை முன்னிட்டு இவ்வாறு நடந்து கொண்டார். இன்ஜீலில் அநேக சந்தர்ப்பங்களில் அவரை மனிதனாக சித்தரித்திருப்பதால், நமது முஸ்லீம் சகோதரர்களும், ஒரு சில கிறிஸ்தவர்களும் அவருடைய தெய்வீகத்தன்மையை சந்தேகிக்கிறார்கள். ஆகிலும், அவருடைய தெய்வீகத்திற்குச் சான்றாக கூறப்பட்டுள்ள பல வாக்கியங்களையும் கருத்தூன்றிப் படிப்பார்களெனில், அவர்களுடைய பிரமையும் மனக்குழப்பங்களும் சூரியனைக்கண்ட பனிபோல அகன்றுவிடும். அதற்கு இயேசு "நீர் சொன்னபடிதான்: அன்றியும், மனுஷகுமாரன் சர்வ வல்லருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள். என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (முத்தேயு 26:64) மேலும் யோவான் 14:9 அதற்கு இயேசு: "பிலிப்புவே இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்: அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய் என்றார்"?

மேலும் கிறிஸ்துவானவர் மனிதன் என்ற நிலமையில்தான் இப்புவியில் சிறிது காலம் வாழ்ந்தார்,

சிலுவையில் ஏற்றப்பட்டார். மரித்தார், உயிருடன் எழுந்தார்; ஆனால் இவையெல்லாம் அவருடைய மனிதத் தன்மையில் மாத்திரம் நிகழ்ந்தவையாகும்.

தவ்றாத், இன்ஜீல், தீர்க்கரிசனங்கள், கிறிஸ்துவின் அருளுரைகள் மற்றும் அப்போஸ்தலரின் உபதேசங்கள் மூலமாக கிறிஸ்துவின் திவ்ய சுபாவத்தை மிகத் தெளிவாய் அறிகிறோம். மேலும் கீழ்வரும் வசனம் அறுதியிட்டு உறுதியாக கூறுகிறதாவது:

إِذْ قَالَتِ
الْمَلَٰٓئِكَةُ يَٰمَرْيَمُ إِنَّ اللَّهَ يُبَشِّرُكِ بِكَلِمَةٍ مِّنْهُ اسْمُهُ الْمَسِيحُ
عِيسَى ابْنُ مَرْيَمَ وَجِيهًا فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَمِنَ الْمُقَرَّبِينَ ﴿٤٥﴾
وَيُكَلِّمُ النَّاسَ فِي الْمَهْدِ وَكَهْلًا وَمِنَ الصَّٰلِحِينَ ﴿٤٦﴾

மரியமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய ஆகுக! என்ற ஒரு சொல்லைக் கொண்டு உனக்கு ஒரு மகனை அளிக்க நன்மராயங்கூறுகின்றான். அவர் பெயர் மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹ் என்பதாகும். அவர் இம்மையிலும் மறுமையிலும் மிக்க கெம்பீரமானவராகவும் இறைவனுக்கு மிக்க நெருங்கியவர்களில் ஒருவராகவும் இருப்பார் (3:45)

என்று கூறியபோது" இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள "வார்த்தை" என்பது "கூறினார்" அல்லது "சொன்னார்" (குன்) அல்லது "ஆகுக" என்று மற்ற வசனங்களில் இருப்பது போல பேச்சு என்றும் வியாக்கியானிகள் அர்த்தம்

கூறி இதற்கு ஒரு முக்கியத்துவமும் கொடுக்க வேண்டியதில்லை என்று வாதிடுவார்களானால், அதற்கு வழியே இல்லை “ஒரு வார்த்தை அவருடைய பெயர் அல்மஸீஹ் என்ற பதங்கள் ‘வார்த்தை’ என்று அழைக்கப்பட்டவர் “ஓர் ஆள்” என்றும் அது நிச்சயமாகவே நாம் வழக்கத்தில் பயன்படுத்துகிற கூறினார், பேசினார். சொன்னார் அல்லது கூற்று, பேச்சு, சொல் என்று பொருளாகாது. மூலமொழியாகிய அரபியில் இஸ்மிஹி (Ismihi) அதாவது அவருடைய பெயர் என்று ஆண்பாலில் இருக்கின்றது கலிமா (Kalima) (வார்த்தை) என்று அரபிய மொழியில் பெண்பாலில் சொல்லப்படவில்லை. அப்படிச் சொன்னால் இந்த வசனத்தில் இலக்கணப்பிழை ஏற்படும்.

கடவுளுடைய படைப்புகள் எல்லாமுமே கடவுளுடைய வார்த்தைகள் எனக்கூறலாம்: ஏனென்றால் அவருடைய வார்த்தையினாலே தானே எல்லாமும் சிருஷ்டிக்கப்பட்டன என்று சில முஸ்லிம் அறிஞர்கள் கூறுகின்றனர். இது முற்றிலும் தவறு என்றும், காரணத்தை விளைவாக கொள்வதாகும் என்றும் கூறுவேன். பேனாவைக் கொண்டு புத்தகத்தை எழுதியிருப்பதால், புத்தகத்தை பேனா என்று கூறுவது போல் இருக்கிறது. புத்தகத்தை எழுதுவதற்கு பேனா கருவியாகப் பயன்பட்டாலும், பேனா புத்தகமாகாது அதுபோல கிறிஸ்துவாகிய ஈஸாவை, முஸ்லிம்களில் சிலர் தர்க்கிப்பது போல அல்லாஹ் தம்முடைய வார்த்தையைக் கொண்டு உண்டாக்கியிருப்பாரானால் அவரை எப்படி கலிமா என்று அழைக்கக்கூடும்; அவர் கலிமாவின் (கட்டளையின்) விளைவாக அல்லவா இருப்பார். நான் என்னுடைய மூளைத் திறனைக் கொண்டு ஒரு புஸ்தகம் இயற்றினால், அந்தப் புஸ்தகம் என்னுடைய மூளையாகாது; ஆனால் என்னுடைய மூளையின் பலனால் ஏற்பட்ட விளைவு

ஆகும். இவ்வாறு இல்லாவிடில் சத்தியமும் தவறுகளும் கலப்படமாகிவிடும், இன்றியமையாதவைகளும் தற்செயல்களும் கதம்பமாகிவிடும்.

குர்ஆனில் உள்ள வேறு சில வசனங்கள் கிறிஸ்துவை தேவனுடைய ஆவியானவராக குறிப்பிட்டுள்ளன தேவனிடமிருந்து புறப்படுவதெல்லாம் தேவனாக இருக்கிறது என்று நீங்கள் அறிவீர்கள். ஆதலால் தேவனுடைய வார்த்தை நித்தியமான தேவனாக இருக்கிறார்: அங்ஙனமே தேவனுடைய ஆவியானவர் நிரந்தரமாக நித்தியமாக தேவனாக இருக்கிறார். இக்கருத்தில், இது இன்ஜீலில் கூறப்பட்டதற்கு இணையாக உள்ளது.

ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. (யோவான் 1:1–5)

கிறிஸ்து தேவனுடைய குமாரானாக இருக்கிறார் என்பது முற்றிலும் சாத்தியமே: இதில் நாத்திகமோ அல்லது தேவ தூஷணமோ கிடையாது. அல்லாஹ்வின் சார்பில் ஓரிடத்தில் ஹதீஸ், “ஏழைகள் என்னுடைய குடும்பத்தார்” என்று கூறுகிறது. இது ஏற்புடையதே. ஏனெனில் குர்–ஆனில் அல்லாஹ் சந்ததி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பியிருந்தால், அவன் சிருஷ்டித்தவைகளில் அவன் விரும்பிய மேலானதை தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பான் (39:4)

இதன் அர்த்தம் என்ன? அல்லாஹ் விவாகம் செய்துதான் புத்திரனைப் பெற வேண்டுமோ? ஆதலால் கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று இன்ஜீல் அழைக்கும் பொழுது, அது ஆண் பெண் சேர்க்கையினால் பிறக்கும் குழந்தை என்று சில முஸ்லிம்கள் நினைப்பது போல ஆகாது. குமாரன் என்று சொல்லுதல் கற்பப் பிறப்புக்கு மட்டுமல்ல, ரூபமாக, வார்த்தையின் புத்திரர்; சமுத்திரத்தின்; நாட்டின் மைந்தர்கள்; வனாந்தரத்தின் குமாரர்கள் என்று அழைப்பது போலாகும். சுவிகாரமாக தத்து எடுக்கப்பட்ட பிள்ளையையும், இன்னாரின் மகன் என்று அழைப்பது உலக வழக்கம் தானே! ஆனால், உண்மையில் தத்தெடுக்கப்பட்ட பிள்ளை அவர்கள் பெற்ற உண்மைப்பிள்ளை அல்லவே. எனினும், இன்ஜீலும் கிறிஸ்து தேவனுடைய ஒரே பேரான குமாரன் என்று அழைக்கப்பட்டுள்ளார். இந்தக் குமாரத்துவம் உலகமரபுக்கு முற்றிலும் வேறுபட்ட உறவு அல்லது தொடர்பினைக் குறிக்கும்.

இந்த சம்பந்தத்தை நாம் பூரணமாக அறிந்து கொள்ள முடியாது; ஏனெனில் இது நமது அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்டது, மனிதர்களுக்கெல்லாம் மேலாக கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைக் காண்பிப்பதற்காக அவர் தேவனுடைய குமாரன் (குமாரனாகிய தேவன்) என்று நாமம் சூட்டப்பட்டுள்ளார். அதே நேரத்தில் அவருடைய மனுஷீகத்தைச் சுட்டிக் காண்பிப்பதற்காக "மனுஷகுமாரன்" என்ற பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. தானியேலின் தீர்க்க தரிசன நூலில் 7:13,14ம் வசனங்களில் கிறிஸ்து தேவனாகவும் மனிதனாகவும் இருக்கிறார் என்ற தரிசனத்தைப் பார்க்கிறோம்.

அன்றியும் தேவ பக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிற படியே மகாமேன்மையானது. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆவியிலே நீதியுள்ளவர் என்று விளங்கப்பட்டார், தேவ தூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார். உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார். (1 தீமோத்தேயு 3:16)

ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம் (1 யோவான் 1:1)

நபிமார்களின் பாவங்களும், தோல்விகளும் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைக்கிரமமாக தவ்றாத்திலும் சபூரிலும் இன்ஜீலிலும் ஒளிவுமறைவு இன்றி வருணிக்கப்பட்டிருக்கின்றது. மனித வர்க்கம் முழுவதுமே சீர்கெட்டுப் போயிருக்கிறது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. குர்-ஆனும் இவ்வுண்மையை முழுமையாக ஆதரிக்கிறது . ஆகிலும் இந்த நூல்களுள் ஒன்றாகிலும் இயேசுக் கிறிஸ்துவின் மீது ஒரு பாவத்தையும் பிழையையும் குறிப்பிட வில்லை. அதற்கு நேர் எதிரிடையாக அவருடைய மாசற்ற பரிசுத்தத்தையும் தூய்மையையும் குறித்து சாட்சியிடுகின்றன. அவர் முற்றிலும் பாவிகளுக்கு விலகினவர், பாவம் செய்யாதவர், பாவம் அறியாதவர் என்றும் பாவமே இல்லாதவர் என்றும் ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறுகின்றன. மற்றெல்லா மனிதர்களை

மட்டுமல்ல, மகாத்துமாக்களையும் ரஸுல்களையும் விட மகாமேன்மையானவர், மகிமையுள்ளவர், பூரணர், ஒப்பற்றவர் என்று இயேசுக்கிறிஸ்து வர்ணிக்கப்பட்டுள்ளார்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனிடமும் பாவத்தன்மையும், கறையும் இருப்பதால் எந்தவொரு ரஸுலும், அப்போஸ்தலனும் அவர் எவ்வளவு பெரியவராய் இருந்தாலும் தான் பாவமற்றவன், பூரணன், பரிசுத்தவான் என்று ஒரு போதும் உரிமை பாராட்டவில்லை!

கடவுள் ஒருவரே பிழையற்றவரும், பூரண பரிசுத்தமும் நீதியும் உள்ளவர். கிறிஸ்துவும் தேவனாகவும் மனிதனாகவும் இருப்பதுடன் மற்ற எல்லா மனிதரைவிட மேன்மையுள்ளவர் ஆதலால், அவர் மிகுந்த தைரியத்தோடும் முழு நிச்சயத்தோடும், "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும் நான் சத்தியத்தை சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை" (யோவான் 8:46) என்று யூத மதத்தலைவர்களுக்கு சவால் விட்டார். "இனி நான் உங்களுடனே அதிகமாய் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" (யோவான் 14:30) இயேசுக்கிறிஸ்துவின் எதிரிகளும் அவரிடத்தில் ஒரு குற்றமும், களங்கமும் கண்டுபிடிக்க முடியவில்லை. யூதர்களின் குற்றச்சாட்டுகளையெல்லாம் கேட்டு, ஆராய்ந்து விசாரித்த பழம்பெரு சட்ட நிபுணரும், நீதிபதியுமாகிய பிலாத்து என்னும் தேசாதிபதி: (யோவான் 18:38;19:4,6) முழங்குகிறான். மேலும் மத்தேயு 27:19 பார்க்கையில் "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடு பட்டேன்" என்று பிலாத்துவின் மனைவி

சொல்லியனுப்பினாள். அதற்குப் பிறகு பிலாத்து தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக்கழுவி: "இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான்! (மத்தேயு 27:24)

அவ்வேளையில்தான் அங்கிருந்த யூத ஜனங்கள் எல்லாரும் "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மீதும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று சொன்னார்கள் அதற்குப் பிறகுதான் கிறிஸ்து சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். மூன்றரை வருஷ காலம் அவர் பாலஸ்தீனாவில் ஊழியத்தை நிறைவேற்றி வருகையில் கிறிஸ்துவினுடைய அப்பழுக்கற்ற ஜீவியமும், சம்பூரணமான தூய்மையும், நாணயமும், நீதியும் நேர்மையும், தன்னலமற்ற உழைப்பும் ஊழியமும், மற்றெல்லா மனிதர்களின்றும், அல்லது ஒட்டு மொத்தமாக மனுக்குலத்தினின்றும், இவர் வேறுபட்டவர் என்று வெளிப்படலாயிற்று. மற்றெல்லா தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்களுடைய ஜீவியங்களில் குற்றங்குறைகளும், கள்ளங் கபடுகளும், ஏற்ற தாழ்வுகளும் மலிந்து கிடப்பதைக் காணலாம். பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் போல இவர்களுக்கும் இவருக்கும் இடையில் ஒருக்காலும் எட்டிப்பிடிக்க முடியாத இடைவெளி இருப்பது புலனாயிற்று.

இப்பேர்பட்ட களங்கமற்ற, மாசற்ற மகா தூயவரே நமது பாவப் பரிகாரியாகவும், பிணையாளியாகவும்; நம்மை மீட்கும் கிரயப்பொருளாக தம்மையே பிராயச்சித்த பலியாக்கும் தகுதியும் அந்தஸ்தும் பெற்றவராவார்.

## ஆறாவது விரிவுரை

# குர் ஆனில் மற்றெல்லா மனிதரைவிட கிறிஸ்துவின் மேன்மையும் சிறப்பும்

தீர்க்கதரிசிகளுக்கும் அப்போஸ்தலருக்கும் அநேக பட்டங்களும், பதவிகளும் அளிக்கப்பட்டன; ஆனால் கிறிஸ்து இவர்கள் எல்லாரையும் மிஞ்சியவர் எனவும், அவருக்கு ஈடு இணை எவருமே இல்லை எனவும் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு வருகிறோம். இப்பொருளின் மீது குர்ஆன் என்ன கூறுகிறது என்று சற்று பார்ப்போம்.

1. அவர் தேவனுடைய வார்த்தை என்றும் தேவனுடைய ஆவியானவர் என்றும் கீழ்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

நிச்சயமாக மர்யமுடைய மகன் ஈஸா மஸிஹ் அல்லாஹ்வுடைய ஒரு தூதர்தான்; அன்றி அவனுடைய குன் என்ற வாக்கால் பிறந்தவராகவும் இருக்கின்றார். அல்லாஹ் தன்னுடைய அந்த வாக்கை மர்யமுக்கு அளித்தான்.மற்ற ஆத்துமாக்களை போன்று அவரும் அவனிடமிருந்து வந்தார் (4:171) மேலும்

மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய ஆகுக! என்ற ஒரு சொல்லைக் கொண்டு உனக்கு ஒரு மகனை

அளிக்க நன்மராயங்கூறுகின்றான். அவர் பெயர் மர்யமுடைய மகன் ஈஸா மஸிஹ் என்பதாகும். அவர் இம்மையிலும் மறுமையிலும் மிக்க கெம்பீரமானவராகவும் இறைவனுக்கு மிக்க நெருங்கியவர்களில் ஒருவராகவும் இருப்பார் (3:45)

இப்படிப்பட்ட சிறப்புப் பண்புகளையும், அந்தஸ்தையும் குர்ஆன் வேறு எந்த மனிதருக்கோ, ரஸூல்களுக்கோ கொடுத்திருக்கிறதா என்று என் நண்பரே! எனக்குக் கூறுவீராக? அல்லது வேறு எவரையும் அல்லாஹ்வின் வார்த்தை என்றும் அல்லாஹ்வின் உயிர் அல்லது ஆவி என்றும் கூறியிருக்கிறதா?

குர்ஆனில் மற்றப் பெரியார்களையெல்லாம் அப்போஸ்தலர்கள் என்றும், தீர்க்கதரிசிகள் என்றும் அல்லது எச்சரிக்கிறவர்கள், உபதேசிக்கிறவர்கள் என்று கூறியிருக்கிறது. ஆனால் இயேசுக் கிறிஸ்துவை தவிர வேறு ஒருவரையும் கடவுளின் வார்த்தை என்றோ, கடவுளின் ஆவி என்றோ அழைக்கவில்லை. கடவுளுடைய அப்போஸ்தலர்கள் என்றால் கடவுளால் அனுப்பப்பட்ட வேறு சில நபர்களைக் குறிக்கின்றது. ஆனால் தேவனுடைய ஆவியென்று சொல்லும் பொழுது, அந்த ஆவியில் தேவனே இருக்கிறார். வேறொருவரை அனுப்பவில்லை, அவரே வந்தார், என்று அர்த்தப்படுகிறதல்லவா?

புகழ்பெற்ற இஸ்லாமிய விளக்கவுரையாளர்களாகிய அல்ராஸியும், அல்ஜலாலனும் ஏனையோரும் கிறிஸ்து

தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்படுவதற்கு காரணம், ஒரு தகப்பன் இல்லாமல் அவர் உண்டாக்கப்பட்டார் என்பதாகும் என்கின்றனர். அப்படியானால் ஆதாமும், ஒரு தகப்பனில்லாமல், தேவனுடைய கட்டளையின் படியே சிருஷ்டிக்கப்பட்டவன் தானே அவனை தேவனுடைய வார்த்தை என்றும் ஆவி யென்றும் குர்ஆன் வர்ணிக்கின்றதோ?

கிறிஸ்து எல்லாவற்றிற்கும், எல்லாவற்றிலும் முதல்வர், மேலானவர், மகா சிறந்தவர் என்பதனை நிரூபிப்பதற்காகத்தான் அவருக்கு தேவனுடைய வார்த்தை, ஆவி என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை முஸ்லிம் சகோரர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

2. கிறிஸ்துவுக்கு சிருஷ்டிக்கும் அதிகாரமும், வல்லமையும் உண்டு என்பதை கீழ்வரும் வசனம் நமக்கு தெளிவாக கூறுகிறது.

நிச்சயமாக நான் உங்கள் இறைவனிடமிருந்து அனுப்பப்பெற்ற ஒரு தூதன் என்பதற்குரிய ஓர் அத்தாட்சியுடன் உங்களிடம் வந்திருக்கிறேன். உங்களுக்காக களிமண்ணிலிருந்து பறவையின் கோலத்தைபோல் செய்து. அதில் நான் ஊதுவேன்; அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு பிறவிக்குருடனையும் வெண்குஷ்டரோகியையும் நான் சொஸ்தப்படுத்துவேன்; மரித்தோரையும் நான் உயிர்ப்பிப்பேன் ஸூரா (3:49, 5;110).

இறைவனின் பண்புகளில் பலவற்றையும் தம்முடைய சிருஷ்டிகளுடன் அவர் பகிர்ந்து கொள்ளுகிறார். எடுத்துக்காட்டாக, அன்பு, இரக்கம், நீதி, ஈகை, பெருந்தன்மை முதலானவற்றை மனிதர்களுடன் பகிர்ந்தளித்துள்ளார். இன்னமும் அற்புத அடையாளங்களைச் செய்யும் வரமும், வருங்கால நிகழ்ச்சிகளை முன்னறிவிக்கும் வரமும் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு அளித்துள்ளார். திருத்தூதுவர்களின் பரலோக செய்திகளை உறுதிப்படுத்தும் பொருட்டு, கேட்போரின் நன்மைக்காக இவ்வரங்களை ஈந்தார் ஆகிலும் இன்னும் சில பண்புகளை அவர் மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ள மாட்டார். தேவனுடைய சர்வ ஞானம், சர்வ வியாபகம், சர்வ சக்தி மற்றும் படைக்கும் ஆற்றல் ஆகியவற்றை தம்முடைய சிருஷ்டிகளுடன் அவர் பகிர்ந்து கொள்வதில்லை.

முதலாவதாக, எல்லா இடங்களிலும், எப்போதும் மற்றவர்கள் அறியாமல், தேவன் பிரசன்னராக இருப்பதால் எல்லாமே அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருப்பதுடன், ஏக காலத்தில் எண்ணிறந்த கோடானகோடி மக்களின் வேண்டுதல்களைக் கேட்கிறவராகவும், தேவைகளை அறிந்தவராகவும் இருக்கிறார். ஆனால் வேறு எந்த சிருஷ்டியும், பேரரசனும், சர்வாதிகாரியும் அல்லது சாத்தானும் கூட இவ்வித ஆற்றலை அடைய முடியாது.

இரண்டாவதாக சர்வ சக்தியுள்ளவர் என்று கூறும்பொழுது, அவர் இயல்பாகவே தம்மில்தாமே, இந்தப் பண்புடையவராக இருக்கிறார். (இதனை அவர் எங்கிருந்தும்

பெற்றுக் கொள்ளவில்லை; யாரும் கொடுக்கவில்லை; அப்படியானால் அவர் கடவுளாக இருக்க (முடியாது) பல சந்தர்ப்பங்களில் தீர்க்கதரிசிகள் அதிசயிக்கத்தக்க அற்புதங்களையும், பலத்த செய்கைகளையும் நிறைவேற்றியிருக்கிறார்கள்; ஆனால் இவை அவர்களுடைய சுய சக்தியின் விளைவாக ஏற்படவில்லை, தேவன் அருளின பிரதிநிதித்துவ அதிகாரத்தால் செய்து முடித்தனர்.

யாராகிலும் தங்கள் சுயசக்தியால், பக்தியால். பலத்தால் அற்புதங்களைச் செய்யக் கூடுமானால் அவர்கள் கடவுளாகி விடுவர்; ஆனால் இது அபத்தம், தேவ தூஷணம் ஆகும்.

மூன்றாவதாக, சிருஷ்டிப்பின் வேலையும் இறைவனுக்கே உரியது. ஒன்றுமில்லாமையிலிருந்து அல்லது இதற்கு முன் இல்லாத ஒன்றைக் கொன்று வருவதுதான் அல்லது உண்டாக்குவதுதான் படைப்பு அல்லது சிருஷ்டிப்பு ஆகும்.

சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் தீர்க்க தரிசிகளுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் பலவிதமான வியாதிப்பட்டோரையும் குணமாக்கவும், பேய்களை விரட்டவும், ஊமையர், செவிடர், குருடர், சப்பாணிகள் ஆகியோருக்குப் பூரண சுகமளிக்கவும் இன்னும் மரித்தோரை எழுப்பவும், இனனும் பிற்காலத்தில் சம்பவிக்கப் போகிறவைகளை முன்னறிவிக்கவும் ஆற்றலும் அதிகாரமும் கொடுத்திருந்தார். ஆனாலும் இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு ஒருவருக்கும் சிருஷ்டிக்கும் வல்லமையையும், உயிர்கொடுக்கும் சக்தியையும் தேவன் கொடுக்கவில்லை!

இது ஏன்? ஏனென்றால், கிறிஸ்து அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகளைவிட மிகப்பெரியவர் என்பது மாத்திரம் அல்ல, இவர் முற்றிலும் வித்தியாசமான மகோன்னதமான இடத்தில் இருக்கிறார். கிறிஸ்துவைப் போல வேறு யாராகிலும் எதையாவது சிருஷ்டித்ததாக குர்ஆனில் கூறப்பட்டுள்ளதா? அல்லாஹ்வின் அனுமதி கொண்டு இவர் சிருஷ்டித்தார் என்று விளக்குவதற்கு முற்பட்டாலும், வேறு யாராகிலும் அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு அப்படிச் செய்தார்கள் என்று குர்ஆனில் காணப்படுகிறதா? தேவனாகிய கர்த்தர் எப்படி ஆதாமை சிருஷ்டித்தாரோ (பூமியின் மண்ணினால்) அவனுடைய உருவத்தை உண்டாக்கி, அவன் நாசியிலே தமது சுவாசத்தை ஊதினார், அவன் ஜீவாத்துமாவானான்) அப்படியே கிறிஸ்துவும் பறவைகளை உண்டாக்கி, அவற்றிற்கு உயிர் கொடுத்து பறக்க வைத்தார் என்று முந்தின வசனத்தில் பார்த்தோமல்லவா.

3. கிறிஸ்து இயேசுவின் அற்புதமான கன்னி பிறப்பைக் குறித்தும் ஏற்கனவே சிந்தித்தோம் ஈஸாமஸீஹ், மரியமுடைய மகன், அல்லாஹ்வின் திருவார்த்தையாகவும், அவனிலிருந்து உள்ள உயிராகவே (ஆவியாகவே) இருக்கிறார்" என்று *ஸூரா* 4: 71 ஆம் வசனத்தில் பார்த்தோம். அதனுடைய பொருள் என்னவென்றால், மானிடத்தந்தை ஒருவர் இல்லாமல் தூய தேவ ஆவியானவரால் அற்புதமாகப் பிறந்தார். ஆதாமுக்கு ஒரு மனுஷீகத் தந்தை இல்லையென்றால், அதற்கு காரணம், அவனுக்கு முந்தி வேறு மனிதர்கள் எவரும் கிடையாது. ஆனால் இயேசுக்கிறிஸ்து பிறந்தபொழுது மனித தந்தையின்

உதவியில்லாமல், தேவசித்தப்படி, அற்புதமாகப் பிறந்தார், என்ற சத்தியத்தை குர்ஆனும் இவ்வாறு சாட்சிப் படுத்துகிறது. இன்னும் தன் கற்பை காத்துக் கொண்ட மர்யம் என்பவளையும், “நீர் ஞாபகமூட்டும். நம்முடைய தூதர் ஜிப்ரயில் அவருடைய கர்ப்பத்தில் நம்முடைய ஆவிகளிலிருந்து ஓர் ஆவியை நாம் ஊதினோம். அவளையும் அவளுடைய குமாரனையும் உலகத்தாருக்கு ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்” (21:91)

“அவரை மனிதர்களுக்கு ஒரு திருஷ்டாந்தமாகவும் நம்முடைய அருளாகவும் நாம் செய்வோம்” (19:21) என்றும் வாசிக்கிறோம்.

இவ்வாறு கிறிஸ்துவினுடைய அற்புதப் பிறப்பு கன்னியாகிய மர்யமின் கருவிலே அல்லாஹ்வின் ஆவியினாலே பரிசுத்த ஆண்மகனாக இருந்தது என்ற உண்மை நேர்மையுள்ள, பொறுப்புள்ள முஸ்லிம் சகோதரனின் கவனத்தையும் ஈர்க்கவில்லையா? ஈஸாமஸீஹைப் போன்று வேறு எந்த ரஸூலும் பிறக்கவுமில்லை. செயலாற்றவும் இல்லை. அவருக்கு நிகரானவர் யாரும் இல்லை என்பது உங்கள் சிந்தையைக் கவரவில்லையா?

4. இவ்வுலகிலும் இனிவரும் உலகிலும் (இம்மையிலும் மறுமையிலும்) மிக்க கண்ணியமுடையவராக அல்லது கனம் பெற்றவராக அல்லாஹ்விற்கு அருகில் இருப்பார் என்று அல் இம்ரான் 3:40வது ஆயத்தில்

ஏற்கனவே சிந்தித்தோம்.

அல் கஷாஃப் **(Al-Kashaf)** இதற்கு விளக்கந்தரு கையில் "இவ்வுலகில் கண்ணியம் என்பதற்கு தீர்க்கதரிசன வரமும் மற்ற மனிதருக்கு மேலான ஸ்தானத்திலும் இருப்பது எனவும்; அடுத்த உலகில் கண்ணியம் என்பதற்கு சுவர்க்கத்தில் எல்லாருக்கும் மேலான மகிமையுள்ள ஸ்தானமும், பரிந்துரைத்ததுமாகும்". என்கிறார் அல்ராசியும் ஜலாலுத்தின்–அல்–சுயூதியும் இவ்வாறே அர்த்தப்படுத்துகின்றனர்.

மோசே பெற்ற இறையருளைக் குறித்து, எதிர்ப்பு படையினார் 33:69ம் வசனத்தில் ... மூஸா அல்லாஹ்விடத்தில் மதிப்பிற்குரியவராக இருந்தார் என்று பார்க்கிறோம். இதனை விளக்குகையில், மோசே மிகுந்த அறிவாற்றல் பெற்றிருந்தார் எனவும், மோட்சத்தில் கண்ணியம் பெற்றவர்கள் எல்லாரும் ஒன்றுபோல, சமமான மதிப்பிற்கு உயர்ந்து விட மாட்டார்கள்; ஏனென்றால் அங்கு புண்ணியவான்கள் தரவாரியாகவும், அந்தஸ்து வாரியாகவும் பிரிக்கப்படுவர்.

நீங்கள் மூன்று பிரிவுகளாக பிரிந்துவிடுவீர்கள். மூன்றாவது பிரிவினர் இவர்கள் நன்மையான காரியங்களில் மற்ற யாவரையும்விட முன்சென்று விட்டவர்கள். இவர்கள்தாம் தங்கள் இறைவனுக்கு மிக்க நெருங்கியவர்கள் (56:7,11) என்று வாசிக்கிறோம்.

இவ்வுலகிலும், மறுவுலகிலும் மேன்மையாக கருதப்படுகிறதில் ஈஸாமஸீஹைத் தவிர வேற எந்த

மனிதரும், நபியும் இல்லை என்பது குர்ஆனை நன்றாகப் படிப்போருக்கு விளங்கும். நன்றாக சோதித்துப் பார்த்து பின்னர் பதில் கூறுங்கள். இதன் உண்மைக் காரணத்தைக் கண்டுபிடிக்கும் பொழுது நீங்கள் மிகவும் வியப்படைவீர்கள்.

5. கிறிஸ்துவின் கணக்கில் (போரில்) எந்தப்பாவமும், குற்றமும், களங்கமும் சாட்டப்படவில்லை! இதனை ஐந்தாவது விரிவுரையில் தீர்க்கமாகப் பார்த்தோம்.

6. தேவன் அவரை பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டார் என்பதனை மீண்டும் ஒருமுறை வாசிப்போம்.

“ஈஸாவே நிச்சயமாக நான் உம்மை உம்முடைய ஆயுளைப் பூர்த்திச்செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன்”. நிராகரிப்போரின் அவதூற்றிலிருந்து உம்மை பரிசுத்தமாக்கி வைப்பேன். உம்மை பின் பற்றுவோரை, நிராகரிப்போர்மீது மறுமைநாள் வரையில் மேலோக்கியும் வைப்பேன் (3:55). உம்மைக் கைப்பற்றுகிறவனாகவும் (முத்தவஃபீக்க) என்றால் உயர்த்திக் கொள்வது என்று ஏற்கனவே சிந்தித்து விட்டோம். உயர்த்திக் கொள்ளுவது என்றால் அல்லாஹ்வின் அந்தஸ்துக்கும் மகிமைக்கும், மாட்சிமைக்கும் சமமாக உயர்த்திக் கொள்வதாகும். ஏனெனில் “என்னளவில் உயர்த்திக் கொள்வேன்” என்றிருக்கிறது. “உம்மைப் பரிசுத்தப்படுத்துவேன்” என்பது ‘அஞ்ஞானிகளின் மத்தியிலிருந்து உம்மை பிரித்திடுவேன்’ என்று அல்ராசி அர்த்தப்படுத்துகின்றார். இந்தப் பதங்களும் அவற்றுள்

அடங்கிய செய்திகள் சாராம்சமும் என்னவென்றால் சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு ஒப்பாகவும், அவரின் ஸ்தானத்திற்கும் சமமாக கிறிஸ்துவை உயர்த்தி, மிகைப்படுத்தி, மகிமைப்படுத்துவதாகும் என்பதில் ஐயமும் உண்டோ!

"என்னளவில் உயர்த்திக் கொள்வேன்" என்பதற்கு கருத்துரை வழங்குகையில், "பரலோகத்தில் நானும் என் தூதர்களும் இருக்கும் இடமட்டாக உம்மை உயர்த்திக் கொள்வேன்; என்னுடைய ஆசனத்தில் உம்மை அமர்த்துவேன்" என்று அல்கஷாஃப் குர்ஆனை ஆதாரமாக் கொண்டு கூறுகின்றார். இந்த உயர்வுக்கான காரணத்தை இன்ஜீல் துலாம்பாரமாக இவ்வாறு எடுத்துரைக்கிறது:

**அவர் கிறிஸ்து தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர். பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுக் கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை**

**பண்ணும்படிக்கும், எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப்பியர் 2:6-11)**

இதற்கான காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் உமக்கு உண்டாக வில்லையா? மதிப்பிற்குரிய வாசக நண்பரே, காரணத்தை அறிய ஆர்வமுடையவராக இருப்பின் அதனை ஒரு வேதவசனத்தின் மூலமாகவே உமக்கு மிகவும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவகுக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயுமிருக்கிறது, (எபிரேயர் 4:12)**

## ஏழாவது விரிவுரை

# ஏகத்துவத்தில் திரித்துவம் அல்லது திரியேகத்துவம்

அன்பான நேயரே, தேவன் ஒருவர்தான் என்றும், அந்த தேவனில் மூன்று ஆள்த்தன்மை இருக்கிறது. அதாவது ஏகத்துவமாகிய தேவத்துவம் திரித்துவமாக இருக்கிறார் என்பது கிறிஸ்தவத்தின் அடிப்படைப் போதனை இந்த முதன்மையான கிறிஸ்தவ விசுவாசக் கொள்கையை உமக்கு சற்று விளக்கிக் கூற ஆசிக்கிறேன்.

"தேவனாகிய கர்த்தர் ஒருவரே தேவன்; அவரையன்றி வேறு தேவன் இல்லை; அவர் அநாதியாகவும், நித்தியமாகவும், ஜீவிக்கிறவராகவும், உண்மையுள்ளவராகவும், சரீரமில்லாத ஆவியாகவும் இருக்கிறார். அவருடைய வல்லமைக்கும், ஞானத்திற்கும், நற்பண்புகளுக்கும் முடிவே இல்லை. வானங்களையும் பூமியையும், புலனாகிய புலனாகாத எல்லா உயிருள்ள பிராணிகளையும் சிருஷ்டித்த கர்த்தர்அவரே. இந்த ஒரே தேவன், பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் என்று மூனறு ஆட்களாக, ஒரே தன்மையும், மகிமையும், வல்லமையும் உள்ள நித்திய தேவனாக இருக்கிறார்."

தவ்றாத், இன்ஜீல் ஆகியவற்றின் ஆதாரத்தில் தான் இந்த விசுவாசப் பிரமாணம் அமைந்துள்ளது. ஆதலால் இந்த இலக்கணம் கிறிஸ்தவர்களின் கண்டுபிடிப்பு அல்ல. உள்ளுணர்வின் மூலமாக இந்த முடிவைப் பெற்றுக் கொள்ளுகிறோமோ அல்லது தர்க்க ரீதியில் பெற்றுக் கொள்ளுகிறோமோ என்ற கேள்விக்கு விடை பின்னர் அளிக்கப்படும்.

தேவத்துவத்தின் இரகசியம் ஆதாமின் புத்திரரின் அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டது; ஆகிலும் அது உண்மையாகவும், யதார்த்தமாகவும் இருக்கிறது. ஆனால், பெரும்பான்மையான முஸ்லீம்கள் இதனைப்புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வதில்லை; ஏனென்றால், “இறைவனை அறிந்து கொள்வதற்காக மேற் கொள்ளப்படும் எல்லா ஆராய்ச்சியும் நாஸ்திகமே” என்று ஹதிஸ் தீர்ப்பளிக்கிறது.

பண்டைக்கால பக்தர்கள் விளக்கிக் கூறாமல் விட்டு விட்டதும், தற்காலமேதைகள் புரிந்து கொள்ள முடியாததுமான இறைவனின் தன்மையை நானும் இப்பொழுது விளக்கிக் கூறப் போவதில்லை. சிருஷ்டிக்கப்பட்டவைகளின் தன்மையையே சரிவரப் புரிந்து கொள்ள முடியாத அறிஞர்கள் எவ்வாறு ஆதி முதல் காரணனாகிய கடவுளை அறிந்துகொள்ள முடியும்? நமது மூளை அறிவிற்கு விளங்காத இந்த உண்மையை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். மனுக்குலத்தின் வழிகாட்டியாகவும், அதின் நன்மைக்காகவும் கொடுக்கப்பட்ட

தேவனுடைய புஸ்தகத்தில் தான் நாம் தேடி வாசிக்க வேண்டும். இரண்டாவதாக, முஸ்லிம் சகோதரர்கள் விசுவாசிக்கிற அநேக கோட்பாடுகளையும் பகுத்தறிவு கொண்டு புரிந்து கொள்ள முடியாது என்பதனை அவர்களே அறிந்திருக்கிறார்கள். இதில் முதன்மையாக இருப்பதுதான் கடவுளைப் பற்றிய விசுவாசமும் நம்பிக்கையுமாகும். அதாவது தேவன் இருக்கிறார் என்பதை நேரடியாக நிரூபிக்க முடியாது! எனவே அவர்களால் நிரூபிக்க முடியாத ஒன்றை நாம் அவர்களுக்கு நிரூபித்து காட்ட வேண்டும் என்று ஏன் எதிர் பார்க்கின்றனர்?

கடவுள் தம்மைப் பற்றி என்ன வெளிப்படுத்தியிருக்கிறாரோ, அதைத்தவிர நாம் வேறொன்றையும் அறிந்து கொள்ள முடியாது என்பதை யூதர்களோ, கிறிஸ்தவர்களோ, முஸ்லிம்களோ முதலாவது ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு மிஞ்சினது எல்லாம் மனுஷரின் மனோ ராஜ்யமே அன்றி வேறல்ல. தேவனுக்குப் பயந்தவர்கள் இப்படிப்பட்ட ஆதாரத்தைக் கொண்டு நாஸ்திகர்களுக்கு நம்பிக்கையூட்ட முடியாது.

நம்முடைய தாலந்துகளையும், திறமைகளையும் புலமைகளையும் கொண்டு ஒருபோதும் நம்முடைய சிருஷ்டிகர்த்தராகிய தேவனை அறிய முடியாது. நாம் அப்படி நம்முடைய ஞானத்தாலும், முயற்சியாலும் தேவனைக் கண்டு கொண்டால், அவர் தேவனாக இருக்க முடியாது! தேவன் ஒருவரே தேவனை அறியமுடியும். எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாகவும் அவரே அந்தமுமாக இருந்த போதிலும்,

மற்ற உயிரினங்களைப் போலல்லாமல், அவர் வானங்களையும் பூமியையும் நிரப்புகிறவராக, ஆரம்பமும், ஆழநீள அகலமும் உயரமும் இல்லாதவராகவும் இருக்கிறார். இவ்வாறு அறியப்படாதவராகவும், இணையற்றவராகவும், விளக்கிக் கூற முடியாதவறாகவும் எல்லா எல்லைகளையும் கடந்து நிற்கிறவராகவும் இருப்பதால்தான் அவரைக் கடவுள் என்கிறோம். நீர் கடவுளைப் பற்றி மனதில் எவ்வாறு சிந்தித்தாலும், அவர் வேறுவிதமாகவே இருக்கிறார். ஆதலால் நம்முடைய அற்பமான நுண்ணறிவைக் கொண்டு கர்த்தராகிய தேவனை அறிந்து கொள்ள முற்படுவது ஒரு சிப்பியினால் சமுத்திரத்தின் தண்ணீரையெல்லாம் எடுத்து தூர ஊற்றி விடலாம் என்பதிலும் மடமையாகும். எனவேதான் எவ்வித ஆராய்ச்சியிலும் ஈடுபடுவதைவிட, அவர் தம்மைப்பற்றி என்ன அல்லது எவ்வளவு வெளிப்படுத்தியிருக்கிறாரோ அதனை வாக்குவாதமின்றி ஏற்றுக் கொள்வதே அறிவுடமையாகும். அதுவே நம்மில் தெய்வ பக்தியையும், தெய்வத்தன்மையையும் வளர்ப்பதாகும்.

தவ்றாத்தும், இன்ஜீலும் தேவனிடம் இருந்து வந்ததா இல்லையா என்பதுதான் முக்கியமான கேள்வி. அதற்கு ஆம் என்ற பதில் கிடைத்தால் (தேவனுக்கு நன்றி). நாம் அவை கூறுவதையெல்லாம் அப்படியே அங்கீகரிக்க வேண்டும். நம்முடைய அபிப்பிராயத்துக்கு முரணாக இருந்தாலும் நாம் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவை கூறும் சில உண்மைகளை விசுவாசிப்போம்; ஆனால் மற்றவைகளைப் புறக்கணிப்போம் என்று கூறுவதற்கு நமக்கு அனுமதி

கிடையாது. அப்படி செய்பவர்களுக்கு என்ன ஆக்கினைத் தீர்ப்பு வரும் என்பதை "வேதத்தில் சிலவற்றை நீங்கள் நம்பி மற்றவற்றை நிராகரிக்கிறீர்களா? உங்களில் எவர் இதைச் செய்கிறாறோ அவருக்கு இவ்வுலக வாழ்வில் இழிவைத்தவிர வேறு கூலி கிடையாது: இன்னும் மறுமை நாளில் கடுமையான வேதனையின் பக்கம் அவர்கள் தள்ளப் (துண்டிக்கப்) படுவார்கள், அன்றியும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பாரா முகமானவனாக இல்லை" என்று அல் பஹறாரா–பசுமாடு 2:85ம் வசனத்தில் தீர்ப்பளிக்கப்படுகிறது.

தேவனாகிய கர்த்தர் சொன்னார், கேட்டார், தம் விரலினால் எழுதினார் என்பதுபோல சாதாரண மனித நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பதங்களை பைபிள் எடுத்தாளுவதால் முஸ்லிம்கள் பைபிளை மும்முரமாகத் தாக்குகின்றனர். அவர்கள் குற்றமெனக் கருதுகிற சொற்றொடர்கள் குர்ஆனிலும் காணப்படுவதை சந்தேகிப்போருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"மூஸாவின் சரித்திரம் உம்மிடம் வந்திருக்கிறதா? அவர்தன் குடும்பத்தாருடன் சென்றபொழுது, தான் செல்லவேண்டிய வழியை அறியாத நிலையில் 'தூர்' என்னும் மலைமீது அவர் நெருப்பை கண்ட சமயத்தில் தன் குடும்பத்தாரை நோக்கி, "நீங்கள் இங்கு சிறிது தாமதித்திருங்கள். மெய்யாகவே நான் நெருப்பை காண்கிறேன்: அதிலிருந்து ஓர் எரிக்கொள்ளியை எடுத்துக்கொண்டு உங்களிடம் வருகிறேன் அல்லது, நெருப்பின் வெளிச்சத்தினால் நாம் செல்லவேண்டிய வழியை

அறிந்து கொள்வேன் என்றார். அவர் அதனிடம் வரவே அவரை நோக்கி மூஸாவே! எனச் சப்தமிட்டு அழைத்து நான் கூறியதாவது நிச்சயமாக நான்தான் உமதிறைவன் உம்முடைய காலணிகள் இரண்டையும் கழட்டிவிடும். நிச்சயமாக நீர் துவா பள்ளத்தாக்கிய பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறீர் " (20:8-12).

அல்லாஹ், வானங்கள், பூமி ஆகியவைகளின் பிரகாசமாக இருக்கின்றான். அவனுடைய பிரகாசத்திற்கு உதாரணம், விளக்கு இருக்கும் ஒரு மாடத்திற்கு ஒப்பாகும். அவ்விளக்கு ஒரு பளிங்கு கிண்ணத்தில் இருக்கிறது. அந்த கிண்ணமோ, முத்தாலாகிய ஒரு நட்சத்திரத்தைப் போல பிரகாசித்துக் கொண்டு இருக்கிறது... அல்லாஹ் தன்னுடைய தன்மையை அறிவிக்கும்பொருட்டு இத்தகைய உதாரணங்களை கூறுகின்றான் (24:35)

நிச்சயமாக நான் என் இறைவனிடமே செல்லுகின்றேன் அவன் விரைவில் எனக்கு நேரான வழியைக் காண்பிப்பான் (37:99)

எவர் அல்லாஹ்வின் **பாதையில்** ஹிஜரத்து செய்கிறாறோ ... (பெண்கள் 4:101).

அல்லாஹ், அவரைத் தன் அளவில் உயர்த்திக் கொண்டான் (பெண்கள் 4:158).

... அவர்களுடைய காரியங்கள் அனைத்தும்

மறுமையில் அல்லாஹ்விடமே விசாரணைக்கு கொண்டு வரப்படும் (2:210)

நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறுநாட்களில் படைத்து அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலை நாட்டினான் (7:54)

... அப்பொழுது அவன் சொர்க்கத்துக்கு எழுந்து சென்றான் ... (பசுமாடு 2:27)

ஈஸாமஸீஹை எடுத்துக் கொள்வதைப்பற்றி அல் இம்ரான் 3:55ல் ஏற்கனவே நாம் பார்த்தோம்.

பூமியாகிய இதன் மீது இருக்கின்ற ஒவ்வொன்றும் அழிந்துவிடக்கூடியதுதான் வல்லமையும், சங்கையும் உடையவனான உம்முடைய இறைவன் திருமுகம் மட்டுமே நிலைத்திருக்கும்.

(அளவற்ற அருளாளன் 55:26,27)

... அவனுடைய உள்ளமையை (திருமுகத்தை) த் தவிர பொருட்களனைத்தும் அழியக் கூடியவையே. (வரலாறுகள் 28:88)

இவ்வாறு அல்லாஹ்வின் அன்பு, கோபம், மனவிருப்பம், மனஸ்தாபம் மற்றும் மறந்து விடுதல் போன்ற எத்தனையோ உணர்ச்சிகளும், மனிதக் குணங்களும் அல்லாஹ்விற்கும் சூட்டப்படுவதை இவ்வசனங்கள் வாயிலாகப் பார்த்தோம். அவர்கள் மறந்து விட்டதுபோன்று...

நாமும் அவர்களை அலட்சியப் படுத்தி (மறந்து) நரகத்தில் விட்டு விடுவோம் (சிகரங்கள் 7:51)

இவையும் இன்னும் பல வசனங்களும் மனிதர்களாகிய நாம் அல்லாஹ்றவை புரிந்து கொள்வதற்காக அவருடைய விருப்பு வெறுப்புகளையும் மற்றும் குணாதிசயங்களையும் பிரதிபலிக்கின்றன என்பதில் ஐயமும் உண்டோ? உதாரணமாக, அவர் நெருப்புமில்லை. நெருப்பிலுமில்லை. ஆனால் மோசேயின் கவனத்தை இழுப்பதற்காகவே அந்தக்காட்சியைத் தந்தார் என்று நீங்கள் தர்க்கம் செய்வீர்களானால். உம்முடைய இரு காலணிகளையும் கழற்றி விடுவீராக! (ஏனெனில்) நிச்சயமாக நீர் துவா என்னும் பரிசுத்தமான பள்ளத்தாக்கில் இருக்கிறீர் என்று அல்லாஹ்ற வசனத்தில் கூறுவதால் நீங்கள் கூறினது பொய்யாகவும். நான் கூறினது மெய்யாகவும் ஆயிற்று. அல்லாஹ்ற ஒளியாயிருக்கிறார் என்றும் அல்லது மாடத்துக்குள் வைக்கப்பட்ட விளக்குப் போல இருக்கிறார் என்றும் 24:35ம் வசனம் கூறுவதிலிருந்து அல்லாஹ்றவிற்கு ஒரு இடமும், ஒளியும், முகமும் இருப்பதாக அல்லவா நாம் நம்ப வேண்டியதிருக்கிறது! ஆனால் எந்த முஸ்லீமும் இதை ஏற்றுக் கொள்ளார்.

இரண்டாவதாக, அன்புள்ள எனது முஸ்லிம் சகோதரனே, நீர் திரித்துவத்தை (மூவரும் ஒருவராக இருப்பதை) நம்பவில்லை. ஏனென்றால் அதனை நிரூபிக்கவும். விளக்கவும் முடியாது என்று கூறுகிறீர். ஆனால் நீவிர் மறந்து விடுகின்றது என்ன வென்றால்.

யூதர்களுடனும், கிறிஸ்தவர்களுடனும் சேர்ந்து வேறு அநேக கொள்கைகளை நிரூபிக்க முடியா விட்டாலும் முஸ்லிம்களாகிய நீங்களும் நம்புகிறீர்கள். காபிர்கள் அல்லது அவிசுவாசிகள். நீர் விசுவாசிக்கும் இந்தக் கோட்பாடுகளில் ஒன்றையாவது நிரூபிக்கும்படி சவால் விட்டால், உம்மிடம் போதுமான ஆதாரங்களும், நிரூபணங்களும் கிடையாதே!

முஃமின்கள் (விசுவாசிகள்) ஒவ்வொருவரும் ஒன்றுமில்லாமையிலிருந்து வானங்களையும் பூமியையும், சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் அவைகளில் உள்ள யாவையும் இறைவனாகிய தேவன் சிருஷ்டித்தார் என்று விசுவாசிக்கிறார். மேலும் ஆறு நாட்களில் பூமியிலுள்ள சகல உயிரினங்ளையும் தம்முடைய வார்த்தையின் வல்லமையினால் படைத்தார் என்றும் விசுவாசிக்கிறார். மேலும் அப்போஸ்தலர்களும் நபிகளும் செத்துப் போனவர்களை உயிரோடு எழுப்பியும், முடக்கு வாதங்களும் வேறுபல தீராத நோய்களும் கொண்டோரை குணமாக்கியும், மற்றும் பல அற்புதங்களைச் செய்துமிருக்கிறார்கள் என்று ஒவ்வொரு விசுவாசியும் நம்புகிறார். இத்துடன் நில்லாது மறுமை நாளில் அல்லது உயிர்த்தெழுதலின் காலையில் ஆதமின் சந்ததி யாரான எல்லா மனிதர்களும் உயிரோடெழுப்பப்படுவார்கள் என்றும் விசுவாசிகளாகிய நாமெல்லாரும் நம்புகிறோம். துஷ்ட மிருகங்களுக்கு இரையாகி இருந்தாலும் சரி, பெரிய மீன்கள் விழுங்கியிருந்தாலும் சரி, தீக்கிரையாயிருந்தாலும் சரி அல்லது புழுக்களும், கரையான்களும்

பிணங்களைத்தின்று விட்டிருந்தாலும் சரி, மரித்தவர்கள் எப்படி மரித்து உருக்குலைந்து அழிந்து போயிருந்தாலும் சரி, எல்லா மனிதரும் மறுமை நாளில் உயிரோடு எழும்புவார்கள் என்றும், தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்க பலனைப் பெற்றுக் கொள்ளும் படி, இறைவனின் நியாயசனத்திற்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும் நம்புகிறோம் அல்லவா?

இதற்கெல்லாம் என்ன ஆதாரந்தருவீர்? எவ்வாறு நிரூபிக்க போகிறீர்? இவற்றை எல்லாம் மறுதலிக்கிற நாத்திகர்களுக்கும் சவாலிடுகிற காபிர்களுக்கும் என்ன பதில் கொடுப்பீர்? தர்க்கரீதியாகவோ, அறிவியல் முறையிலோ அல்லது உமது மூளை ஞானத்தை எல்லாம் பயன் படுத்தியோ பகுத்தறிவுக்குகந்த முறையில் பதில்கள் நல்குவீரோ? இவையெல்லாம் நம்பிக்கைக்கும் பாத்திரமான வேத சாஸ்திரம் கோட்பாடுகள் என்று பதில் இருப்பதைத் தவிர,வேறு வழியின்றி, வாயடைத்துப் போயிருப்பீர் என்பது என்னைவிட உமக்கு நன்றாகத் தெரியும்.

அல்லாஹ் அல்லது கடவுள் இருக்கிறார் என்றும் அவர் மீது அன்பும், நம்பிக்கையும் விசுவாசமும் உடையவராக இருக்கிறீர். ஆனால் அவர் யார்? எங்கிருக்கிறார்? என்று நான் உம்மிடம் கேட்டால் நான் மறுத்துரைக்க முடியாத புரிந்து கொள்ளக் கூடிய விடையை உம்மால் அளிக்க முடியாது. உமக்கு ஆத்துமா, ஆவி இருப்பதாக நம்புகிறீர். ஆனால் அது என்ன? எங்கே வசிக்கிறது? எத்தன்மையுடையது? என்பதில் உமக்கும் எனக்கும்

அறிவீனம் இருக்கிறதல்லவா? அல்லது நமது மூளையும் மனதும் எவ்வாறு வேலை செய்கின்றன என்று எந்த விஞ்ஞானியாலும் விளக்கிக் கூறமுடியாது. அது மாத்திரமல்ல பரிணாமப் பொருட்களின் உண்மையான தன்மை என்ன என்று எவருக்கும் தெரியாது; ஆனால் அவற்றின் குணநலன்களையும், பலாபலன்களையும் அறிந்து அவற்றைப் பயன் படுத்திவருகிறோம் என்பது எல்லா அறிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ள உண்மையாகும். புலனாகும் பொருட்களையே நாம் முழுவதுமாக அறிய மாட்டோமென்றால், புலனாகாத சக்திகளாக உயிர், ஒளி, மின்சாரம், புவியீர்ப்பு சக்தி ஆகியவற்றை ஓரளவு பயன் படுத்துகிறோமே அன்றி, மற்றப்படி அவைகளைக் குறித்து அறிவிலிகளாகவே இருக்கிறோம்!

இவ்வாறு அநேக விசுவாசப் பிரமாணங்களையும், நம்பிக்கை கொள்கைகளையும் யூதர்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களுமாகிய நாம் பொதுவாக வைத்திருக்கிறோம். யூதர்கள் தவ்றாத்தின் மீது நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் வைத்திருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் தவ்றாத் மற்றும் இன்ஜீலின் அதிகாரத்துக்கு அடங்கியிருக்கின்றனர், அவ்வாறே அதிகாரத்துக்கு குர்ஆனின் மீது பற்றுடையோராயிருக்கின்றனர். இவ்வாறிருக்க, புரிந்து கொள்ளமுடியவில்லை, நிரூபிக்கவும் முடியாது என்று முகாந்தரத்திற்காக திரித்துவப் போதனையை நிராகரிப்பது தகும் என்றால், மற்றெல்லா கொள்கைகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் அதே கதிதானே ஏற்படும்! இருக்கிறவராகவே தேவன் இருக்கிறார், நித்திய

வாசியாக, தம்மில் தாமே ஜீவன் உள்ளவராக இருக்கிறார், மாறாதவராக இருக்கிறார். எல்லாவற்றிருக்கும் ஆதிகாரணராக இருக்கிறார், எல்லாவற்றையும் எப்பொழுதும் அறிந்தவராக, மறக்காதவராக, எங்கும் நிறைந்தவராக இருக்கிறார் என்ற நம்பிக்கைகள் வலுவிழந்து போகுமல்லவா!

தேவனானவர் தன்மையில் ஒன்றாக இருந்தாலும், மூவராக இருக்கின்றார். அவருடைய சுபாவத்திலும் குணாதிசயங்களிலும் அகில லோகங்களிலும் சரி இவர் நிகரில்லாதவராயிருக்கிறார்; அவருடைய சிருஷ்டிப்புகளுக்கெல்லாம் மேலானவராக இருக்கிறார். ஒரே தன்மை கொண்டவரில் மூன்று ஆள்த்தத்துவங்கள் இருப்பது இயலாதகாரியம் என்று தர்க்கமிடுகின்றனர். ஆனால் இவ்வாறு வாதிடுவதற்கு ஆதாரமில்லை எனவும், சிருஷ்டிக்கப்பட்ட, பாவத்தினால் கெட்டுப் போன நமது அற்பமான அறிவாற்றலைக் கொண்டு இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை, இப்படியிருக்க இயலாது என்று முடிவு செய்வதில் அர்த்தமில்லை! திரித்துவத்தில் உள்ள மூன்று ஆட்களும் ஒரே தன்மையும் சுபாவமும், சிந்தையும், செயலும் உடையவர்களாயிருப்பதால் ஒருமையில் பன்மை இருப்பதாக கூறுவது இலகுவான காரியமே. மேலும் நாம் ஜடப் பொருட்களைப் பற்றி பேசாமல் ஆவிக்குரிய தன்மையை மட்டும் ஆராய்கிறோம். பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவராகிய மூன்று ஆட்களும் ஒரே தன்மையுடையவர்களாக, ஒரே சித்தமும் செயலும்

உடையவர்களாக இருப்பதால் அவர்களைப் பிரிக்கவும் முடியாது.

இதன் பொருளென்னவென்றால் பிதாவும் தேவன், குமாரனும் தேவன், பரிசுத்த ஆவியானவரும் தேவன் ஆகிலும் மூன்று தெய்வங்கள் அல்ல எனவும்; அதே நேரத்தில் பிதா குமாரன் அல்ல, குமாரன் பரிசுத்த ஆவியும் அல்ல என ஒருவர் மற்றொருவர் ஆகிவிடவில்லை என்றும், மூவரும் சேர்ந்த ஒரே தேவனாக இருக்கிறார்கள் என்றும் அறிந்து கொள்ள வேண்டும். எனினும், இதை விளக்குவதற்கு மனித வார்த்தைகளும் உவமைகளும் அறவே போதாதென்று தீர்மானிக்கிறோம்.

எனது அன்பான முஸ்லிம் நண்பரே! தேவன் திரியேகத்துவமாக இருக்கிறார் என்று அவரும் நாங்களும் கூறுகையில் இது அறியாமையினாலோ அல்லது துணிகரமாகவோ அல்லது அல்லாஹ்விற்கு இணைகற்பிப்பதற்காகவோ அல்லது விக்கிரக ஆராதனைக்கு வழி நடத்துவதற்காகவோ அல்ல என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். சரித்திர உண்மைகளை வரலாறு, நூல்கள், தொல்பொருள் மற்றும் புதைபொருள் ஆராய்ச்சிகளினாலே நிரூபிக்கலாமே தவிர, வேதியியல் இயற்பியல் அல்லது அறிவியல் உதவியுடன் கண்டு பிடிக்க முடியுமா? மகா அலெக்ஸாண்டரின் வாழ்க்கையையும், சாதனைகளையும், அவரது முடிவினையும் ரசாயன ஆய்வு கூடத்திலோ அல்லது தர்க்க சாஸ்திரத்தின் உதவியுடனோ நிரூபிக்க முற்படுகிறவரை நீர் என்னவென்று கூறுவீர்! இதிலிருந்து பெறப்படும் உண்மை

என்ன வென்றால் அதனதனை, சம்பந்தப்பட்ட முறையில்தான் அணுக வேண்டும் அல்லது சோதித்துப் பார்க்க வேண்டும். கணிதத்தில் உள்ள தேற்றங்களை கணித முறையிலும், இயற்கணிதத்தை அதன் முறைப்படியும், வான சாஸ்திர பிரச்சனைகளை அதன் ஒழுங்குப்படியும் மதசம்பந்தமான சிக்கல்களை வேத சாஸ்திரங்களின் மூலமாகவும் நாம் தீர்வு காண வேண்டும் என்று பொது அறிவே நமக்கு போதிக்கவில்லையா? இது தான் மெய்யான அறிவியல் ஆராய்ச்சி (Sceientific Method) ஆகும்.

ஆதலால் திரித்துவத்தைப் புரிந்து கொள்ளுவதில் நமக்குள் வழக்கும், பெரிய இடைவெளியும் இருப்பது போல தோன்றினாலும் அடிப்படையில் நாம் ஒருமித்த கருத்துள்ளவர்களாக வேயிருக்கிறோம். தேவன், அவருடைய வார்த்தை, அவருடைய பரிசுத்த ஆவி ஆக மூன்று இருப்பதாக கூறுகிறீர்கள். ஆனால் நான் சொல்லுகிறேன்: பிதா குமாரன் பரிசுத்த ஆவி மூவரும் ஒரே தேவனாக இருக்கிறார். பெண்கள் 4:171 ஆம் ஆயத்தில் "ஆகையால் அல்லாஹ்வைக் கொண்டும் அவருடைய ரஸுல்களைக் கொண்டும் ஈமான் கொள்ளுங்கள்; (தெய்வங்கள்) மூன்று என்று கூறாதீர்கள்; அவ்வாறு கூறுவதைவிட்டு விலகி கொள்ளுங்கள்; அது உங்களுக்கு மிக நன்மையாக இருக்கும்; நிச்சயமாக அல்லாஹ் ஒரே நாயன்தான்; கடவுளுக்கு அவருடைய வார்த்தையும், ஆவியும் இருக்கிறது என்று நம்புகிறோம்; அவர் தம்முடைய வார்த்தையோடும் ஆவியோடும் கூட ஒன்றாகவே இருக்கிறார். தேவனிடத்திலிருந்து பிறப்பதெல்லாம் தோன்றுவதெல்லாம்

தேவனாகவே இருக்கிறது என்று நீங்கள் கூறுவதில்லையா? அப்படியானால் தேவனிலிருந்து புறப்படுகிற வார்த்தையும், ஆவியும் தேவத்தன்மையுள்ளதாகவே இருத்தல் வேண்டும். ஆதலால் தேவ வார்த்தையாகிய குமாரனும் எல்லா தெய்வீகப்பண்புகளும் உடையவராக நித்திய நித்தியமாக இருக்கிறார். அங்ஙனமே தேவ ஆவியானவரும் தேவனுடன் கூட்டாளியாக நித்திய நித்தியமாக இருக்கிறார். இந்த சத்தியத்தை வெளிப்பாடாக அறிந்து கொள்வதற்கு தேவன் உமக்கு உதவி செய்யும்படி அவரிடம் பிரார்த்திக்கிறேன்.

## எட்டாவது விரிவுரை

# பாரக்லீட்டும் முஹம்மதுவும்

நமது முஸ்லிம் அன்பர்கள் தங்களது முஹம்மது நபியின் பெயர் இன்ஜீலில் அறிவிக்கப்பட்டுள்ளதாக உரிமை பாராட்டுகின்றனர். இதற்கு ஆதாரமாகவும் சான்றாகவும் பின்வரும் குர்ஆனின் வசனத்தை மேற்கோள் காட்டுகின்றனர். “இன்னும் மரியமுடைய புதல்வர் ஈஸா இஸ்ராயீலுடைய மக்களே! நிச்சயமாக நான் உங்களின் பால் அனுப்பப்பட்ட அல்லாஹ்வுடைய ரஸுலாக இருக்கின்றேன் எனக்கு முன்னுள்ள தவ்றாத் வேதத்தை உண்மைப் படுத்துகிறவனாகவும் எனக்குப் பின்னால் வரபோகின்ற ரஸுலைப்பற்றி அவருடைய பெயர்அஹ்மது நற்செய்தி சொல்கிறவனாகவும் இருக்கின்றேன்” (அணிவகுப்பு *ஸூரா* 61:6)

இங்கு அஹ்மது என்ற பதமும் கிரேக்க மொழியில் பாரக்லிட் என்று நற்செய்தி நூலில் அழைக்கப்படுகிறபதமும், ஒரே பொருளை தருகிறதாக இருக்கின்றன. அதாவது. புகழப்படத்தக்கவர் என்றும்; அரபிய மொழியில் அஹ்மதுவும் முஹமதுவும் ஒன்றுதான் என்கின்றனர்.

இப்பொழுது இந்த வசனம் நற்செய்தி நூலில் காணப்படவில்லை என்றும், அது மறைக்கப்பட்டு விட்டதாகவும் சிலர் குற்றம் சாட்டுகின்றனர் ஆனால் முஹமது நபியின் காலத்தில் எப்படியிருந்ததோ அப்படியே இன்று வரையும் கிரேக்க மொழியில் உள்ள இன்ஜீல் இருக்கிறது.

இவ்வாறிருப்பினும் கிரேக்க மொழியில் உள்ள இந்த வார்த்தையை குர்ஆன் தவறாக அர்த்தப்படுத்திக் கூறுகிறது. கிரேக்க மொழியில் **ஹப்பக்கஹோட்டி** HAPAKAHTOE என்றிருக்கிற வார்த்தையை **ஹெய்ப்பகஹோட்டி** HAPAKAHTOE என்று திரித்துக் கூறுகிறது. இதே வார்த்தை இலத்தீன் மொழியில் **பாரக்ளிட்டோஸ்** PARACLETOS என்று சரியான அர்த்தத்தில் இருக்க வேண்டுமே தவிர பெரிக்குளுட்டோஸ் (PERICLUTO'S) என்றிருத்தல் கூடாது. பாரக்ளிட்டோஸ் என்றால் தேற்றரவாளன் என்றும் பெரிக்குளுட்டோஸ் என்றால் புகழ்பெற்றவர் அல்லது புகழப்படத்தக்கவர் என்றும் பொருளாகும்.

பாரக்லீட்டோஸ் என்ற பதம் நற்செய்தி நூலில் இருந்தபடியே இருக்கின்றது; எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்றும் அறிதல் வேண்டும். ஆனால் இது குர்–ஆனில் குறிப்பிட்டிருக்கிறபடியும், நமது முஸ்லிம் சகோதரர்கள் இதைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்வதும் ஏற்புடையதா என்பதைச் சற்று சிந்திப்போம்.

1. நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும் படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு

தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள், (யோவான் 14:16,17)

2, பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார், (யோவான் 15:26)

3. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார், (யோவான் 16:7,8)

4. அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: "யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான் நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியானவராலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டு போகாமலும் என்னிடத்திலும்

கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" என்று கட்டளையிட்டார் (அப்போஸ்தலர் 1:4,5).

5. பெந்தேகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்கள் எல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள் அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து சேர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (அப்போஸ்தலர் 2;1-4)

முதலாவதாக கிறிஸ்துவே தம்முடைய சீஷர்களின் குருவாக இருந்து வந்தார் என்பது தெளிவாகிறது. அவர்களுக்கு வழிகாட்டியாகவும், ஆதரவளிக்கிறவராகவும், ஆறுதல்படுத்து -கிறவராகவும், காவலராகவும் இருந்தபடியால், அவர்கள் அவரை ஒட்டிக் கொண்டார்கள். தம்முடைய முன்னறிவிப்பின்படியே தாம் அவர்களை விட்டுப்பிரியும் காலம் சீக்கிரம் நேரிடும் என்றும் அது அவர்கள் உள்ளங்களை உடைக்குமென்றும் அறிந்திருந்தார். அவர் சென்றபிறகு அவர்களுக்கு பரலோக உதவியும், சகாயமும், நடத்துதலும், ஆறுதலும் மிகவும் தேவை என்பதை உணர்ந்திருந்தார். இக்காரணத்தை முன்னிட்டே தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக

வாக்களித்திருந்தார் என்பதை மேற்கண்ட வசனங்கள் சாட்சிப்படுத்துகின்றன.

இங்கு வாக்களிக்கப்பட்டவர் இஸ்லாம் மதத்தின் ஸ்தாபகரான முஹம்மது நபியை குறிக்காது என்ற உண்மையை இப்பகுதிகளை ஆராய்ந்து பார்ப்பதின் மூலமும் அவற்றிலிருந்து தெரிவிக்கப்படும் காரணங்களின் மூலமாகவும் வெள்ளிடை மலையெனத் தெரிந்து கொள்ளலாம்.

முதலாவதாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சத்திய ஆவியானவர் மாம்ச சரீரத்தில், புலனாகும் விதத்தில் வெளிப்படமாட்டார். ஏனெனில், உலகம் அவரை அறிந்து கொள்ள முடியாது என்ற அடையாளங்களை இயேசு கிறிஸ்து ஏற்கனவே கூறியிருந்தார். ஆனால் இந்த வர்ணனைகளில் ஒன்றாகிலும் முஹம்மதுவுக்குப் பொருந்தாது ஏனெனில் முஹம்மது உலகப்பிரகாரமான பெற்றோருக்கு பிறந்த மகனாகவும், ஒரு சரீரத்தை உடையவராகவும், முஃமின்களும், காபிர்களும் கலந்த உலகமானது அவரைக் காணக்கூடியவராக வந்தார்.

இரண்டாவதாக, கிறிஸ்துவினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் சீஷர்களுடன் எப்பொழுதும் இருக்கும் படியாக வந்தார். இந்தக் குறிப்பும் முஹம்மதுவின் விஷயத்தில் உண்மையாகாது: ஏனெனில் முஹம்மது கிறிஸ்துவின் சீஷர்களின் காலத்திலும் வரவில்லை; வந்த பின்னரும் நிரந்தரமாக உலகத்தில் இருக்கவில்லை.

மூன்றாவதாக, வாக்குப் பண்ணப்பட்டவர் அந்த வேளையிலேயே சீஷர்களுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது "அவர் உங்களுடனே வாசம் பண்ணுகிறார்". இதுவும் முஹம்மது நபியின் விஷயத்தில் எள்ளளவேனும் பொருந்தாது. ஏனெனில் எந்த வேளையிலும் அதற்குப் பின்னரும் அவர் சீஷர்களுடன் இருந்தாரில்லை.

நான்காவதாக, கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் (தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக) காத்திருங்கள் என்று கட்டளை இட்டிருந்தார். சீஷர்கள் (குருவுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று முஸ்லீம்கள் நினைக்கிறபடியே) கிறிஸ்துவின் சீஷர்கள் பத்து நாட்கள் எருசலேமில் கீழ்ப்படிதலுடன் காத்திருந்தபொழுது தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வந்து அவர்கள் ஒவ்வொருவரையும் நிரப்பினார். இது எந்த விதத்தில் முஹம்மது நபிக்கு ஏற்கும்? முஹம்மது வரும்வரை காத்திருக்க வேண்டுமானால் அவர்கள் 600 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருக்கத் தேவைப்படும் அல்லவா! அவர்கள் எத்தனை காலம் உயிர் வாழ முடியும்? தாம்போன உடனே சீக்கிரமாக அவரை அனுப்புவேன் என்று கிறிஸ்து கூறவில்லையா?! அப்படியில்லாத பட்சத்தில் அவர்கள் செத்துப் போனபின், வருகிறவரால் அவர்களுக்கு என்ன ஆறுதல்? "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப்போஸ்தலர் நடபடிகள் 1:5) என்று துரிதமாக

நிறைவேறப் போகிற நிகழ்ச்சியினால் அவர்களை தைரியப்படுத்தினார்.

ஐந்தாவதாக, இங்கு கூறப்பட்டுள்ளபடியே, கிறிஸ்துவானவரல்லவா பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். முஸ்லிம்களின் விளக்கம் உண்மையானால் கிறிஸ்துதான் முஹம்மது நபியை அனுப்பினார் என்று முஸ்லிம் சகோதரர்கள் ஏற்றுக் கொள்வார்களா? நிச்சயமாக அதனை அங்கீகரிக்க மாட்டார்கள்! அப்படி ஆமோதித்தால், கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தை கேள்வியின்றி அவர்கள் நம்புகிறார்கள் என்று ஆகும். அல்லாஹ்வின் ரஸூலாகிய முஹம்மது அப்படி உரிமை பாராட்ட வில்லையே! என தருமைச்சகோதரர்களே, இவற்றையெல்லாம் சற்றே சிந்தித்து பார்ப்பீர். தம்முடைய சீஷர்களை சத்தியத்திலும் ஜீவ வழியிலும் நடத்துவதற்காக கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உறுதுணையாய் இருக்கும்படி அனுப்பின அதே பரிசுத்த ஆவியானவரை என்னுடைய முஸ்லிம் நண்பருக்கும் கொடுக்க வேண்டும் என்றும், அவருடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்தருள வேண்டும் என்றும் சரியான சத்தியத்திலும் ஜீவ வழியிலும் நடத்திட வேண்டும் என்றும், மதிப்பு மிக்கவைகளுக்கும், மதிப்பில்லாதவைகளுக்குரிய வேறுபாட்டை அவர் கண்டு கொள்ள வேண்டும் என்றும் கடவுளை இறைஞ்சி மன்றாடுகிறேன்.

# முடிவுரை

இந்த ஆய்வுக் கண்ணோட்டத்தினின்று, பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், இருதயம் சுத்திகரிக்கப்படுவதற்கும், இயேசு கிறிஸ்துவில் மட்டுமே அன்றி வேறொரு வழியுமில்லை என்பதைக் கண்டு கொண்டீர். இந்தப் பெரிதான இரட்சிப் படைவதற்குரிய வழியை தவ்றாத் இன்ஜீல் என்ற பைபிள் மட்டுமே காண்பிக்கிறது என்பதையும் அறிந்து கொண்டீர். கிறிஸ்துவத்தைத் தவிர வேறெந்த மதமும் கடவுளுடைய நீதியையும் இரக்கத்தையும் ஒன்று சேர்க்கவில்லை, சமாதானப்படுத்தவில்லை எனவும்; கிறிஸ்தவமே மனுக்குலத்தை மீட்டுக் கொள்ளத்தக்கதாக கடவுளின் அன்பைப் பிரதிபலிக்கிறதென்றும் உறுதிப்படுத்திக் கொண்டோம். இந்த நல்ல, அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தேவ இரக்கத்தையும், இரட்சிப்பையும் உமக்குச் சொந்தமாக்கிக்கொள்வீராக; ஏனென்றால் இப்பொழுதே கிருபையின்காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்.

இந்த விரிவுரைகளின் நோக்கம், இதை வாசிப்போர் சத்தியத்தை அறியவும், அனுபவமாக்கிக் கொள்ளவும் அதனால் மகிழ்ச்சியும் சந்தோஷமும் பெற்றுக் கொள்ளவும் வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். அன்புள்ள முஸ்லிம் சகோதரனே,சத்திய சோதனை செய்து கொண்டிருப்பவராகிய உமக்கு, கடவுள் தமது பரிசுத்த ஆவியானவரைத் தந்தருளி, உமது மனக்கண்களை பிரகாசமுள்ளதாக்கும்படி கடவுளிடம் வேண்டுதல் செய்கிறேன். நீர் நாள்தோறும் தொழும்போதும்,

பிரார்த்தனை செய்யும்போதும், நீர் நேரான, சீரான,மேலான ஜீவவழியைக் கண்டு கொண்டு, கிரியைகளில்லாமல், கிருபையாகக் கிடைக்கும் இயேசு கிறிஸ்துவிலுள்ள இலவச இரட்சிப்பைப் பெற்று முடிவேயில்லாத பரலோக பாக்கியத்தைப் பெற்றானந்திக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

## குறுங்கேள்விப்போட்டி

1. கிறிஸ்தவத்தில் பரிசுத்த வேதாகமத்தின் பங்கு என்ன?

2. பைபிளை நம்பாத இஸ்லாமியரைக் குறித்து குர்ஆன் தீர்ப்பளிப்பது என்ன?

3. முஹம்மதுவின் காலத்திலும், பின்னரும் தவ்றாத், இன்ஜீலைப்பற்றிய குர்ஆனின் சாட்சியை எடுத்தியம்பும் ஒரு வசனம் குறிப்பிடுக.

4. தவ்றாத், இன்ஜீலின் நிலை மாறா உண்மை அறிவுத்திறனால் எவ்வாறு நிரூபிக்கப்படுகிறது.

5. வேதம் (பைபிள்) மாற்றப்பட்டது. கெடுக்கப்பட்டது என்று? தர்க்கிப்போர் எப்பகுதிகள் மாற்றப்பட்டுள்ளன, அதன் காரணம் நோக்கம் என்ன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனரா?

6. நாகூம் எதனைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தார்? அவரும், ஏனையோரும் கூறின தீர்க்க தரிசனங்கள் நிறைவேறியுள்ளனவா?

7. தவ்றாத், இன்ஜீலின் பிழையற்ற, குறையற்ற தன்மைக்கு புதைபொருள் ஆய்வு அளிக்கும் ஓரிரு சான்றுகள் எவை?

8. அழிந்து போன நினிவே பட்டணத்தின் இடிபாடுகளினின்று ஸ்மித் அறிஞர் கண்டு பிடித்தது என்ன?

9. பரிசுத்த வேதாகமத்தின் பழமையான கைப்பிரதிகளின் பெயர்கள் குறிப்பிடுக.

10. பைபிள் ரத்தாகிவிட்டது என்ற கற்பனையை மறுக்கும் ஒருகுர் ஆன் வசனம் தருக.

11. தேவன் ஆதாம்–ஏவாளைச் சிருஷ்டித்தபொழுது அவர்களிருந்த நிலைமை என்ன?

12. மனுக்குலம் வழி தவறிக் கெட்டுப்போயுள்ளது என்று பைபிள் தீர்ப்பளிப்பதை ஆதரிக்கும் குர்ஆன் குறிப்பு ஒன்று கூறுக.

13. நபிகளும், ரஸூல்களும் பாவத்தில் விழுந்தவர்கள் என்பதற்கு ஆதாரம் உண்டோ?

14. தேவ நீதியின்படி பாவிகளுக்குக் கிடைக்கவேண்டியது என்ன?

15. பலிகள் எல்லாம் எவரைச் சுட்டிக் காண்பிக்கின்றன? யாருக்கு அடையாளமாக இருக்கின்றன.?

16. கிறிஸ்துவின் மரணத்தை குர்ஆனின் வெளிச்சத்தில் எவ்வாறு உறுதிப்படுத்துகிறீர்?

17. கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு சரித்திர உண்மை ஏதாகிலுமுண்டா?

18. மற்றெல்லா மனிதர்களையும், தீர்க்கதரிசிகளையும் விட எவ்வாறு கிறிஸ்து மேன்மை உடையவர்?

19. அப்போஸ்தலர் நடபடிகள் 4:12 கிறிஸ்துவைப் பற்றி விளம்புவது என்ன?

20. திரித்துவக் கோட்பாட்டைப் பற்றி உம்மிடம் விசாரிப்போருக்கு என்ன பதில் கூறுவீர்?

21. இந்நூலின் கருத்துரையை நினைவில் கொள்ளும் வகையில் இரண்டே வரிகளில் சுருக்கிக் கூறுவீராக.

உமது விடைகளை எழுதி அனுப்பும் பொழுது உமது முகவரியையும் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். 15 கேள்விகளுக்குச் சரியான விடை அளித்திருப்பீரனால், மற்றும் ஒரு நூலைப் பரிசாக அனுப்புகிறோம்.

மதிப்பிற்குரிய வாசகரே! இந்தப் புத்தகத்தை வாசித்தபின் உங்களுக்கு உண்டாகும் மனஎழுச்சிகளை, விருப்பங்களை கீழ்காணும் விலாசத்திற்கு உங்கள் முகவரியுடன் எழுதி அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறோம். உங்களுடைய கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதில் எழுத, ஆவலுடன் காத்திருக்கிறோம். உங்களுக்கு உதவி செய்வதில் எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியுண்டு.

# எமது பிற வெளியீடுகள்

1. என் கேள்விக்கு என்ன பதில்?
2. கிறிஸ்து இஸ்லாமில் – அப்துல் ஃபாதி
3. வேதாகமத்தின் தூய்மை (குர்–ஆன், ஹதீஸின் அடிப்படையில்)
4. நான் ஏன் கிறிஸ்தவனானேன்? மௌலவீ சுல்தான் முஹம்மது பால்
5. கலாநிதி மௌலவி இம்மத் உத்தீன் லாஹீஸ் போதகரின் வாழ்க்கைச் சுருக்கம்
6. இல்லை! இல்லை! இல்லை! இயேசு கிறிஸ்துவின் மார்க்கம் இரத்து செய்யப்படவில்லை – இஸ்கந்தர் ஜதித்
7. நற்செய்தியின் உண்மையினை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?– இஸ்கந்தர் ஜதீத்
8. இஸ்லாமிலும் கிறிஸ்துவத்திலும் பாவமும் நிவாரணமும் – இஸ்கந்தர் ஜதீத்
9. தேவன் நித்திய ஜீவனுக்காக என்னை தெரிந்துக் கொண்டார் – ஹம்ரன் அம்ப்ரி
10. சிந்திப்போருக்கு சில முத்துக்கள் – நிக்கொலா யாக்கூப் காபிரியல்
11. ஈஸா சிலுவையில் அறையப்பட்டாரா?
12. தவ்றாத்தையும் இன்ஜீலையும் உறுதிப்படுத்தும் குர்–ஆனின் சாட்சி
13. திருத்தம்
14. தேவன் நமது பரலோக பிதா
15. சிலுவையின் பொருள்
16. பிழையற்ற வேதாகமம்
17. தேவன் மாம்சத்தில் தோன்றினாரா?
18. உறுதியைத் தேடி – கெ.கெ.அலவி